மலர் 3. ரிஜிஸ்டர் நெ. M. 3157.

# சிவ பக்தன்.

மாதவெளியீடு

பவ-வருஷம் ஐப்பசித்-திங்கள்

வாதுளாகம சுலோகம்

பிரஹ்ம விஷ்ணு சுரேசாதி தேவதா: பரயாமுதா

தாரயந்த் பளிகாக்ரேஷு சிவலிங்கந்து சாதரம்




பத்திராதிபர்:

வை. செ. குருசாமி ஐயர்,

குகை, சேலம்.

# வேண்டுகோள்.

ஆஸ்திக சிகாமணிகளான சிலபக்தர்களாயுள்ள பிரதியொருவரும் இப்பத்திரிகையை ஆதரிக்க வேண்டியது மானிடர்களின் முதற் கடமையும், முக்கியகடமை (பிரதான் முறைமை) யாகும். ஆகையாலிந்தக்கண்ணுறும் அன்பர்கள் ஒவ்வொருவரும் வருட சந்தா ரூ. 1—8—0 மணியார்டர் செய்து சந்தாதாரராகச்சேர வேணுமாய் அன்புடன் விண்ணப்பம் செய்துக்கொள்ளுகிறேன்.

பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதால் அதிக செலவும், வீண் சிரமமுமேற்படுகிறபடியால்அன்பர்கள் வருடசந்தா ரூ 1-8-0 முன்னதாகவே மணியார்டர் செய்தனுப்பவேண்டியது.

நம்ம பொருளானது பலவழிகளிலும் சிலவழிந்து விடுவது சஹஜமாயிருக்கிறது. ஆகையாலிப்படிப்பட்ட அறிவிற்குணவாகிய இப்பத்திரிகைக்கு சிலவிடுதல் சாலச்சிறந்ததென அறிஞர்கள் கூறுவர். இதிலுள்ள விஷயங்கள் ஆழ்ந்த(உட்)கருத்துடையவைகளாகையால் ஒருமுறை வாசித்து விட்டுவிடாமல் சாவகாசமுள்ளபோது பலதடவைகளிலும் படித்தால் விஷயங்கள் மனதுக்கு நன்கு புலப்படும். (மிருதியாக விளங்கும்)

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடமொன்றுக்கு தபாற் கூலியுள்பட | இந்தியா, பர்மா, சிலோன், முதலான உள்நாடுகளுக்கு | ரூ. 1—8—0 |
| " " | பினாங்கு, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, முதலான வெளி நாடுகட்கு | ரூ. 2—8—0 |
| தனிப் பிரதி | ... ... ... 1-க்கு | 0—2—0 |
| ,, | மலாய் நாடுகட்கு 15-காசு அல்லது | 0—3—0 |

ஒரு வருடத்திற்கு குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆவணி மாதமுதல் கணக்கு வைத்து ஆவணி மாதசஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும்

பத்திரிகையை வி. பி. போஸ்டில் அனுப்புவதில்லை. ஆகையால் சந்தா தொகையை மணியார்டர் செய்தனுப்பவேண்டியது.

## விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| உள்பக்கம் ஒன்றிற்கு 1-மாதத்திற்கு | ரூ. 5—0—0 |
| அரைப்பக்கத்திற்கு | ரூ. 3—0—0 |
| கால் பக்கத்திற்கு | ரூ. 1-12—0 |

நீடித்த விளம்பரத்திற்கு எழுதி தெரிந்துக்கொள்ளவும்.

பத்திராதிபர்

**வை. செ. குருசாமி ஐயர்,**

குகை, சேலம்.





ஸ்ரீ ஜகத் குரு பஞ்சாசார்யேப்யோ நம:

# நேயர்களுக்கோர் விஞ்ஞாபனம்.

**சத்** பக்த சிரோன்மணிகளான சிவநேயச் செல்வர்களே! பரந்த பாரததேசத்தின் ஒரு பாகமாயுள்ள நம் தென்னிந்தியாவில் சொற்பஜன சங்கையுள்ள ஒவ்வொருசமூஹத் தவருங்கூட தங்கள் தங்கள் சமூஹ முன்னேற்றத்தின் பொருட்டு ஒவ்வொரு பத்திரிகையை சில காலங்களாகப் பிரசுரம் செய்து வந்து மேம்பாடடைந்து வந்திருக்கும் விஷயமானது, சர்வருக்கும், கரதலாமலகம் (உள்ளங்கை நெல்லிக்கனி) போலத் தெரிந்ததாயிருக்கிறது.

வடநாட்டிலுள்ள நம்ம லிங்காயுதர்கள் தங்கள் சமூஹ முன்னேற்றத்திற்காக அநதந்த தேசபாஷைகளில் மைசூர், உட பள்ளி, தார்வடா, ஹாவேரி, பிஜாப்பூர், முதலான நகரங்களில் பிர சுரிக்கப்படும் வார வெளியீடுகள், ஏழும், மற்றும் யாதகிரியில் பிரசுரமாகும், மாதவெளியீடும். பிஜாப்பூரில் பிரசுரமாகும், திரை மாசிக (மூன்று மாதத்திற்கொரு) வெளியீடும், நமக்குத் தெரிந் தவைகளாயிருக்கின்றன. ஆக இப்பத்திரிகைகளை நீண்ட கால மாகப் பிரசுரம்செய்து சமூஹ அபிவிர்த்தி யடைந்திருப்பதானது போற்றத் தக்கதாயிருக்கிறது. வடநாட்டில் நமக்குத்தெரிந்தவரை யில் இத்தனை லிங்காயத பத்திரிகைகளுலாவிக் கொண்டிருக்கவும்

நமது தென்னாட்டிலோவெனின் லிங்காயுதர்கள் பல விடங்களில் பெரும் பான்மையான, ஜன சமூஹமாயிருந்துங்கூட லிங்காயுத மதத்தின் தத்துவங்களையும், லிங்க பூஜையின் விதிமு றைகளையும், மற்றும் நம்முடைய லௌகிக, வைதிக, கருமங்களை யும், இதர மதங்கட்கும் இம்மதத்திற்கு முள்ள பேதா பேதங்களை யும், தெளிவாக எடுத்துரைக்க ஒருபத்திரிகையு மில்லாமலிருந்தத

நம் சமூஹத்திற்கே பெரும் குறையாகவும், அறிவிற்சிறந்த வனேக அன்பர்களின் மனச்சஞ்சலமாயும்சில காலங்களாக இருந்துவந்தது அநேகர்களுக்குத் தெரிந்த விஷயமாயிருக்கிறது. மற்றும்

பரசிவனுடைய இரண்டாவது சொரூபனான சதாசிவனுடைய சிருஷ்டியிலிந்த லிங்கதாரிக ளுற்பவமானதா லிவர்கள் ஊர்த்துவ சிருஷ்டிஜ ரென்றும், அதிவர்ணாஸ்ர மிகளெனவும் நித்திய முக்தரெனவும், சிவாத் வைதரெனவும், பதிகளெனவும், சொல்லப்படுவார்கள் மற்றும்

உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும், இந்த லிங்காயதர் மதமே குருமதமென்றும், மற்றெல்லாரையும்விட லிங்கதாரிகளே பரம பவித்திரரென்றும், இவ்விலிங்கதாரிகளுக்குள் ஜங்கமர்களே சிரேஷ்டரென்றும், இவர்களே மறுபிறவியில்லாத கடைசி ஜென்மத்தவர்களென்றும், மற்றும் ஜங்கமதரிசனமே லிங்க தரிசனமெனவும், ஜங்கமனுடைய பாத தீர்த்தமே அநேக பாவங்களைப் போக்க வல்லதெனவும், ஜங்கமதேவனுடைய பிரசாதமே சகல பாவத்தையும், போக்கி புண்ணியத்தைக் கொடுப்பதெனவும், சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதைப் போல நாமுமிதை வாக்கில் மாத்திரம் சொல்லிக்கொண்டு செய்கையிலில்லாமல் அநுஷ்டான சூன்யராயிருந்தால் "ஏட்டுச்சுரைக்காய்கறிக்குதவா" தென்னும், பழமொழியைப்போல, கேலிக்கிடமாகுமல்லவா. பின்னும் நம்மை உலகத்தவர்கள் மருளர், பித்தரென நினைக்கவும், கூடுமல்லவா. மேலும்,

நாம் நாள்தோறும் அனுஷ்டித்து வரும் பூஜா விதிகளும் மற்றைய புண்ணியாவசன முதலான சுபாசுப எல்லாக்கருமங்களும் சிவகைங்கர்யமாகவே யிருக்கின்றன. கேவலம் லௌகீகமன்று, பின்னையோ வைதீகமாம், இவ்வைதீக கருமங்களினின்றும் நழுவி தென்னாட்டிலுள்ள நம் மதஸ்தர்கள் நாளடைவில் நழுவி வருவதைக்கண்ணுற்றும், மற்றும் பிற மதஸ்தர்க ளனேக அபிவிர்த்தியடைந்திருப்பதைக்கண்கூடாகப் பார்த்தும், கேட்டும்கூட நம்மவர்கள் விழிப்படையாபலிருப்பதால் அயலார்கள் நம்மைப்பார்த்து எள்ளி நகையாடா வண்ணம் நாமனைவரும் இக்ஷணமே ஜாக்ருதர்களாகி நமக்குள் சிலகாலங்களாக வேரூன்றியிருந்து வந்த வகுப்புப்பிளவுகளை நீக்கி லிங்கதாரிகளனைவரும் ஒரே சமூஹத்தவர்களென்றுணர்ந்து ஒருமனப்பட்டனைவரும் வைதீக தற்பராகிப் பரமேஸ்வரனுடைய திருவருளைப்பெற்றுய்யும் பொருட்டு சிவபக்தன் உதித்தானே யல்லாமல் சுயநலத்தையும், லாபத்தை

யும், கௌரவத்தையும், கருதி யல்லவென்றும், மற்றும் சமூஹத் தொண்டே சிவத்தொண்டெனவும், சமூஹசேவையே சிறந்த சேவையென்னும் ஆன்றோர்கள் வாக்கின்படி நீங்களனைவரும் சிவ பக்தன் பத்திரிகைக்கு சந்தாதாரராகச் சேர்ந்து தங்கள் சந்தாத் துகையை மணியார்டர் செய்தனுப்பியது, அல்லது அனுப்புவது டன் சரி, நாம் செய்யவேண்டிய காரியம் முடிந்துவிட்டதென்றிரா மல் பிரதியொருவரும் தங்கள் தங்களாலியன்றவளவு குறைந்த பக்ஷம் இரண்டு மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்து தொகையை அனுப்பவேண்டியது, மற்றும், தங்கள் தங்கள் கிராமங்களில் ஒருநாளொருகூட்டம் சேர்த்து, அக்கூட்டத்தி லிப்பத்திரிகையின் விஷயத்தையும் இதனாலடையும், அபிவிருத்தியையும் அனைவருக்கும் விளங்கும்படியாகத் தெளிவாயெடுத்துச் சொல்லி ஒவ்வொரு பக்தர்களையும் சந்தாதாரராகச் சேர்த்து, சந்தாத் தொகையை வசூலித்து அனுப்பவேண்டியது. நம்சமூஹ அபிவிர்த்திக்காக அன்பர்கள் செய்யவேண்டிய கடமைகளில் முதற் கடமையும் முக்கிய கடமையுமாகும்,

ஆகையால் ஒவ்வொரு பக்த சிகாமணிகளான சகோதர சகோதரிகளனைவரும், இப்பத்திரிகையின் அபிவிர்த்திக்காகத் தங்கள் தங்களாலானமுயற்சிஎடுத்துக்கொள்ளவேண்டுமெனவும்,பிரதி மாதம் வெளியீடுகளையும், ஒருதடவை வாசித்ததே சரியென்றிராமல் சாவகாசமுள்ள போதெல்லாம் பல டதவைகளில் படிக்கவும் விஷயங்கள் நன்கு மனதில் பதியும். மற்றும் முக்கியமான சுலோஹங்களையும், மனனம் செய்துக்கொண்டு இஹபர சாதனங்களை திருத்தமாக நடத்தி கிருதார்த்தர்களாக வேண்டுமெனக் கோருகிறேன். மற்றும்,

அன்புமிக்க அன்பர்களொவ்வொருவரும் ஒவ்வொரு விஷயங்களை வெளியிடும்படி கடிதங்கள் மூலமாகவும் நேரிலும் தெரிவித்துக்கொண்டிருப்பதாலும் குருக்களிலொருவர் காயத்ரி முதலான அதிவிசேஷ ரஹஸ்ய மந்திரங்களைப் பூராவும் வெட்ட வெளியாகப் பிரசுரிக்கலாகாதெனவும் அந்தந்த மந்திரத்தின் தலைப் பெயர் மாத்திரம் சொன்னால் போதுமெனவும் இப்படிப் பலவித கருத்துடையவர்களாயிருப்பதால் இனி இப்பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவருபவைகளானது இதுகாறும் நம்திராவிட பாஷையில் வெளிவராத விஷயங்களாகவே யிருக்கும், அவையாவன ஈஸ்வரபக்தி, குருபக்தி, விஹிதக்கர்மங்களின் அனுஷ்டானக்

கிரமம் லிங்கிப்பிராஹ்மண லக்ஷணம் ஸ்ரீமூலபஞ்சாசார்யர்களால்
ஸ்தாபித்துள்ள மடாலய விபரங்கள், அம்மடாலயங்களின் புரா
தன சரித்திரச் சுருக்கம், அம்மடாதிபதிகளெழுந் தருளியுள்ள
மஹா சன்னிதானங்களின் சரித்திரச் சுருக்கம், அம்மடாதிகளைச்
சேர்ந்த கிளைமடங்களின் விபரங்கள், அம்மடாதிகளிலுள்ளவனேக
ராஜாதி ராஜர்களால் கொடுக்கப்பட்ட தான சாசனங்களின்
விபரங்களும் மற்றும் திரிபுரசம்ஹார காலத்திலுதித்த சிம்ஹா
சனாதிபதிகளுடையவும், அல்லமாப்பிரபு தேவர் பூலோஹத்தில்
திருவவதாரம் செய்த காலத்திலுண்டான சூன்ய சிம்ஹாசனாதீசர்
முதலான குருபீடாதிபதிகளின் திவ்ய சரித்திரச் சுருக்கங்களும்,
மற்றும் கல்யாணி பட்டணத்தின் பிஜ்ஜள ராஜனுடைய பிரதம
அமைச்சராயிருந்த பசவேஸ்வரனுடைய செய்கைகளும். சரித்
திரச் சுருக்கமும். மற்றும் கும்பகோணம் சாரங்கதேவர் மடாலய
விஷயங்களும், தீக்ஷாவிதி, தீக்ஷையின், பலாபலன்கள், ஹோம
யக்ஞ பிரகாரணம் சிவலிங்க மகிமை, இஷ்டலிங்கத்தின் சிரேஷ்ட
த்வம், லிங்காயுதர்களின் விதிமுறைகள், திரிவித லிங்கோபாசனை
லிங்கதாரணவைபவம், லிங்க பூஜையின் தத்துவங்கள், சிவபூஜா
பிரபாவம், சிவயோகம், ஷடங்கயோகம், லிங்கசூத்திர நிர்ணயம்,
புண்ணியா வசனம், விவாஹவிதி, லிங்காயுத மதத்துவவிசால
த்வம், லிங்காயுத மததத்துவ நிரூபணம், லிங்காயுத தர்மவிசால
த்வம், ஸ்ரீரேவண லீலை, மஹாசிவன்ராத்திரி பூஜை, வேதோக்த
சிவபூஜாவிதி, விசேஷ பூஜாவிதிகள், ஸ்திரீதேவதாபூஜா மந்திரங்
கள், சரஸ்வதி பூஜை, பட்டாபிஷேகவிதி, நூதன கிரஹப்பிர
வேசவிதி, வாஸ்து சாந்தி, நவக்கிரஹ சாந்தி, நாமகரணானுஷ்
டானவிதி, அந்தியேஷ்டிவிதி, சமாதிகிரியை. முதலானவைக
ளும் மற்றும், கைலாச பர்வதம், ஸ்ரீசைவ பர்வதம், கேதார
நாதம், பதரீநாதம, காளீக்ஷேத்திரம், ரேவண சித்தகிரி முதலிய
திவ்ய க்ஷேத்திரங்களின் அபூர்வ விருத்தாந்தச் சுருக்கங்களும்,
மற்றும், விதேசங்களிலுள்ள சிவாலயங்களின் வியாபகங்களையும்
சிவசரணனை, சுவாமி தாசிமையனுடைய திவ்விய வசனங்க
ளும், சரித்திரச் சுருக்கமும், பஞ்சாசார்ய பஜனை கீர்த்தனங்கள்
ஸ்தோத்திரங்கள், ஸ்துதிகள், முதலியவைகளும், மற்றும் தேவாதி
தேவர்களுக்கு அத்யந்த பிரீதியானதும், உலகோர்களால் புகழ்
பெற்றதுமான பவுத்திர மூலிகைகளின் அபார சக்திகளையும்,
அவற்றால் உலகினரடையும், மஹோபகாரங்களைம், மற்றும் ஹிந்து
வைத்திய வைபவம், முதலிய பிரதானமான சமஸ்த விஷயங்களும்,
தக்க சாஸ்திரச் சான்றுகளுடன் வெளி வந்துகொண்டிருக்
கும், இவைகளில் சொல், பொருள். குற்றங்களிருப்பின் உலகம்
பொருக்க.

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி:

ந்துகடைசியாக மனிதஜென்மத்திற்கு வருவான். இப்படிப்பட்ட மனுஷ்ய ஜென்மத்தின் முதல் ஜென்மம் சண்டாளஜென்மம், இப்படி சண்டாள ஜன்மத்தில் (100) தடவை பிறந்து பின்பு சூத்திர ஜென்மத்திற்கு வந்து அச்சூத்திர ஜென்மத்திலேயே(25) தடவை பிறந்து மறுபடி வைஸ்யஜென்மத்திற்கு வந்துஅந்தவைஸ்ய ஜென்மத்தில் (16) தடவை பிறந்து மறுபடி க்ஷத்திரிய ஜென்மத்திற்கு வந்து அச்ஜென்மத்தில் (9) தடவை பிறந்து பின்பு பிரா ண ஜென்மத்திற்கு வந்து அதிலும் (8) தடவை பிறந்து பிறகு லிங்காயுத ஜாதிக்கு வருவான், அதில்(3) தடவை பிறந்து மறுபடி ஜங்கமஜாதிக்கு வருவான் அச்சங்கம ஜாதியில் பிறந்த பின்பு மறுபடி எச்ஜென்மமும் கிடையாது. இவனே சாக்ஷாத் ருத்ரரூபன், இவன் சரீரமழிந்த பிறகு சிவலோகத்தில் வாசமாயிருப்பானே யொழிய இவனுக்குபுனர்ஜென்மமில்லை யென்று சைவபுராணத்தில் சொல்லியிருக்கிறது, இம்மாதிரியாக அக்கெட்ட பவிகளானலும், சிலஜென்மங்களுக்குமேல் பரிசுத்தராவார்கள், இன்னும் மற்றொரு பிரமாணம்,

வைஷ்ணவ புராண சுலோகம்.

பிரஹ்மணஸ்து சதாசாரி புனர்ஜ்ஜன்ம நிவைஷ்ணவ:
தத்ர விஷ்ணு பிரசாதேன ஜாயதெ சூலிபூஜக: 1.
தசஜன்ம சிவார்ச்சேன ஜாயதெ வீரசைவின:
வீரசைவ புனர்ஜன்ம ஜாயதெ சரலிங்ககம். 2.
சரலிங்க மஹாயோகர் புனர்ஜன்ம னவித்யதெ

என்றால் பிராஹ்மணன் சதாசாரியாயிருந்தால் மற்றொரு ஜன்மத்தில் விஷ்ணுபக்தனைகப் பிறந்து அச்சென்மத்தில் விஷ்ணுவின் அநுக்கிரகத்தினல் சைவனைகப் பிறப்பான், இப்படிச் சைவனைகிப் பத்து ஜன்மங்களில் சிவபூஜை செய்த பலத்தால் மறுபடி வீரசவைனைகப் பிறப்பான், அந்த வீரசைவனைனதின் பிறகு மற்றொரு ஜன்மத்தில் ஜங்கமனைகப் பிறப்பான், அந்த ஜங்கமனைனதின் பிறகு புனர் ஜன்ம மில்லாமல் அவன் நிஜ மோக்ஷத்தை யடைவானென்று விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டது. இன்னும் இத்திருஷ்டாந்தங்களினல் (2)-வது நிபந்தனையில் கெட்டபவிகளை சில காலங்களுக்குப் பிறகு தமக்குள் சேர்த்துக்கொள்ளலாமென்பதே சித்தாந்தம்.

(9)-வது, (3)-வது, நிபந்தனை.

எப்படிப்பட்ட கெட்ட பவிகளையாவதும் சிவசம்ஸ்கார பலத்தினல் ஏககாலத்திலேயே சேர்த்துக்கொள்ளலாமென்று மூன்றுவது நிபந்தனை சொல்லும்- அதெப்படியென்றால் "பருஷ சோங்கிதரே பருஷ கட்டளையே" யென்னு மூலக வசனமுண்டு. இவ்வார்த்தையின் அர்த்தமென்னவென்றால் பருஷமென்றொரு ஜாதிக்கல்

அக்கல்லின் குணமென்னவென்றால் இரும்பு அக்கல்லிற் பட்டவுடனே அவ்விரும்பு தங்கமாகும், இப்படிப்பட்ட குணத்தாலக்கல்லுக்கு பருஷமென்னும் பெயர் சகல சாஸ்திரங்களிலும், பிரசித்தமாயிருக்கிறது, அதுயெப்படியென்றால் கொலையாளியின் கத்தியானலென்ன, பருஷம் பட்டவுடனே பொன்னாகாதிருக்குமா, எப்படிப்பட்ட கெட்டபவியானலும், உம்மைத் தொட்டவுடனே பக்தனாகாமலிருப்பானே கூடல ஜங்கம தேவா, என்னும் பசவேஸ்வரனின் வசனபிரமாணத்தின் படியுமின்னும் கொலையாளியின் கத்தியென்றால் தினப்பிறதி அநேக ஆடுகளையறுக்கும் பாப வுத்கிருஷ்டமான கத்தியாயிற்றே யிக்கத்தியும் இரும்பாலானகாரணம் அக்கத்தியிலுமக்கல் பட்டவுடனே, அதைத் தங்கமாகச் செய்யாமல் இக்கத்தியை யுடையவனும் இக்கத்தியும் அநேக ஜீவஹிம்சகமான காரணத்தாலிது வெகு பாபாத்மகமான இரும்பென்றதை விட்டுவிட்டாலப்பருஷத்திற்கு யெப்படி ஹானியுண்டாகுமோ அப்படியே எப்படிப்பட்ட கெட்டபவியானலும் சிவசம்ஸ்காரமடைந்தவுடனேயேபக்தனவதே சித்தாந்தம், இதற்கின்னெரு உலகதிருஷ்டாந்த மென்ன வென்றால் வைத்தியர்கள் தாம்பிரபஸ்பம் செய்யவேண்டுமானல் சிலர் நூருபுடத்தால் செய்வார்கள், சிலர் பத்துபுடத்திலும்செய்வார், மற்றும் சிலர் ஒரே புடத்தில் செய்வார்கள். அதெப்படியென்றால் அற்ப மூலிகைகளினல் ஆலஸ்ய (சாவகாச)மாக ஆகும் சித்தமூலிகையினல் ஏககாலத்திலேயே சுத்தபஸ்மமாகுவதெப்படியோ அப்படியே இச்சிவ சம்ஸ்காரத்தினல் அக்ஷணமே பவிநீங்கி பக்தனகுவான், இதற்கு இன்னொரு திருஷ்டாந்தமென்னவென்றால்

## (9) சுலோகம்.

சர்ப்பதம்ஸ்ட்ரேன யத்தேஹம் தத்தேஹம் விஷதேஹகம்
லிங்கதஷ்டேன யத்தேஹம் தத்தேஹம் லிங்கதேஹகம் (1)

சர்ப்பம் கடித்த மனிதனின் சரீரம் எப்படி விஷமயமாகிறதோ அப்படியே சிவலிங்கம் பட்ட சரீரம் லிங்கமயமாகுமென்று சிவாகமப்பிரமாணமிருக்கிறது, மற்றொரு பிரமாணம்

## (9) பத்ம புராண சுலோகம்.

சிவராகவ சப்வாமெதெ சிவேதி மங்கலம் நாம யஸ்யவாசி
பிரவர்த்ததெ சப்தஜன்மக்ருதம் பாபம் பஸ்மீபவதிதஸ்யவை (1)
இந்தனம் வஹ்னி ச பார்க்கத் விருகூநாம விஜஸ்யதி
சிவசம்ஸ்கார சம்பன்ன ஜாதிபேதம் நகாரயேத் (2)

இதினர்த்தம் என்னவென்றால் எப்பாபிஷ்ட மனுஷ்யனைலும் தன்வாயில் சிவனென்னும் மங்கள நாமமிருக்குமானல் ஏழு

ஜன்மத்தின்பாபம் சுட்டுப்போகும் மற்றும் பலஜாதி விறகுகளைச் சேர்த்துச்சுட்டபிறகு அச்சாம்பலை இன்னஜாதி விறகின்சாம்பலென் றுச்சொல்வதற்கு எப்படியாவதில்லையோ அப்படியே எச்ஜாதிமனி தனுனுலும் சிவதீக்ஷாசம்பன்னர்களான பிறகு அவர்களிடத்தில் திரும்பவும் முன்ஜாதியின் பேதங்களைச் செய்யக்கூடாது

## ஆதித்ய புராண சுலோஹம்.

ஸ்வபசச் சிவபக்தஸ்ச துத்தமோத்தம ஜன்மபாக்
தஸ்மாத் கன்யாதிதானேன தாசாயத்வயம்ச ஜஸ்சிவே (1)
சர்வாசார விஹீநோபி வர்ணுஸ்ரம விவர்ஜித:
பக்திலேச யுதஸ்கந்த மத்ப்ரியஸ் சகணுதி: (2)
தஸ்மாத்பூஜ்யா நமஸ்கார்யா வர்ணுஸ்ரம பராயணே :
வர்ணுஸ்ரம பரிபிருஷ்டஸ் சிவபக்தி பராயணு: (3)

## சிவதருமோத்தர சுலோஹம்.

அந்த்யஜோ வாதமோவாபி மூர்க்கோவா பண்டிதோபிவா
சிவாபாவ பிரசன்னஸ்சேத் பூஜ்யஸ் சர்வ சுராசுரை: (1)

இதினர்த்தமாவது, எப்படிப்பட்ட புலையனுலும், சிவபக்தனு னலவனே மஹா உத்தம ஜாதியாவான். இன்னும் வர்ணஸ்ரம பிரஷ்டனுனுலும், அவன் சிவபக்தி யுக்தனுனுல் அவனே எனக்குப் பிரியனுகுவான். இவனே கணசிரேஷ்டன், சகல வர்ணுஸ்ரம யுக் தர்களிலுமிவனே பூஜியனென்று பரமேஸ்வரன் ஷண்முகனுக்குச் சொல்லியிருப்பதாக, பத்ம, லிங்க, ஆதித்ய, சிவதருமோத்தர முத லான புராணங்களில் சொல்லியிருக்கிறது. இதற்குச் சுருதிப்பிற மாணம்.

## சாம வேத சுலோஹம்

ஆபிவாயஸ்சண்டால சிவேதி வாசம் வதேத்தேன
சஹச விசேத்தேனே சஹசம் விசேத்தேனே
சஹசம் வதேத்தேன சஹசம் விதேத்தேன
சஹசம் சஹபுஞ்ஜிததேன சஹசம்சஹ புஞ்ஜிததேன்

எப்புலையன் ஒருவேளை சிவனென்னும் வாக்கியத்தைச்சொன் னுனுல் அவனிடத்தில் கூடுவது. கூடுவது, அவனிடத்தில் பேசுவது பேசுவது, மற்று மவனிடத்தில் கூடிச்சாப்பிடுவது சாப்பிடுவது, என்னும் சாமவேத வாக்கியத்தைப் பால்குரிக்குச் சோமாராத்தியர் கணசஹஸ்ர நாமங்களின் பீடிகையில், சொல்லியிருக்கிறுர். மற்றொரு வேத வாக்கியம்,

## கைவல்ய பத்ததி, சுலோஹம்.

சக்குதோ ஜாரமாத்ரேண பஞ்சாக்ஷர மஹாமனோன்
சர்வேஷா மபிஜம் தானும் சர்வபாப க்ஷயோபவேத் (1)

என்றுநிஜகுணாராத்தியர்கைவல்லியபத்ததியில் சொல்லியிருக்கிறார், இவ்வளவு பிரமாணங்களினால் எப்படிப்பட்ட கெட்டபவியானாலும், அவன் சிவபக்தியுள்ளவனானால்லவனைப் பிராயச்சித்தம் செய்வித்துத் தமக்குள் சேர்த்துக் கொள்வதற்கு எவ்வளவும், சந்தேஹமில்லை.

## (9) பவி பிராயச்சித்த கிரமம்.

எப்படிப்பட்ட கெட்ட பவிகளையும், சுத்தம் செய்யவேண்டுமானால் முதலில் அவனை ஒரு நாள் உபவாசத்துடன் வைத்து (2)ம் நாள் பஞ்சகவ்விய பிராசனம் செய்விக்கவேண்டியது. அதாவது பஞ்சகவ்வியமென்றால் (1) கோமயம். (2) கோரோஜனம். (3) கோவின் பால். (4) கோவின் நெய். இந்நான்கும், கோமூத்திரத்தில் கரைத்து அவனுக்குக்கொடுப்பது. அந்த நாளவன் அதே ஆஹாரத்திலிருக்கவேண்டியது. மறுபடி (3)-ம் நாள் கேவலம் பசுவின் பால் மாத்திரம் ஆஹாரமாயிருக்கவேண்டியது. (4)-ம் நாளவன்சர்வாங்கமும், க்ஷவரம் செய்து மஹாநதியிலவனை ஆகமர்ஷணத்ஸ்தானம் செய்வித்துப்பின்பு அவனை தீக்ஷா மண்டபத்திற்கு அழைதுவந்து அம்மண்டபத்தின் கிழக்கு முகமாக உட்கார வைத்து அங்குள்ள பஞ்சாசார்யரினால் வீரசைவ தீக்ஷை செய்வித்து இஷ்டலிங்கம் தரிப்பித்து மந்திரோபதேசம் செய்வித்துப் பின்பு அவனுக்கு பாததீர்த்தப்பிரசாதம் குடுத்துப்பின்பு அவனை தம்மபங்கியில் உட்கார வைத்துக்கொண்டு எல்லா பக்த மஹேஸ்வரரும் கூடி போஜனம் செய்யவேண்டியது என்று தர்மசாஸ்திரங்களில்சொல்லியிருக்கிறது.

### வேத சுலோஹம்.

கோ மூத்ர கோ மயம் க்ஷீரம் ததி சர்பிஸ் ததை வச:
சமயோசிதமே கத்ரம் பஞ்ச கவ்ய பிரகீர்த்தித: (121)

கோ மூத்ரம், (1)கோ மயம், (2) கோ க்ஷீரம் (3) கோ ததி (4) கோக்ருதம், (5) இவைகளை ஒன்றுசேர்த்து பூமியை மெழுகி அதின் பேரில் கோலங்களிட்டுப் பஞ்ச கலசங்களை விதிப்படி ஸ்தாபிக்கவும்.

### வேத சுலோஹம்.

நந்தி நாதேச வீரேச ஹேரம்போ தாரகாரிபு:
பிருங்கீசஸ்ய கணஸ்தாமம் புனர்த்தீக்ஷ பவிஷ்யதி (124)

வசிஷ்டோ வாமதேவஸ்ய கௌசிகோ வால்மீகஸ்ததா
தூர்வாசாக்ராஹ்யதேலிங்கம்புனர்த்தீக்ஷம்பவிஷ்யதி (125)

நந்தீச, (1) வீரேச, (2) விக்னேச, (3) ஷண்முக, (4) பிருங்கீச, (5) இந்த ஐவர் பெயரிட்டுக் கணசங்குளமம் செய்து, வலத்தில் உட்காரவைப்பது அச்சங்கமதேவன். தீக்ஷை செய்யும்போது

இன்னும் வசிஷ்ட (1) வாமதேவ (2) கௌசிக (3) வால்மீக (4) தூர்வாச (5) இவர்கள் பெயரிட்டுப் பிரதம கணங்களென்றுச் சொல்லி இடப்பக்கத்தில் உட்காரவைப்பது. இப்படி உபயகண சாக்ஷியாக சிவமந்த்ர சம்ஸ்காரம் செய்து மந்திர விபூதியினால் சுத்தாத்மாவாகச் செய்து புனர்த் தீக்ஷைசெய்வது.

(6)-வது பிரஸ்னைக் குத்தரம்.

(10)-வது குருக்கள் (3) விதம்

இந்த லிங்காயுதமதத்திற்கு குருக்களாயிருப்பவர்களுள் மூன்றுவிதமுண்டு (1) உத்தம மென்றும், (2) உத்தமோத்தமமென்றும், (3) சர்வோத்தம மென்றும், மூன்று விதமுண்டு (1)-வது உத்தம மென்றால் குருஸ்தலம், அக்குருஸ்தலத்தவரின் அத்தியந்த தர்ம மென்னவென்றால் அந்த ஆதிபரசிவரான சதாசிவனே, இச்செகத்திற்குக் குரு எப்படி யென்றால் அந்த அனேக ஜகத்துகள் சிருஷ்டி திதி, சம்ஹாரம், திரோதானம், அநுக்கிரஹமென்னும் பஞ்சகிருத்யங்களே கர்த்தனை காரணம். இச்செகத் ஜனங்களுக்கு போக மோக்ஷ பிரதாயகனைகாரணம் அச்சதா சிவனே இச்செகத்திற்குக் குருவென்பதே சித்தாந்தம்.

(1)-வது, சுரு, பவிஷ்யோத்தரபுராணம்.

பிரஹ்மக்ருத சிவசஹஸ்ர நாமசு
மிருத்புஞ்ஜயஸ் சூஷ்மாதனுர்ஜ ஜகவ்யாபீ ஜகத் குரு :
வ்யோமகேசோ மஹாஸேன ஜனகஸ்சாரு விக்ரம: (1)

இந்த ஜகத்குருவான சதாசிவன், சம்பிரதாயகரே இக்குருஸ்தலத்தவர். இவருக்கு கிரகஸ்தாஸ்ரமம், இவர் தர்மம் யென்னவென்றால் இவர் லிங்காயதர் வீட்டில் ஜனனாதி மரணாந்தமான சகல சுபா சுப கர்மங்களையும், விதிக்கிரமமாகச்செய்வதே இக்குருவின் தர்மம். இக்கர்மங்களில் வைதிகம், ஆகமிகம், பௌராணிகமென, மூன்றுவிதமுண்டு. (1) வைதிகமென்றால் வேதோக்த கருமங்கள். (2) ஆகமிக மென்றால், ஆக மோக்த கருமங்கள். (3) பௌராணிகமென்றால், புராணோக்த கருமங்கள் என்று மூவிதமுண்டு. இன்னும், இக்குருஸ்தலத்தவர்செய்யும், சகல கர்மங்களுக்கும், தேவையான சாதனங்களை அவரனுமதியின்படிக்குக் கொண்டுவந்து கொடுப்பதே மடபதியின் காரியம் இன்னுமவருக்குத்தேவையான பஞ்சாசார்யர் முதலான சமஸ்த கணங்களையும், அழைத்துக்கொண்டுவருவதே கணாசார்யர் காரியம். இன்னுமிந்த மடபதி. மடாபதி, கணாசாரி, கணகுமார:, ஸ்தாவர, இவ்வைந்து பேர் சேவகரையும், பஞ்சாசாரியரின் சேவார்த்தமாகி அச்சதா சிவன் தன் சரீத்தில் பிறப்பித்தாரென்று ஆகமங்கள் சொல்லுர், இன்னுமிந்த குருஸ்தலத்தவருக்குப் பெயரென்ன வென்றால். (12)

ஆயிரத்தவரென்றும் சதாசிவன் சம்ப்பிரதாயகரென்றும் மஹேஸ்வரரென்றும், ஐயர்களென்றும் ஒடெய (மேலானவ)ர்களென்றும், சம்சாரி ஜங்கமரென்றும், சொல்லிக்கொள்ளு மிவரே (1) வது குரு வர்க்கத்தவர்கள்.

(2)-வது குருக்கள்.

இரண்டாவது குரு வர்க்கத்தவர்கள் யார் யாரென்றால் இவர்கள் பெயர் என்னவென்றால் ஆறாயிரத்தவர். இவர்கள் ஆதியில் ஜகத்குருவான, சதாசிவன் பஞ்சமுகத்தி லுற்பவித்த ரேணுகாதி பஞ்சகுருக்கள் இவர்களே இக்கலியுகத்தில் இவ்வுலகத்தி லுள்ள பஞ்சலிங்கங்களிலுர்பவித்து பஞ்சஸ்தானங்களில் நின்றவர்கள் இவர்கள் நின்றஸ்தானங்களுக்கு பஞ்ச சிம்ஹாசனங்களெனப் பெயராயிற்று. இவர்கள் தங்கள் தங்கள் சூஸ்த்திரிக சிஷ்யரான(1)பட்ட (2) சரந்தி, (3)தேசிகர், (4)அதீதர், (5)மஹந்தினர், என்னும் பெயருள்ளவர்களைக்கொண்டே சகல லிங்காயுத ஜனங்களுக்குத் தீக்ஷா. சிவலிங்கதாரணம் மந்ரோபதேசங்கள் செய்விப்பார்கள் பின்னு மந்த லிங்காயுதரில் ஏதாவது அநாசாரம் நடந்தால் அவரவர்களுக்குத்தக்க தண்டனை கண்டனங்கள்செய்து அவருக்கு உலக சம்மதமாய் பிராயச்சித்தப் பூர்வகமாக தீக்ஷாதிகளினால் சுத்தராகச் செய்வித்து அவரவர் ஜாதிகளுக்குச்சேர்ப்பிப்பதேஇச்சிம்மாசனாதிபதிகளின் கர்த்தவ்வியம், இவர்கள் பின்னும் எச்ஜாதிப் பிறப்புபவிகளானாலும், கெட்ட பவிகளானாலும், அவர்களை சாஸ்திர சம்மதமாகவும், உலக சம்மதமாகவும். பிராயச்சித்தப் பூர்வமாகச் சுத்தம் செய்வதே இவர்கள் கர்த்தவ்வியம். இன்னு மிவர்கள் பெயரென்னவென்றால் ஆறாயிரத்தவரென்றும் சடுஸ்தலத்தவரென்றும் ஷடுஸ்தல பிரஹ்மிகளென்றும், பிரம்மாசாரிகளென்றும், அதீதரென்னும் பெயர்களுள்ள இவர்களேயிரண்டாவதுகுருவர்க்கத்தவர்கள்,

(3)-வது குரு வர்க்கத்தவர்

இன்னும் மூன்றாவது குருவர்க்கத்தவர்கள் யார் யாரென்றால் மூரிஸ்தலத்தலத்தவர். மூர்த்திஸ்தல மென்றால், மூவாயிரத்தவர், மூவாயிரத்தவரென்றால் விரக்தர், இவ்விரக்தர் விவரமென்னவென்னவென்றால் ஆதிமுதலான அநாதிபரசிவன் சித்களையே சூன்யமாயிற்று. அச்சூன்யமே நிஷ்களமாயிற்று. அந்த நிஷ்களமே நிரஞ்சனமாயிற்று. அந்நிரஞ்சனமே அல்லமாப்பிரபுவானார். அந்த அல்லமாப்பிரபுவின்சம்பிரதாயகரான இவ்விரத்தரேயானகாரணம், இந்த விரக்தரே திரிபுவனபதிகளான தேவ, தானவ, மானவர்களினால் பூஜியரென்பதற்கு பிரமாண மென்னவென்றால் அந்த ஆதிபரசிவனான சதாசிவன். ஷண்முகன், வீரபத்திரன், விக்னேஸ்வரன் இன்னும் விஷ்ணு பிரம்மா தேவேந்திரன் முதலான சமஸ்த மநு முனிகளினால் பூஜியரென்பதற்குப் பிரமாணம்.

### மகுடாகமம், நிராபார வீரசைவ படலம்

சதுர்வேதஷாயெத்ருஷ்டம் தத்ருஷ்டந்து சிவாகமெ
சிவாகமேஷாயத்ருஷ்டம், தச்சவேதேஷாத்ருஸ்யதே (1)
வேதபாஹ்ய வ்ருதத்வாத் வேதசம்மத முச்யதெ
வேத சித்தாந்தயோரைக்யம் ஏகார்த்தம்பிரதி பாகனாத் (2)

இம்மாதிரியாக வேதாகமங்களில் ஒரே அர்த்தம் சொல்லி இருப்பதால் இச்சிவாகமங்களே முக்கிய பிரமாணமாயிருக்கும்.

### நீலகண்ட பாஷ்ய சுலோஹம்.

தனைதவ சிவநிஸ்வாசா ஸ்ருதிப் யஸ்த்த சிவாகம:
அதிகாஸ்சிவ வக்த்ரேண சம்பவானி கமா கமா:

அச்சதாசிவன் மூக்கு வாய்களினின்றும் வேதாகமங்கள் பிறந்தனவென்று சொல்லியிருக்கிறது. இன்னும்,

### அநாதி ஜங்கம லக்ஷணம், சுலோஹம்.

இஷ்டோத் பத்தி குரோஸ்வேன குரோத்பக்திஸ்து ஜங்கமாத்
ஜங்கமோத் பத்தி சூன்யத்வா தச்சோன்யம் சரலிங்ககம் (1)
அநாதி ஜங்கமம்தேவி சிவருத்ராதி பூஜிதம்
யோகினோ முனயஸ்சர்வெ ஜங்கமாம் கிாஸ்சமாஸ்ரிதா: (2)
ருத்ராணம் ஜங்கமானாம் காய கல்மஷ நாசிணும்
ஆராதயந்தே மேகாந்தெ ஷண்முக ப்ர முகஸ்சுதா: (3)
பிரஹ்ம விஷ்ணு சுரோந்த்ராணாம் வந்த்யமானப்ரதத்வயம்
வேதாகமார்த்த நிரதம் தஸ்ய ஜங்கம லக்ஷணம் (4)
ஷட்ஸ்தலஞ்ஞான வந்தஸ்சா நாதி ஜங்கம மூர்த்தய:
தேயேதேஸ்வஸ்ய பாதாப்ஜம நிதாயமம மஸ்த்தகெ (5)

இப்படி யநாதி ஜங்கமரான விரக்தரே சர்வோத்தமோத்தமரென்று சகல வேதாகமங்களிலும் புராணங்களிலும், பிரசித்தமானகாரணம். இச்சட்ஸ்தலஞ் ஞானிகளான சிவாநுபாவிகளான நிராபார தேசிகரான மூரிஸ்தலத்து விரக்தரான அநாதி ஜங்கமன் தானே, தன் பாதகமலங்களை என்சிரசின்மீது வைக்கட்டுமென்றுச் சொன்ன கிரந்தங்களே மேலே சொல்லியிருக்கிறது. இன்னும், ஜங்கம பாத தீர்த்தப் பிரசாதங்களே என் அபிஷேகத்திற்கும் நைவேத்தியத்திற்கும் யோக்கியமென்று அச்சதாசிவன் வேதாகமங்களில் சொல்லியுள்ளார். இதற்குப் பிரமாணம்.

### வீராகம், சுலோஹம்

சரஸ்ய பாததீர்த்தேன லிங்காஜ்ஜன முக்தமம
தத்வசாதோ ம்ஹாதேவி—நைவேத்யம் சுபதம் பவேத் (1)

சரபாதோதகம் லிங்கே ஸ்நாப்ய பிரசாத மர்ப்பயேத்
ஏதன் மார்க்க ப்ர சாரீயஸ் சபக்தரீலேக கந்யதே (2)

பாதாபிலா ஷேக சலிலம் புக்த சேஷான்ன முத்தமம்
அபிஷேகஞ்ச நைவேத்யம் பிரசாதம் சிவலிங்ககே (3)

பாததோயஞ்ச நைர்மால்யம் பிரசாதஞ்ச சரஸ்யச
யோபிலிங்கார்ப்பிதம் புக்தி சருத்ரோ நாத்ர சம்சய: (4)

பாதோகம் பவித்ரஞ்ச புக்த சேஷான்ன முக்தமம்
நிர்மால்யம் பரமானந்தம் நிர்மால்யம் சுத்த சைவதம் (5)

நிரஞ்ஜனஸ்ய சுத்தஸ்ய ஸ்பல ்ய சரஸ்யச
பாதாம்புஞ லிங்கமூர்த்தே ஸ்நாநம் குர்வித போஜனம் (6)

ஜங்கமம் பாத தீர்த்தஞ்ச லிங்க மஜ்ஜன முத்தமம்
தச்சேஷம் கிரிஜாதேவி நைவேத்யம் லிங்க முத்தமம்
பூரண மகிலம்சர்வெ ஆகமம் சீதிக் ருஸ்யதெ (7)

ஸ்காந்த புராண சுலோஹம்.

லிங்கசம்ஸ்தாப்ய பாதாம்பு ஸ்நாநம் க்ருத்வா சரஸ்யசி
தல்லிங்கஸ்ய பிரசாதேன போஜயித்வா விதானத: (8)

வயாப்ரோக்தந்து கர்த்தவ்யம் பஜ்ஜலம் சகிவாஹன
பக்தானம் சுப்ரசாதஞ்ச சிவலிங்கே நிவேதயேத் (9)

தஸ்ய ஜங்கம லிங்கஸ்ய பிரசாதம் லிங்கசேவிதம்
மயாப்ரோக்தந்து கர்த்தவ்யம் பஜ்ஜலம் சிகிவாஹனம் (10)

சிவ ரஹஸ்ய சுலோஹம்

பாதாப்ஜ தோய நிர்மால்யம் பிரசாதந்து சரஸ்யச
யோபிலிங்கார்ப்பிதம் புக்தே சருத்ரோ நாத்ரசம்சய:(11)

பிரஹ்மாண்ட புராண சுலோஹம்.

ஜங்கமம் பக்தசேஷஞ்ச பாதாம்பு லிங்கமஜ்ஜனை:
நைவேத்யம் சததம் பக்த்வா தஸ்யபந்தனவர்ஜ்ஜயேத்(12)

பிரஹ்ம கீதை சுலோஹம்

ஜங்கமானுஞ்ச பாதாம்பு தத்பிரசாதஸ்ய தேவனம்
சேவனுமோக்ஷ சித்யர்த்தம் சத்யமோஸ்வர பாஷிதம்(13)

ஆதித்ய புராண சுலோஹம்.

திலசோடச பாகஞ்ச க்ருணுக்ரமபு கணுபமாம்
பாதோதக பிரசாதன்னம் சோவாயா மோக்ஷமாப்நுயாத்(14)

வீரபத்திர புராண சுலோஹம்.

ஜங்கமம் ஞான ரூபஞ்ச கிரியாரூபந்து லிங்ககம்
தச்சேஷாம் கிரிஜலப்யாம்சமஜ்ஜனம் சார்ப்பணம்பவேத்(15)

ருக் வேத சுலோஹம்.

ஓம் ஜங்கமஸ்ய பாதாம்பு நலிங்காபி சேஷனம்
க்ருத்வா தத்ப்ரசாதம் போஜயேத் (16)

யஜுர் வேத சுலோஹம்.

ஓம்ஜங்கமஸ்ய சித்த பாதாம்ப: லிங்கதநு மொரெயத் தத்ப்
பிரசாதோ போக்யபதம் பதாம்பு ஜாதசலிலம் அசேவிதம்
புஞ்ஜீயாதன்யம் சோபாசிதம் சிவலிங்க கார்யம் பயாத் (17)

சாமவேத சுலோஹம்.

பவோர்மத்யே மஹாரூபம் சஹஸ்ராப்ஜ லிங்கஸ்திதம்
பச்சிமே சிகாயாம் ஜங்கமஸ் சூன்ய: வித்வானுக்ரஹெகோ

ஜங்கம பாதாம்புஞ சிவலிங்கஸ்ய நபனம்
கார்ய: தத்ப்ரசாதம் போஜயேத் (18)

அதர்வண வேத சுலோஹம்.

ஜங்கமஸ்ய பாதாம்புஞ சிவலிங்கஸ்ய
நபனம் தத்பிரசாதே போஜயேத் (19)

ஜாபாலோப நிஷத்து சுலோஹம்.

சமம்மேயமானந் த்ருஜ்ய தெச்சேஷம்யேன புஞ்ஜதெ
பரப்ரஹ்மண: தச்சேஷம் மமதிருப்திர்ன சம்சய: (20)

இன்னுமிந்த அநாதி ஜங்கமரான விரக்தர் பாததீர்த்தப் பிர சாதங்களே எனக்குச் சர்வ திருப்தியென்று வேதாகம கிரந்தங் களில் பரமேஸ்வரன் சொல்லியிருக்கிறார். இன்னு மிவர்களில் மூன்று பேதங்களுண்டு. (1) முரகி சமயமென்றும், (2) சீலாள சமயமென்றும், (3) குமார சமய மென்றும், மூவித மாயிற்று. முதலில் விரக்தரென்பவரெல்லாம் ஒரே சமயத்தவராயிருந்தார்கள் இவர்களுக்கெல்லாம் மூலஸ்தானம சித்திரக்கல் துர்க்கம் இதற்கு முன் மூலஸ்தான மெது வென்றால் இவ்விரக்தரென்பவர்களுக் கெல்லாம் இக்கலியுகத்தில் அல்லமாப்பிரபு வென்னும் அநாதி ஜங்கமனே இவர்களுக்கெல்லாம் மூல புருஷன், இவருக்கு மூல பீடமெதுவென்றால் சூன்ய சிம்மாசனம், இது இப்பொழுதும்கல் யாணிபட்டணத்திலிருக்கிறது, இச்சூன்யசிமஹாச த்தவரேனசித்தி ரக்கல் துர்க்கத்துக்குவந்து நின்றதினல் இதற்கும் சூனிய சிம்மா சனமெனப்பெயராயிற்று, இப்படிப்பட்ட சூன்யசிம்மாசனத்திற்கு ஒருவரே அதிபதியாயிருந்தார்: இன்னும் மற்றவர்களெல்லாம் அவர்சன்னதியில் காச சர மூர்த்திகளாயிருந்தார்கள். இப்படியிரு க்கும் போது சில காலத்திற்குப்பின் அத்துர்க்கத் ததிபதிகளுக்கு ஒரு காலத்தில் முரகியவரென்றும் பெயருண்டாயிற்று.

சில தினங்களுக்குப் பிறகு அம்மடாதிபதிக்கும், அங்கிருந்த காசசர மூர்த்திகளுக்கும், விரோதமுண்டாகி அத்தேசத்தை விட்டு பல்லாரிக்கு வந்துநின்றார்கள். பின்பு இவர்கள் சீலாள சமயத்தவ ரென்று பெயரிட்டுக்கொண்டார்கள். இவருக்குள் ஒருவர், கதகு தேசத்தில் டொம்பள வென்னும் கிராமத்தில் மடம் கட்டிக் கொண்டு அம்மடத்திலிருந்துக்கொண்டு அர்த்தனாரீஸ்வர தோம்ட பார்ய தோடதசுவாமியெனப் பெயரிட்டுக்கொண்டார்கள். இன்னு மிவரல்லாது பின்பொருதரம் இத்தூர்கத்திலிருக்கும், சுவாமிகளுக் கும்சரமூர்த்திகளுக்கும், மற்றொருதரம் விரோதமுண்டாகி அச்சர மூர்த்திகளுக்குள் முக்கியமான ஒருவர் குமாரசர மூர்த்தியாவரின் னும், சில சரமூர்த்திகளையழைத்துக்கொண்டு சுவாதி தேசத்திற் குப்போனார்கள். பிறகு அச்சுவாதி அரசனுக்கும், இக்குமாரசாமி களுக்கும், விரோத முண்டானபடியாலதை விட்டு அவர் உப்பள் ளிக்கு. வந்தார்கள். பிறகு உப்பள்ளியைச் சேர்ந்த கிராமத்தில் குமாரசுவாமிகள் தன் சரீரத்தைவிட்டார். பிறகு அவர் கூடவந்த சரமூர்த்திகளெல்லாம் தங்கள் தங்கள் மனதுக்கு வந்த ஊர்களுக் குப்போனார்கள். இவர்களுள் ஒருவர் மூவாயிரத்தவ குரு சித்த சுவாமிகளென்பவர். உப்பள்ளியில் மடம் கட்டிக்கொண்டு மடத் திலிருந்தார், பின்பிவருக்கு குமார சமயத்தவரெனப் பெயருண் டாயிற்று, இன்னு மிவ் விரக்த ரென்பவர்களுக்குள் உண்டான மூன்று சமயமும். சொல்லிமுடிந்தது

இன்னும் விரக்த ரென்பவருக்குள் கேவல விரத்த ரென்றும் சரமூர்த்திகளென்றும், இருவிதமுண்டு. இன்னு மிச்சரமூர்த்திக ளுள் மூவிதமுண்டு, (1)-வது பள்ளெ சரமூர்த்தி யென்றும், (2)-வது புராண சரமூர்த்தி யென்றும், (3)-சிவானுபாவசர மூர்த் தியென்றும், மூவகையுண்டு. இதில் பள்ளெசர மூர்த்தி யென்றால் எதுவுமெழுதாத வெறும் புஸ்தகத்தை தமது குருக்களிட மிருந்து பெற்றுக்கொண்டவர். புராணசர மூர்த்தியென்றால் ஒரு பசவேஸ் வர புராணத்தை மாத்திரம் தமது குருக்களிடமிருந்து பெற்றுக் கொண்டவர். சிவானுபாவ சரமூர்த்தியென்றால் சிவானுபவ சாஸ் திரபுஸ்தகத்தைத் தமது குருக்களிடமிருந்து பெற்றுக் கொண் டவர். முதல் சொன்ன கேவல விரக்தரென்பவர் அவர் தமது குருக்களிடத்தில் விரக்தாஸ்ரமம் மாத்திரம் வாங்கிக்கொண்டவர். இன்னுமிவர்களில் தாரதம்மிய மென்னவென்றால் கேவல விரக் தரைவிட பள்ளேசர மூர்த்தியே மேல் இப்பள்ளேசர மூர்த்தியை விட சிவானுபாவ சரமூர்த்தியே மேலென்று இம்மதத்தில் நிர்த்தா ரணம் செய்யப்பட்டது.

### (11)-வது 7-வது பிரஸ்னை குருபட்டம்

இன்னும் இம்மதத்தில் சாம்மித்யம் எந்த லாயக்குள்ளவ ருக்குக் கொடுக்கவேண்டுமென்னும், (7)-வது பிரஸ்னைக்குத்தரம்

இன்னு மிம்மதத்தில் பட்ட சரந்திகளுக்கு விரக்திமுதலானகுருத் வத்தை யெப்படிப் பட்டவருக்குக் குடுப்பாரென்றால் முதலாவது குருக்களின் புத்திரனுக்கு, இன்னு மிரண்டாவது யாருக்கென்றால் முதல் அச்சதாசிவன் ஈசான்ய முகத்தினால் தனக்குச்சமானரான தன் பிரதி பிம்பங்களான (27) கோடி பிரதமரைப் பிறப்பித்தான். அவர்களுள் பஞ்சப்பிரதமரே இந்த லிங்காயத மதத்தவரெல்லோருக்கும், கோத்ராதி பதிகள். அவர்யாரென்றால் (1) நந்தீஸ்வரன் (2) பிருங்கீஸ்வரன், (3) வீரேஸ்வரன், (4) விருஷபேஸ்வரன், (5) ஸ்கந்த ரென்பவர்கள், இன்னு மிவர்களல்லாமல் அதே ஈசான்ய முகத்திலேயே (11) கோடி ருத்திரர்கள் பிறந்தார்கள். மற்றும் அம்முகத்திலேயே (18) ஜாதிக்கு மூல புருஷரான (18) பேர் பிரதமர்கள் பிறந்தார்கள். பிறகு அதே முகத்தில் (5)முகங்களுள்ள பஞ்ச வக்த்ரனென்றொரு கணேஸ்வரன் பிறந்தான். இந்த பஞ்சமதங்களுக்கும் மூலபுருஷன்.

## பஞ்சம சாலிய ருற்பத்தி.

இன்னுமிப் பஞ்சவக்த்ர கணேஸ்வரன் பஞ்ச முகங்களில் 5 பேர் மக்கள் பிறந்தார்கள். அவர்கள் யார் யாரென்றால் (1) காலாரி, (2) காமாரி, (3) புராரி, (4) மகாரி, (5) வேதாரிகளென்னும், இவ்வைவர் சந்ததியவர்களே இப்பொழுது உலகத்திலிருக்கும், பஞ்சமசாலியரென்று சொல்லிக்கொள்வார்கள். இதற்குப் பிரமாணம். வீராம சுலோஹம்.

மவேமசான முகோத்பன்னோ பஞ்சவக்த்ர கணேஸ்வர:
சாதாமகாரி காலாரி காமாரிஸ்வ ததைவச (1)
புராரிச்ச ததாவேத ரிபுரித்ய பிதாயின:

இன்னு மிந்த பஞ்சவக்த்ர கணேஸ்வரனின் மக்களானவர்களுடைய சந்ததிகளான இப்பஞ்சமசாலியருக்குள் தகப்பன் பக்கம் (10) தாய்பக்கம் (11) தலைமுறைகளில் தோஷிகளல்லாதவர்களுடைய குழந்தைகளுள்நல்ல லக்ஷணமுள்ள பையனை எடுத்துக் கொண்டு அவனுக்கு வேதக்கிரியா தீக்ஷைகளைச்செய்துப் பிறகு அவரவர்களுக்குத்தக்க குரு பட்டம் கொடுப்பது. இதுவல்லாமல் இன்னுமுள்ள மடபதி, கணாசாரி, ஸ்தாவர பூஜாரி, முதலான (64)காயகத்தவர் புத்திரருக்கு இக் குரு பட்டம் கொடுக்கக் கூடாதென்று மடிவாள மாசிதேவர் சரித்திர இதிகாசத்திலும், மற்றும், ராகவேஸ்வரர் காவியமென்னும் லிங்காயதர் குல புராணத்திலும், இப்படியாக சொல்லியிருக்கிறது.

## சுருதி.

வரவீரசைவ மததோள் நிருததி கேள் தேளு பிரஸ்னெகளிகுத்தரமம், பரிசிகி கேளித நெந்தீ தரெஜனருகளெய்தெ நோடி

னலி வந்ததாளம் (1) இன்னீ மத துன்னதமம் சன்னுத வேதாதி சாஸ்த்ர நிசயம்களொளம் உன்னத வெங்தெவெ பேள்த்தம் கன்னடவாகிர்த்த வாக்ய ரசனெகளிம்தம் (2)

(12) இருவித சிருஷ்டிகள்.

ஊர்த்வமுக சிருஷ்டியென்றும், அதோ முக சிருஷ்டியென்றும் இரண்டுண்டு. ஊர்த்வ என்றால் மேலிருக்கும் ஆகாசம். அதோ என்றால் கீழிருக்கும் பூமி, இப்படிப்பட்ட பூமியே அங்கமாகக்கொண்டவன் பிரம்மா, அந்த பிர்மாவினாலும், பூமியினாலும், பிறந்த மநு முனி,தேவ தானவ,மானவ, ரென்னப்பட்டவரெல்லோரும், அதோ சிருஷ்டிஜர், இவர்களே ஆலிங்கிகளென்றும், பவிகளென்றும், பாச பத்தரென்றும், பசுக்களென்றும், நித்திய சம்சாரிகளென்றும், ஜனன மரணத்திற்குள்ளானவர்களென்றும், சொல்லிக்கொள்வர், இதற்குப் பிரமாணம்.

பரமேஸ்வர தந்திர சுலோகம்

ஆலிங்கநோவ்ருதே தேவி பஹுசம்சய காரண:
நிவர்த்தி வீரசைவஸ்ய லிங்கின: சுகதஸ்சுகம்

இப்படிப்பட்ட லிங்கதாரிகளல்லாதவரே ஆலிங்கிகளென்று சொல்லிக்கொள்வார்கள். இவர்கள் பவிகளென்பதற்கு மற்றொரு பிரமாணம் (பவோஸ்யாஸ் தீதி பவி:)என்றது. பவமுள்ளவனே பவி. இதற்கின்னொரு பிரமாணம்.

சிவகவியான மல்ஹணன் கவி.

சம்போபவம் தமபவம் பவிநோநமம்தி

என்று மல்ஹணகவி சொல்லியிருக்கிறார். இன்னும், பாசபத்தரென்பதற்குப் பிரமாணம் சுலோஹம்.

ஜீவோஸ்சிவஸ் சிவோ ஜீவோ சஜீவஹ கேவலஶ் சிவ:
பாசபத்த பவேஜ் ஜீவோ பாச முக்தஸ் சதாசிவ:

இப்படிப்பட்ட பாசபத்தனே ஜீவன், பாசங்கள் எது வெதுவென்றால், (1) மாயை (2) கர்மம் (3) மலம், (4) பாசம் (5) பவம் (6) பந்தம், (7) துரிதம், (8) சம்சாரம், (9) சந்தாபங்களென்னும் ஒன்பது பாசங்களினால் கட்டிக்கொள்ளப்பட்டவனே ஜீவனான காரணம் இச்சிவாத்மாரன மனுஷ்யரெல்லோரும் பத்தர் என்பதே சித்தாந்தம், இன்னுமிப்பவிகளெல்லோரும் பசுக்களென்பதற்குப் பிரமாணம். சுலோஹம்.

பிரஹ்மாதி ஸ்தாவராந்தச்ச பசவ: பரிகீர்த்தித:
தேசாம் பதித்வாத் பூதேச: சிவ: பசுபதிஸ் ம்ருத: (1)

இதினர்தமாவது பிரம்மன் முதலாக புல் பூண்டு கடையான சமஸ்த சராசர பிராணிகளெல்லாம் பசுக்களென்று சிவாகமங்களில் சொல்லியிருக்கும் காரணம் இந்த பவிகளெல்லோரும், பசுக்களென்பதேசித்தாந்தம். இன்னும் இச்சிருஷ்டித்த பிரஹ்மனும் பசுவென்பதற்குப் பிரமாணம்,

ரூர் ஒருவீர ஜிதேந்திரிய தேசிகோத்தம சரலிங்க ஜங்கம தேவன் கிராம கிராமங்கள் தோறும் பிக்ஷை யெடுத்து நதிதீரத்திற்குப்போய் அந்நதியில். பாதம், கை, வதனம் கழுவிக்கொண்டு உட்காரவும் அப்பாத ஜலபிந்து தெரித்துப்போய் அந்நதி தீரத்தில் புல்லிற்குள் காற்றிற்கு வாய் திரந்திருந்த சர்ப்பத்தின் வாய்க்குள் விழவும் அச்சமயத்தில் கள்ளனொருவன் பரவஸ்துக்களைத் திருடிக்கொண்டு வரும்போது தெரியாமல் அச்சர்ப்பத்தை மிதிக்கவும் அச்சர்ப்பம் கடிக்கவும் கடித்ததைக் கண்டகள்ளன் சர்ப்பத்தையடிக்கசர்ப்பமிறந்தது,கடியுண்டக்கள்ளனு மிறந்தான். அப்பொழுது அக்கள்ளனாகிய சோரனுக்கும் சர்ப்பத்திற்கும் முக்தியாய் விட்டது, அதெப்படி யென்றால், அத்தேசி கோத்தமனின் பாதஜலபிந்து அச்சர்ப்பத்தின் வாய்க்குள்ளிருந்து கடிக்க அப்பாத தீர்த்தம் உபயத்ராளுக்குக் கிடைக்க மந்தார கைவல்ய பத மாச்சுது, இப்படியாக ஜங்கமதேவன் பாததீர்த்தம் கொண்டால், பவத்திற்கு வரான், தானே சதாசிவனாகி யிருப்பான்,

பின்னுமச்சங்கம தேவன் ஆசனத்திலமர்ந்து (11) ஸ்தானங்களில் விபூதியணிந்து கங்கா ஜலத்தை இஷ்ட லிங்காபிஷேகம் செய்து, விபூதி தரித்து அப்பிக்ஷான்னத்தை லிங்கத்திற்கு அற்பித்து அந்த லிங்கப் பிரசாதத்தினால் ஆனந்தித்து மிக்க சேஷான்னத்தையும் ஜோளிகையையும் கங்கையில் கழுவ, அம்மஹா பிரசாதத்தை மச்ச கூர்ம முதலான ஜலசரங்கள் புசிக்க, அச்ஜலசரங்களெல்லாவற்றிக்கும் சிவசாயுஜ்யபதவி யாயிற்று, இதைத் தெரிந்து, ஜங்கமப் பிரசாதம் கொண்ட அம்மனிதன் சுவர்க்க, மத்ய, பாதாளத்திற்கு சதாசிவனாகப் பிறப்பான், இன்னும், அச்சங்கம தேவன் கங்கா ஸ்நாநத்தினால் சித்திரை வைகாசி மாத வெய்யலில் போகும் போது ஒரு கழுகு இறகைவிரித்துக் கொண்டு வெய்யலின் தாபத்திரயத்திற்காக மேலேநிற்க அக்கழுகுக்கு ஏகசக்ரத்தினாளும் அரசன் மாளிகையுண்டாக்கினார் சிவன் அப்பக்ஷி அம்மாளிகையிலிருந்து சகல ராஜ்யங்களையாண்டது,

### (15) உதய தரிசனம், சுலோஹம்.

ப்ரபாதே ஜங்கமம் த்ருஷ்ட்வா சர்வலிங்கந்து தர்சனம்
லலாட சரணம் மத்யே கோடி தீர்த்த பலம் பவேத் (129)
ப்ரபாதே விப்ர சந்த்ருஷ்ட கோடி ஜன்மேன சூகர:
அதவா வந்தனம் க்ருத்வா, ரௌவ நரகம் ப்ரசோத் (130)

ஜங்கம தேவனை உதயத்தில் தரிசித்தால் பூமியிலுள்ள அனந்த கோடி லிங்கத்தைத் தரிசித்த பலன் சித்திக்கும், இன்னும் ஜங்கம தேவனுக்குத் தீர்க்க தண்டநமஸ்காரம் செய்தால் ஒரு கோடி தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்த பலன் அக்ஷணமே யுண்டாகும், இன்

னும் உதயத்தில் விப்பிரனைக் கண்டால் ஒரு கோடிபன்றி கெற்பத்தில் பிறந்து பிறந்து வந்து பறச்சேரியில் நரகம் புசிப்பான், இன்னும் விப்பிரனுக்கு நமஸ்கரித்துக் காலின் மேல் விழுந்தால் சந்திர சூர்யருள்ளவரை நரகத்திலுழன்றுக் கொண்டிருப்பான், இப்படிப் பட்ட விப்ரன் தன் சுயஜாதிக்குக் குருவே யொழிய மீதியுள்ள ஜாதிகளுக்குக் குருவல்ல, வர்ணவர்ணங்கள் கூடிக்கொண்டு பிரவர்த்திக்கும் நிமித்தமாக (வர்ணுணும் குரு ஜங்கமம்) என்றது. ஆனதினால் எல்லவர்ணங்களுக்கும் ஜங்கமமே குருவு.

(16) பரசிவ ஜங்கம ஸ்தலம் சுலோகம்.

சைதன்யம் சாஸ்வதம் சாந்தம் வ்யோமாதீதம், நிரஞ்ஜனம்
நாதபிந்து களாதீதம் தஸ்மைஸ்ரீ குருவே நம: (131)

ஆனிஷ்கல பரசிவன் ஜங்கம ஸ்தலம் எது வென்றால் அண்டஜம், பிண்டஜம். உற்பிசம், சுவேதசம்என்னும் சௌர்யாசி லக்ஷஜீவராசிகளுக்கு சைதன் யாத்மகனுகி சமஸ்த ஜீவர்களின் ஆணவ மலம், மாயா மலம், காமிக மலம். என்னும் மாயாபாசத்தினால் சுவர்க்க நரக மென்னும் உபயகப் பத்தில் கட்டி காலகாமருக்கு வசம் செய்வான். அப்படிப்பட்ட சீவருக்கு சம்சாரம் நீங்கி, ஸ்ரீ குருவைத் தெரிந்து சரணம் செய்தால், அவருக்கு மூவேழு தீக்ஷையினால் சுத்தாத்மனம் செய்து சிவசாயுஜ்ய பதத்தைக் கொடுக்கும் ஸ்ரீகுரு மூர்த்தியான ஜங்கம தேவன், சாஸ்வத னென்றால் அசங்க்யாத ப்ரஹ்மர், கோடி விஷ்ணுக்கள், சமுத்திர மணலவ்வளவு இந்திராதிகள் பிரளயமாகும் போது பிரளய விரஹிதனு யிருந்தா னென்பதால் சாஸ்வதன், சாந்த னென்றால் சமஸ்தசராசர பிராணிகளுக்குத் தன் கிருபா பிரசாதத்தைக் கொடுத்து ரக்ஷிப்ப னென்பதால் சாந்தன், வியோமாதீத னென்றால் (36) தத்துவத்திற்கும் மேலிட்டதத்துவ னென்பதால், வியோமாதீதன், நிரஞ்ஜன னென்றால் நரஜீவர்களைப் பசுவாக்கி மாயையைப் பசுபதியாக்கித் தன் முப்புரி கயற்றினல் கட்டிக்கொண்டிருப்பதால் மாயாநிரஞ்ஜனன், அப்படிப்பட்ட மாயையைத்தன் சூத்திரத்தால் ஆட்டுவிப்பா னென்பதினல் நிரஞ்ஜனன். நாத, பிந்து களாதீத னென்றால் ஆத்மயோகிகள் ஆசனபந்தங்களினல் வாயுக்களையெல்லாம் ஊர்த்துவத்திற் கெடுத்து நாக்கை சுசும்ன துவாரத்தில் வைத்து சண்முகி, சாம்பவி, கேசரி என்னும் ஹடகர்ம யோகத்தில், நாதபிந்துக்களைப் பேதித்துக் கண்டு கூடினே னென்னும் கண்டிதயோகிகளுக்கு அகப்படே னென்பதால் நாதபிந்துகளாதீதன், இப்படிப்பட்ட தேசிகோத்தமனுன நிஷ்கள ஜங்கம தேவன், பாதத்திற்கு நமஸ்காரம் செய்யவேண்டியது, ஈதல்லாமல்.

விப்ரனே தெய்வ மென்று நம்பி ஆராதித்த கௌதமருக்குக் கோவதை தோஷப் பிராப்தமாயிற்று, இன்னும்விப்பிரனே தெய்வ

மென்று ஆராதித்த கர்ணனுக்கு கவசம் போயிற்று, ஆனதினால், குருலிங்க ஜங்கமமே கனமென்று நம்பிபூஜித்த காரணம் செவ சோளர்கள், (63) புராதனர்கள், (780) அமரகணங்கள், சாயுஜ்யபத ஸ்தராகி நிஜமோக்ஷத்தை யடைந்தார்கள், கேளும் நந்தி நாதா

## (17) பிரளய காலம்.

கணக்கில்லாத பிரம்மாக்கள் பெயரில்லாது போனார்கள், கோடி விஷ்ணுக்கள் லயமானார்கள். சமுத்திர மணலவ்வளவு இந்திரர்கள் இறந்து போனார்கள், சிவசிவா மாரணம் யாரையும் விடுவதில்லை, ஆதிருத்திரன் கண்ணிமை சிமிட்டுவதற்குள் இவ்வளவுமாயிற்று, அந்த ருத்திரரெல்லாரும் பிரளயத்திற்குள்ளாகிப்போனார்கள், இன்னும் சசிதரர், கௌரீபதி. ஈஸ்வரன், சதாசிவன், யந்த்ர ஜீவ, தந்த்ரஜீவ, பசுபதி, விருஷபவாஹனர், இப்படிப்பட்டவர்களெல்லாரும் பிரளயத்திற்குள்ளாகி யிருக்கும்போது, பிரளயவிரஹித பராத்பர சிவலிங்க ஜங்கம மூர்த்திக்கு சமஸ்த பிரளய மெல்லாமிருந்து பாசிவ ஜங்கமமூர்த்தியின் முழங்காலுக்குத்துணியைக் கட்டினார்கள், என்னவென்று பிரளயகாலம் ஜங்கமலிங்க மென்று.

### ஸ்ரீ ருத்ரேள வாச சுலோஹம்.

லயம் ச்ரஷ்ட லயர்ஜ ஜாதர் லயருத்ராதி தேவத:
அஹம்மே வாலயந் த்ருஷ்ட சீக்ரந்து சிவபூஜனம் (139)
ஜீவிதஸ்யம் ருதம்த்ருஷ்ட அர்த்த பிராணேன நாஸ்திகம்,
க்ஷணம் க்ஷணந்து மித்புக்தம் சீக்ரந்து சிவபூஜனம்,(140)

பிரம்மன்தான் நித்திய னென்றால், நித்யனல்ல, அனித்தியனே பிரம்மன் இறந்து போனான், விஷ்ணு தான் நித்திய னென்றால் விஷ்ணுவும் நித்தியனல்ல, அநித்தியனே, விஷ்ணுவு மிறந்து போனான், ருத்திரன் முதலான சகல தேவர்களும் நித்தியரல்ல, அனித்தியர்களே ருத்திரன் முதலானமுக்கிய தேவர்களெல்லோரும், இறந்துப்போனார்கள், யாருக்கும் இச்சரீரம் ஸ்திரமல்ல. ஒன்றே ஸ்திரமானது எது வென்றால் ஜல்தி ஜல்தியாக சிவபூஜை செய்து நிஜமுக்தி சாம்ராஜ்யத்தைப் பெறுவதே ஸ்திரமாகும், இதுசாதித்த ஜங்கம பக்தன் நானென்றறிவாய் நந்தி நாதா. இன்னு மிருக்கப்பட்ட தெல்லாம், கானல் நீரைப்போலவும், நீரின்மேல் குமிழி போலவும், புல்லின்மேல் பனிபோலவும், அப்பிரத்யக்ஷம் மாதிரி தோன்றி யடங்கும், இச்சரீரம் யாருக்காகிலும், ஸ்திரமல்ல.

## (18) விஷ்ணு சிருஷ்டி

### சர்வம் மித்தை, சுலோஹம்

பிராணயோக வியோகஞ்ச தனயோக வியோகத:
நிமிஷம் நிமிஷார்த்தஞ்ச சீக்ரந்து சிவபூஜனம் (141

பிராணயோகம் ஸ்திர மென்றால் அதுவும் ஸ்திரமல்ல, சாய ங்கால சந்தையைப்போல பிரிந்துப்போகும், தனம், தான்யம், பெண்ஜாதி, பிள்ளைகள், ஸ்திரமென்றால் அதுவும் ஸ்திரமல்ல, நிமிஷ நிமிஷார்த்தத்திற்குள் சம்சாரமென்பது சாயங்கால மஞ்ஜள் வெய்யிலைப்போலவும், காட்டின் நிலவைப்போலவும் தோன்றி யடங்கும்,

ஸ்ரீ ருத்திரேளவாச, சுலோஹம். (2)

மாதா நாஸ்தி பிதா நாஸ்தி, நாஸ்தி பிதுரு சஹோதர :
நாஸ்தி பத்னி தனம் லோஹம் தர்ம மேகந்த் வயம் க்ருடம் (142)

இன்னு மெதுவுங்கூடவராது, தாய்வாராள், தந்தையும், வாரான், அண்ணன் தம்பி அக்காள் தங்கை முதலானவர்கள் யாருங் கூடவரமாட்டார்கள், பெண்ஜாதி பிள்ளைகள், தனம், தான்யம், லோஹம், முதலான தெதுவும் தன்கூட வரமாட்டாது, தான் செய்த சிவபூஜையின் பலன் ஒன்றுமாத்திரம் கூடவே வரும், ஆகையால் சீக்கிரம் சீக்கிரமாக சிவபூஜைக்குத் தான தர்ம பரோ பகாரம் செய்து, சிவபூஜை செய்வது தனக்கு தர்மசங்கிரஹம், ஹரன் கோபித்தாலும் போகாது, இத்தர்மம் தனக்கல்லாது போகாது, இத்த ர்மம் ஒன்றே தன்கூடவே வரும், இதைத் தவிர மற்றொன்றும் கூடவராது, காலன் வருகிறான்' வருமுன்னே ஜல்தி ஜல்தியாக எச்சரிக்கையுடன் சீக்கிரம் சீக்கிரமாக சிவபூஜை செய் யவேண்டியது, இது விஷ்ணுவின் சிருஷ்டி, இன்னும்

(19) பிரஹ்ம சிருஷ்டி, ஸ்ரீ ருத்திரேளவாச, சுலோஹம்.

பிதாமஹஸ்து சகலம் ஜகஸ்தாவர ஜங்கமம்
மேகஸ்த வித்யா ரசனும் கிருமி கீடக சர்வதா (143)
சது : பாதக் விபாதஸ்ச ஷட்சதஸ்யா மிருகஸ்ததா
அண்டஜ ஸ்வேத ஜச்சைவ உத்விஜந்து ஜராயுஜம்
ஸ்த்ரீ புத்ர மித்ர பந்துச்ச தனதான்ய முபக்ரமாத்
இகிசர்வ ஜராதீனும் ப்ரஹ்மாகத சமுத்பவம் (144)
சிருஷ்டீச குருதே பிரஹ்ம பாலனந்து ஜனார்த்தன:
காரேணந்து மஹாதேவம் கர்த்தவ்யம் தாதிய்யதெ (145)
சமாயஞ்ச குணச்சைவ ஸ்த்ரீ புஞ்சம் சன புஞ்சகா
உத்பத்ய ஸ்திதி சம்ஹார தஸ்யவாச பலானிச (146)

---

(குறிப்பு:) மஹா ராஜா துறவில் (3)

பஞ்சபூத மழிந்து போம் பாநுதிங்க ளுடுக்கள் போம்
வஞ்ச வசுரர் மடிந்திடுவர் மாகர் பதம்போம் வல்லரக்கர்
துஞ்சுவார்கள் ‡ போகிபதம் துஞ்சும் பிரம்மன் பதந்தானும்
துஞ்சுந்திருமால் பதந்துஞ்சும் துஞ்சாதொன் றேபரமபதம்

‡ போகி தேவேந்திரன், பத்திராதிபர்

கடசிருஷ்டி யதாதோயம் பூரயித்வா யதா ததா
ஸ்த்ரீணும் புத்தி ரிதீயோதோ கச்ட கச்ட மஹோகூஜா (147)

சர்வமுமான வஸ்துக்களெல்லாம் பிரம்மனின் உற்பத்தியும், விஷ்ணுவின் ஸ்திதியும், ருத்திரனுல் லயமாம், அதெப்படியென்ருல் பிரம்மன் சகலருக்கும் பிதாமஹன். பிரஹ்மனுல் ஜகத்து ஈரேழு (14) உலகம், புவனம், பவனம், அஜாண்டம், பிரம்மாண்டம், சசராசரம், அண்டஜம், பிண்டஜம், அசங்கியாத அப்ஜவாண்ட கேசர, பூசர, புவனசர, ஸ்தாவர, ஜங்கம, மரம், செடி, பூமி, பர்வதங்கள், வாய்வு, பிராணிகள், மேகஸ்த, சமஸ்த, இடி, மின்னல், முகில், இன்னும் மேகத்தின் சிருஷ்டிகள், வித்தை, கலிவித்தை, (11) கோடி அவித்தை, (90) லக்ஷம் உபமந்திரம், அகணித சப்த கோடி மஹா சிவ மந்திரம், அகணித தனுர்வித்தை, சவுதா தாளம் ரசாணும் நவரசம், கனரசம், ஷடுரசம், பஞ்சரசம், மூலரசம், ரச, ரசாயனங்கள், கிருமி, விஷமுள்ளசர்ப்பங்கள், பார்வ கீடக சரகீடக புண்டரீக, முதலான ஹ—ள (புழு) ஜீவராசிகளுக்குள், நான்குபாத பசுஜாதிகள், த்விபாத(இருகால்)மனுஷ்யன், முதலான நாநாஜீவிகள் ஆறுபாத (ஆறுகாலுள்ள) துபபி. ஈ முதலானதும், மிருகங்கள், பக்ஷிகள். அன்னம், முதலான பக்ஷிகள், சிங்கம், சார்த்தூலம், சரபம் யானை, சமரீ, சல்யபல்ல, அண்டஜம், பிண்டஜம், உத்பிஜம், ஸ்வேதசம், ஜராயுஜம் ஸ்த்ரீ, புருஷ, புத்ர, பவுத்ர, களத்ர. தனம், தவநிதி நிதானம், அஷ்டமஹதைஸ்வர்யம் (18) தான்யம, நவபதார்த்தங்கள், ஸ்ரீலிங்கம், புல்லிங்கம், நபும்சகலிங்கம் த்ரிபாதாதிதேவதைகள், நாநாகடம், முக்கிய பரமாத்மா கடஸ்வரூபங்கள், இப்படிச் சர்வ வஸ்துக்களும் பிரம்மனின் உற்பத்தி இன்னும்

## சர்வ ஜீவிகளின் கணித சுலோஹம்

அண்டஜம் விம் சதிர் மேகம் லக்ஷ ஜீவந்து திஷ்டச
ஸ்வேதஜம் ஜீவமாத்ரேண ஏக விம்சதி சம்பவம் (148)

ஜராயு ரேகவிம்சத்ய லக்ஷஜீவஸ்ய சம்பவம்
உத்விஜம் ஏகவிம்சத்ய ஜிவராசிஸ்ச உத்பவம் (149)

லக்ஷதே ராஜ ஜச்சைவ த்யோதிவெள ஸ்வேஸ்திதம்ஸ்ருணு
கதயாமி கணச்சைவ பிரசாதம் குருமே பிரபு (150)

தசெள தசாஸ்ய பாகேன உன் பெஜம் விம் வதிர்மதா
சது : பாத சமாயுக்தம் செளராசி லக்ஷ ஜீவயோ : (151)

விம்சதேஸ் சப்த லக்ஷம்து. பிசா சோ ரபுமேவச
அஷ்டதே குலயோர் லக்ஷம் தசலக்ஷம் சதுஷ்பதி (152)

தசமேகம் பத்ரிகம்ச தசத்வயேன மிருண் மயோ
செளரா செளசார கீர்வாணே சோடஷேன கிருமிஸ்ததா (153)

ஊர்வஸ்யா சதுரங்கேன, காயத்ரிச் சஸ்ய பச்சிமம்
நாநா யோனி சஹஸ்ராணி, கத்வாச் சைவது மாயயா (154)

சர்வஜீவ யோனி முக சௌராசிலக்ஷ ஜீவராசிகளின் கணிதம் கேள் விருஷப கந்தர நாயகா, ஜல சரங்களின் குலம். (7) லக்ஷம், சர பூதப்ரேத, பிசாச, பிரம்மராக்ஷச, ஜட்டிக, பேதானம், மருளு, தண்டங்கள் குலம் (7) லக்ஷம்'' தரு, த்ருண, கிரி, பூமி, (8) லக்ஷம் எருமை, பசு, யானை, சிங்கம், புலி, முதலான சதுஷ் (நான்கு)பாத மிருகாதிகளின் குலம் (10) லக்ஷம்'' கருடன், சாளுவம், சரபம், கண்ட பேருண்ட முதலான பக்ஷிகளின் குலம் (10) லக்ஷம், தேவ கணம், மனுஷ்ய கணம், ராக்ஷச கணம், என்னும் மூவித கணராசிகள் (12) லக்ஷம், தேவர்களின் குலம் (14) லக்ஷம், புழுக்களின் குலம் (14) லக்ஷம் இவையெல்லாங்கூட்டி ஒன்றாய்ச்சேர்க்க யோனி முக சௌராசி லக்ஷ ஜீவராசிகள் குலம், இதற்கு விபரம், அண்டஜத்தில் (21) லக்ஷ ஜீவராசிகள் பிறந்தன, சுவேதசத்தில் (21)லக்ஷ ஜீவராசிகள் பிறந்தன, சராயுஜத்தில்(21)லக்ஷஜீவராசிகள் பிறந்தன உத்பீஜத்தில் (21) லக்ஷஜீவராசிகள் பிறந்தன, இப்படியாக நான்கு யோனிகளிலும் சௌராசி லக்ஷ ஜீவராசிகள்பிறந்தன, ஒவ்வொரு யோனியிலும் ஆயிரம் தடவை பிறந்துழன்று அநுபவிக்கின்றன, சமுத்திர அலையைப் போல ஒவ்வொரு கோடி பிறக்கின்றன, ஒவ்வொரு கோடி அனுபவிக்கின்றன, இச்சௌராசி லக்ஷ ஜீவஜந்துக்கள் பிறக்காத யோனியில்லை, மிதிக்காத பூமியில்லை, உண்ணாத ஆஹார மில்லை,காணாத துக்க மில்லை,இப்படி (84) லக்ஷஜீவராசிகளுக்கும் பூர்வம் என்றால் கிழக்கு, பச்சிமமென்றால் மேற்குயென்றிரண்டு துவாரமுண்டு, அதெப்படியென்றால்

## (20) இரண்டு துவாரங்கள்.

பூர்வத்வாரமென்பது, குதிரைகர்ப்பத்தில் பிறந்து சௌர்யாசி லக்ஷ ஜீவராசிகளின் கர்ப்பத்தில் ராட்டினத்தைப்போல திருப்பத் திரும்பப்பிறந்துழன்று அனுபவிப்பார்கள், இன்னும் பச்சிமத்வாரமாவது பசுவின் கர்ப்பத்தில் ஜனிப்பது,இன்னும் நாநா யோனியில் சஹஸ்ர (ஆயிர)ம் தடவை திரிந்துத்திரிந்து கடைசியாக காயத்ரீ கர்ப்பத்தில்பிறந்து பிறகு மனுஷ்யர்களின் யோனியில் பிறந்து நரஜன்மமாகிச் சுகத்துடனிருப்பார்கள், ஆனதால் பசுவின் கர்ப்பத்தில்வந்தால்மனுஷ்யன் கர்ப்பத்திற்கு வந்தவனென்றறியவேண்டியது, குதிரை கர்ப்பத்தில் பிறந்தால் நாநா யோனி சௌராசி

---

குறிப்பு:—பூர்வகாலத்தில் வீரசைவ(லிங்காயத)ர்கள் விவாஹம் தீக்ஷை பட்டாபிஷேகம், முதலான சுபகாலங்களில் அசுவத்தி(குதிரையி)ன்மீதமர்ந்து ஊர்வலம் முதலானவைகள் வருவதில்லையெனவும் அப்படி வரக்கூடாதெனவும நந்தியி (எருதி)ன் மீதமர்ந்து ஊர்வலம் வருவதுண்டெனவும் இதுவே விதியென்றும் கர்ன பரம்பரையாகக் கேழ்விப்பட்டதினுண்மை இப்போது வியக்தமாக விளங்குகின்றதல்லவா. ஆசிரியர்.

லக்ஷ ஜீவராசிகளில் திரும்பித்திரும்பிவருபவனென்றறியவேண்டியது, இது பூர்வ, பச்சிமத்திற்குப் போகும் இரண்டு துவாரங்களென்றறியவும் இவ்விரு துவாரத்தின் சிருஷ்டியும் பிரம்மசிருஷ்டியென்றறியவும்.

## (21) பரசிவ ஜங்கமலிங்கத்தின் சிருஷ்டி

பரசிவ ஜங்கமலிங்கத்தின் சிருஷ்டியைக் கேள் விருஷப கந்தர நாயகா, இன்னும் பூமியின்சிருஷ்டி முதல்சொன்னசர்வஜீவர்களுக்கும் நிலையுண்டென்ருலோ நிலையில்லை, நிபமுமில்லை, இருளில்லை, பகலில்லை. சர்வசூன்ய நிராகாரம். அந்தர வந்தரங்களாகிச் சகல ஜீவிகள் திரிந்துக் கொண்டிருக்கும். ஏனென்ருல் காளத்திராவிட மஹாபிரளயத்து சிக்ஷாகுருக்களென்னும் ஜலம் பெருகி மேல் வந்து அனந்தகோடி ஜலப்பிரளயங்கள் மெலுக் கெழும்பும் போது அப்பிரளயத்தின் மேலே பரசிவன் பரப்பிரம்மன் ஆதிநாராயணன் இப்படி மூவரும் தங்கள் தங்கள் பீஜ சக்தியை ஆலம்யிலை செய்திட்டு அந்த ஆலிலையின் மேல் சகல தேவதைகள் கூடிக்கொண்டு உட்கார்ந்தார்கள். இப்படியிருக்க பரமசிவன் ஓர்நாள்பரப்பிரம்மன் ஆதிநாராயணன் இவ்வுபய மூர்த்திகளின் முகத்தைப் பார்த்தான். ஏனென்ருல் ஜகத்தைச் சிருஷ்டிக்க வேணுமென்றுப் பார்க்கவும், ஆதிநாராயணன் பரப்பிரம்மன்இவர்கட்கு ஜகத்தைச் சிருஷ்டிக்கும் சக்தி பிறக்காமையாலிவர்கள் அப்பர சிவனை நமஸ்கரித்து ஜெகத்தை சிருஷ்டியுங்களென்று விண்ணபிக்கவும் ஆதி பிரம்மன் ஆதி விஷ்ணு இவ்விருவர் வார்த்தையுங் கைக்கொண்டு அப்பர சிவ ஜங்கமலிங்கம பிரளயத்தின் மேல் தன் கரணேந்திரியங்களின் கடைவிரலினுல் அப்புறமெடுத்துவைக்கவும், அவ்விடமிருவர் அசுரர்கள் பிறந்தார்கள். அவர்களெப்படிப் பட்டவர்களென்ருல் நிலையில்லாத, நிபமில்லாத, அகணித பிரமாணயோசனையுயரமும் அவ்வள வகல சரீரமுமுள்ள தைத்தியர் பிறந்தார்கள், அவர்களி லொருவன் பெயர் மது, மற்ெருருவன் பெயர் கைடபன்,இம்மது கைடப ரிருவருக்கும் (66) கோடிதைத்தியர்கள் பிறந்தார்கள், இவர்கள் முன் சொன்னவர்களின் உயரமும் அகலமுமுள்ள தேஹத்தையுடைய இவர்கள் அகணித பிரம்மாண்டங்களை முறித்து முழுங்குவார்கள், இப்படி (66) கோடிதைத்தியருக்கு முக்கியமான மது கைடபர்களைப் பரசிவன் நிர்மித்து விட்டபடியால் இம்மது கைடபர்களினுலான (66)கோடிதைத்தியர்கள்ருத்திர சிருஷ்டியாகயா லிவர்கள் பிரம்ம சிருஷ்டியினுலான சகல தனுசரங்களையும் சகல கேசரஜீவிகளையும் ஒடித்துத்தின்னுமிவர்களை அப்பர சிவன் பார்த்து கால பைரவனிடம் சொல்லுவதாவது, கேசரஜீவிகளை முறித்து தின்னும் மதுகைடபர்களைக் கொன்று இம்மஹா ஜலப்பிரளயத்திற்கு சம்ஹாரஞ் செய்யென்றுச் சொல்லவும்,

ஸ்ரீ ருத்ரேள வாச, சுலோஹம்.

யக்ஷம்ச பைரவச்சைவ அஷ்டைதே ரஹ்தெதே ஜச:
சஷ்டாதி விததாவ்யாளம் தவவர்க்கம் விவர்ஜ்ஜயேத் (155)
ஆதாரமங்குடம்சாரி பக்ன சித்ர னராவணி
கல்பயே க்ருஹசாரிண்யோ பாரிஜாதேனமுத்பவ: (156)
ஓம் புவர்ப் புவனே வர்க்கம் ஓம் மஹா வசனேஸ்வரி
ஓம்தப: சசத்யத்ச சத்யதா சத்ய வாததி (157)
விம்சதிஸ்வர்க்க தம்துருஷ்ட காமினி ஸ்வர்க்க மூல்யனீ
அதளாயஸ்வயம் ப்ரிய்யே விதளோ சுதளோர்ஜ்ஜுபு (158)
மஹாதள பதேந்த்ரீணும் தளாதளேன ருஷ்யசு
பாதாளே சப்த தக்கேய சௌர்யாசி சாரநிர்மிதம் (158)

அப்பரசிவன் காலபைரவனுக்கு யென்ன சொன்னரென்றல், அம்மது கைடப ரென்னும் தைத்தியரின் முன் தலையைப் பிடித்து பாகிப்பா யென்றுச் சொல்லவும், அப்பரசிவன் ஆக்கினையிலைக் காலபைரவன் மாயாவேஷ மெடுத்துப்போய் அக்கேசரஜீவிகளைத் தின்றுக் கொண்டிருந்த அம்மது கைடப தைத்தியரின் முன்தலையைப் பிடித்து பாகிக்க (பிளக்க) வும். அப்பர சிவன் உபயராக்ஷசரை அதோ துவாரத்துள் அழுத்தி காளத்திராவிட காள துந்து காலப்பிரளய மென்னும் ஜலப்பிரளயத்தின்மேல்போடவும்அம்மஹா ஜலபிரளயத்தில் லயமானர்கள்,அப்பொழுது சதுர்த்தசபுவனம், பவனம், பூமிகளாயின, இப்படி உபயதைத்தியரை பரசிவன் மர்த்தித்து பிரளயத்திற்கு லயம் செய்துத் தன் அஷ்டமதகரிகளினல் அஷ்டதிக்கரிகளை நிர்மித்தான்,

ஸ்ரீ ருத்ரேள வாச, சுலோஹம்.

ஐராவத: புண்டரீகோ வாமன: குமுதோஞ்ஜன:
புஷ்பதந்தா சார்வ பௌம சுப்ரதீ கஷ்டதிக்கஜ: (160)
வ்யாளம் கர்க்கோட பத்மாளி அனம்தோ பலிதக்ஷகா
சலிசேஷமஹீந்த்ராணி அஷ்டமாம் கிரிப்பிர கீர்த்தித: (161)
த்ரிகூட சேஷமந்தாரோ ஹரிஞே முக்யதாம்பரி:
பௌஸ்கரோ வாஹினீகந்தோ அஷ்டசைலப் பிரகீர்த்தித: (162)
மூலவர்ணே அஸ்வதாணும் ப்ரஹ மண்யோ வடபத்ரயோ
நிதம்ப வுதும் பரச்சைவ மந்தார: பாரிஜாதக: (163)
க்ஷாரோ இக்ஷு மது சர்ப்பி ததி துக்தா பயஸ்ததா
ஜம்பு ப்லக்ஷ குசக்லௌம்ச சாகாசால்மலி புஷ்கர: (164)
லக்ஷம்து த்விகுணச்சைவச தார்த்தம் கோடிமானயோ:
க்ராவஜச்ச மத ஹந்த் ராத்யம் பஞ்ச சதகோடி யோஜனம் (165)
முக்ஷுநட் க்ஷத்ர சௌருப்யம் சந்த்ர தண்டு வ்ரஜம்ஜது:
மேகமண்டல நைகுஹ்யே அந்தரம்ச மஹாந்தரம் (166)

இஃது ஸ்ரீ ருத்திரபாரத மென்னும்
பிரஹ்மாண்ட புராண சங்கிரகம் முற்றிற்று,

# வீரசைவ (லிங்காயுத) விஜயம்.

## ஷட்வித சைவ பிரபேதங்கள்

### சுலோஹம்.

அநாத்யாதி விசுத்தஞ்ச கேவலம் மிஸ்ரமேவச
வீரசைவ மிதிப்ரோக்தம் ஷட்விதம் சாஸ்திரசம்மதம்
அநாதி: ஸ்யாத்பர சிவஸ்சாதிஸ் தக்ர சதாசிவ:
விசுத்தம், சைவ மத்வைதம் கேவலம் சிவயோகவத்
தீக்ஷாயேனம் விமிஸ்ரந்து வீரசைவ மதோத்தமம்
விசுத்தாநாதி மிஸ்ராணு மந்தர்லிங்கஸ்ய தாரணம்
ஆதிகேவல வீராணும் பஹிர் லிங்கஸ்ய தாரணம்
அந்தர் பஹிஸ்ஸ சம்வியாப்ய தன்மயத் வேநவீரதா

(1) அநாதி சைவம், பரசிவனே இதனின் அநுஷ்டாத்ருவாகியிருக்கிறான். (2) ஆதி சைவம், சதாசிவ மஹேஸ்வராதி சகல தேவதைகளிலும் இம்மதமுண்டு (3) விசுத்த சைவர், அத்வைதிகளே விசுத்த சைவர்களாயிருக்கிறார்கள். (4) கேவல சைவர் தக்ஷணாமூர்த்தி, சனத் குமாராதிகள், சுகர், வாமதேவாதிகள் கேவல சைவர்களாயிருக்கிறார்கள். (5) மிசிரசைவர், அகஸ்தியர் வசிஷ்டர் விசுவாமித்ராதி ஸ்ரௌதபார்த்த மஹரிஷிகளெல்லாரும் மிசிர சைவராயிருக்கிறார்கள். (6) வீரசைவர், உபமன்யு, நாராயணாதிகள், நந்தியாதி பிரமதர்கள், சுராசுர மஹருஷிகள், முனி முக்கியர்கள், வீரசைவராயிருக்கிறார்கள். இவர்களில், 1, 3, 5, லக்கமிட்ட சைவர்களுக்கு அந்தர் லிங்கமும், 2,4,6, லக்கமிட்ட சைவர்களுக்கு பஹிர் லிங்க தாரணமாகவு மிருக்கிறது. இது இவ்வெல்லா சைவங்களிலும் வியாபகமானதினால் வீரசைவமே சர்வ சிரேஷ்டமானது.

### வீரசைவாசார லக்ஷணங்கள்.

இன்னிசை சித்தராம திரிமல் திரவ।
நெரநபித்ரு மாத்ருசுக வெம்புவ தாணவ மலம।
துன்னதகுல கோத்ர மெம்தெனலு மாயாபலம்
தனம் கார்மிகமலம்। முன்னிவம்பிடபேக
தென்தெனலு சிவசிவெய। ரென்ன பித்ரு மாத்ருகளு
சிவகும் சிவநொடநே। என்னவல்லெம்பு வம்கில்லா
மலத்ரயம் கேளெந்து நிரவிசிதனு। ஜாதி சூதக
ஜனனசூதகங்களுமஹா। ப்ரேத சூதக நித்திய சூதக
மதுச்சிஷ்ட। சூதகமிவேபஞ்ச சூதகம ஸ்தாவராத்
யன்யலிங்கத பஜனெயா। ஓதன்ய தீர்த்த மன்ய
க்ஷேத்ர யாத்ரெகளி। காதுரதெவோவு தீகன்ய
தேவார்ச்சனெவி। நீத பவியாத வரதன்ன
தாய்தந்தெ பந்துகளெனலு பவிசங்கவு।

என் தந்தை, என் தாய், என் மக்கள் என்னும், அபிமானமே ஆணவமூலமெனப்படுகிறது குலங்கோத்ராதிகளின் அபிமானமே மாயாமலமெனப்படுகிறது. தனதி (பொருள்)களின் அபிமானமே காமிக மலமெனப்படுகிறது. மும்மலங்களான இம்மூன்றையும், விடவேண்டியது. எப்படியென்றால் சிவனே தந்தை, பார்வதியே தாய், சிவாசாரத்தவர்களே என் குலஸ்தர்கள், தனதி சர்வமும், சிவனதேயல்லாமல் என்னுடைய தொன்றுமில்லை. என்றிப்படியாக அபிமான சூனியனாயிருக்கவேண்டியது. மற்றும் ஜாதி சூதகம், ஜாதியபிமான பேதத்தாலுண்டாயிருக்கிறது. ஜாதா சௌசம், ஜனன சூதகமாயிருக்கிறது. மிருதா சௌசம் பிரேத சூதகமாயிருக்கிறது. ஸ்பர்சதோஷம் நித்திய சூதகமாய் இருக்கிறது. எச்சில் முதலானது உச்சிஷ்ட சூதகமாயிருக்கிறது. இவைகளே பஞ்ச சூதகங்களாகும். இவைகளை விடவேண்டியது.

எப்படியென்றால் எச்சாதியவனானாலும், மனம் பரிபக்குவமாகி லிங்கதீக்ஷையானால் அவர்களெல்லோரும் பரிசுத்தமான சிவகுலமே ஆவதாலும் இன்னும் லிங்கஸ்தனனபிறகு பூர்வ ஜாதிபேத தாரதம்மியங்கள் அனாவசியமென்று அவைகளை விட வேண்டியது. லிங்கமில்லாதவன் எச்சாதியவனானாலும், அவன் அசிவகுல மானதினால் அச்சம்மந்தம்லிங்கதாரிகளுக்கு யோக்கியமானதல்ல. இப்படி தெரிந்து விடுவதே ஜாதி சூதக பரித்யாகமாகும். லிங்க தீக்ஷையாவதே ஜனனமாயிருக்கிறது. இது பவித்திரமானதினால் இது முதல்கொண்டு ஜாதா சௌச பரித்தியாகமே ஜனன சூதகத்தை விடுவதாயிருக்கிறது. இன்னும் லிங்கதாரியின் பிராணன். இஷ்ட லிங்கத்திற்குச்சம்மந்தப்பட்டும் குரு கொடுத்த லிங்கம், பிராணலிங்கமென்றும் அறிக்கைகொள்வதால் லிங்கதாரியின் பிராணன் லிங்கைக்யமாகுமே யல்லாமல் லிங்கதாரிக்குப் பவிகளைப்போல ப்ராணோத் கிரமண மில்லை. ஆனதினால் லிங்கதாரியின் சரீரம் மரணமடைந்தால் லிங்கதாரிகளுக்கு மரண சௌசமில்லையென்று விடுவதே பிரேதசூதக பரித்யாகமாயிருக்கிறது. எப்போதும் சிவலிங்க பஸ்ம ருத்ராக்ஷதாரணம், பிரணவ பஞ்சாக்ஷரி, ஜபங்களினால் பரிசுத்தனாயுள்ள லிங்கதாரிக்கு அவஸ்தாத்திரயங், (சாக்கிரம், சொர்ப்பனம். சுழுத்தியென்னும், மூன்றவஸ்தை) களிலும், அசுசி சம்மந்தமில்லை. எப்படியென்றால் தாமரையிலையைஜலம் நனைக்கா (ஒட்டா) வாறுபோல அசுசித்வமானது லிங்கதாரியை நனைப்ப (ஒட்டுவ)தில்லையென்றறிந்து நித்திய பூதத்துவ நிச்சய பூர்வமாக அபவித்ரதா சங்கையை (அசுத்தவழக்கத்தை) விட்டிருப்பதே நித்ய சூதகபரித்யாகமாயிருக்கிறது. லிங்கதாரிகளின் ஆரோகணம் அமிர்தபிரௌசனம் துல்லிய(சுத்த)மானது. லிங்கதாரிகளின் ஜலப்பிராசனம்

சுத்தாசமனசத்ருசமானது. பிரணவ பஞ்சாக்ஷரி மந்திரம், சம்யுதனை அவ்விலிங்க தாரியின் முகம், பல், நாக்கு, முதலானவைகளின் ஸ்பர்சனமானது. இடைவேளைபக்ஷணத்திற்குச் சமானமானது இன்னும்,லிங்காங்கியின் எச்சில் சோமபான(மதுபான)த்தைப்போல பரிசுத்தமானது. இப்படியாக நிஸ்சந்தேஹமாகி எச்சிலென்னும், பேதத்தைவிடுவதே முக்கியதர்மமாயிருக்கிறது. குருவின் எச்சில் சிஷ்யனுக்குத் தோஷமல்ல. புருஷனின் எச்சில் பெண்ஜாதிக்குப் பிரத்யவாயுவல்ல.

அபிவாயஸ் சண்டால: சிவ இதி வாசம்வதேத்
தேநசஹ சம்பவசேத் தேன சஹபுஜ்ஜீத்ர

சண்டாளனானாலும், சிவமந்திரத்தைப் படனம் செய்தால் அவனுடன் சேர்ந்து சாப்பிடவேண்டும் என்று நிகமாகமங்கள் சொல்வதால் சிவபக்தரிடத்தில் பரஸ்பரமாக எச்சில் தோஷமில்லை. சமமூர்த்திகளான மாஹேஸ்வர புக்தோச்சிஷ்டம் பக்தி பாவனமானது. ஜங்கமர்கள் சலித்த(உண்ட)து பிரசாத பானவமாயிருக்கிறது குருலிங்க ஜங்கமத்திற்கர்ப்பிதமானது பதிதபாவனமா (பதிதர்களின் பாதித்யத்தை பரிகரிக்கிறதா) யிருக்கிறது. இப்படியாகத் தெரிந்து லிங்காங்கசங்கமில்லாத பவிகளின் சம்மந்தத்தை எச்சிலென்று விடுவதே உச்சிஷ்ட சூதக பரித்யாகமாயிருக்கிறது. இம்மாதிரியாக பஞ்ச சூதகங்களையும் பரித்யாகம் செய்ய (முற்றும் விட) வேண்டும்.

இன்னும் சமாதியில் ஆத்மலிங்காராதனையும். தியானத்தில் சிவலிங்கார்ச்சனையும், அரோகணத்தில் குரு கொடுத்துத் தான் தரித்துள்ள இஷ்டலிங்கார்ச்சனையும் சிவ தருமத்தில் ஜங்கம லிங்கார்ச்சனையும், ஆகப் பஞ்ச லிங்கார்ச்சனைகளையும் செய்யவேண்டுமேயல்லாமல்,பாஹியங்களான க்ஷேத்திர முதலானவைகளிலுள்ள ஸ்தாவர லிங்கங்களின் அர்ச்சனையை செய்யக்கூடாது ஆனலதை விரோதிக்கக்கூடாது, குரு, லிங்க ஜங்கம பாதோதகமே புண்ணிய தீர்த்த மல்லாமல் இதர (அன்னிய)மான தீர்த்தங்களைப் பரிக்ரஹிக்க(கைக்கொள்ள)க்கூடாது ஜங்கம குருமடம் நிஜசமாதிஸ்தலங்களேபுண்ணிய க்ஷேத்திரங்களல்லாமல் இதரக்ஷேத்திரயாத்திரைகளுக்குப்போகக்கூடாது. தன் குரு முகத்தில் தீக்ஷாக்கிரமத்தில் தனக்கநுக்கிரஹமாக வந்திருக்கும் இஷ்ட லிங்கார்ச்சனையும் வீரசைவாசாரமும் தனக்குக்கார்த்வ்விய (செய்யத் தக்கதேய) மல்லாமல் இதர தேவதைகளையும் இதர தர்மங்களையும் தான் பஜிக்கக்கூடாது, லிங்காங்க சங்கமில்லாத பவிகளை, அப்பா, அண்ணா,தம்பி மைத்துனா, அக்கா, அம்மா, மகனே யென்றுக்கூப்பிடக்கூடாது, பவிகளிடத்தில் அபிமானம் வைப்பதே பவிசங்கமெனப்படும் இப்படிப்பட்ட பவிசங்கத்தை விடவேண்டியது

### வீரசைவ விதி, சுலோஹம்.

லிங்கேன சமனேயத்யம் பிராணஸ்யெஷ்டி நசர்வதா
அலிங்கிசங்க சூன்யத்வம் ஸ்வவிரோதி நிஹம்த்ருதா
ஸ்வத்யா பிமான ராஹித்யம் சர்வஸ் மின்சைவபுத்திதா
பஞ்சலக்ஷண மெதத்தி வீரசைவம் பிரசக்ஷதெ,

லிங்கத்திற்கும், தன் பிராணனுக்கும், முடிபோடப்பட்டிருக்கிறது. லிங்கமெங்கிருக்கிறதோ பிராணனுமங்கிருக்கிறது, இம்மாதிரியாக பிராணனுக்கும் லிங்கத்திற்கும் சம்மந்த முண்டாயிருக்க வேண்டியது. இன்னும் லிங்காங்கி யல்லாதவர்களிடத்தில் சர்வ சம்மந்தங்களேயும் சர்வாத்மகனுய் விடவேண்டுமானல் அவர்களிடத்தில் அபிமானிக்கக்கூடாது, பவிகள்தொட்டஜல முதலானவைகள் தீண்டக்கூடாது,சிவதுரோஹிகளேயும்சிவநிந்தகர்களேயும் சிவசரணருக்கு விரோதிகளேயும், நிக்ரஹிக்கவேண்டும், பிரபஞ்சத்திலுள்ள எவ்வஸ்துவும், சிவனுடையதெனப் பாவிக்கவேண்டுமே யல்லாமல் தன்னுடையதென்று நினைக்கக்கூடாது, இப்பஞ்சலக்ஷணங்களுண்டாயிருப்பதே வீரசைவருக்கு விதியா(நியமமா)யிருக்கிறது,

சிவனே யாராதித்து மோக்ஷ மடையாதவர்கள்.

### சுலோஹம்.

தரண்யாகௌர வாத்யாஸ்து தருண்யா ராகவாதய:
பரஸ்த்ரீ வியசனுந் நஷ்டா ராவணுத்யா மஹாபலா:
த்யூதென நள தர்மாத்யா மத்ய பானேன யாதவா:
குஹகீனது கிருஷ்ணுத்யா அஹங்காரேண ராக்ஷசா:
சிவத்ரோ ஹெண தக்ஷாத்யா மதேனேந்த்ராத யஸ்சுரா:
நஷ்டாதானேன கர்ணுத்யா மிருகயாவ்ய சநாந்ருபா:
குருத்ரோஹாத்ரீ சங்க்யாத்யா நஷ்டாமுக்த்னிம்ய புன்னதெ

கௌரவ பாண்டவாதிகள் மண்ணுக்காக கார்த்துக் கெட்டார்கள், ராமர், முதலானவர்கள் பெண்ணுக்காகத் தேடியுழன்றார்கள், ராவணன், கீசகன், வாலி, இந்திரன், முதலானவர்கள், பரஸ்த்ரீவியசனத்தினல்கெட்டார்கள்,நளமஹாராஜன் தருமராஜன் முதலானவர்கள் சூதாடிக் கெட்டார்கள். யாதவர்கள் மதுவுண்டுச் செத்தார்கள். கிருஷ்ணதிகள், வஞ்ஜனே தந்திராதிகளினல் நஷ்டரானர்கள்,ஹிரண்யகசிபு முதலானராக்ஷசர்கள் வரப்பிரசாத கர்வத்தினல் கெட்டார்கள், தக்ஷப்பிரம்மா முதலானவர்கள் சிவதூஷணேயினல் கெட்டார்கள், இந்திராதிதேவதைகள் அதிகார மதத்தினல் தோற்றுப்போனர்கள், கர்னன் சிபிச்சக்ரவர்த்தி ததீசிமுனிவர், ஜீமூதவாஹநாதியர்கள், தானத்தினல் கீர்த்திக்காக நஷ்டரானர்கள், தசரதர் பாண்டவர், முதலானவர்கள் வேட்டையாடிக்

கெட்டார்கள், திரிச்சங்கு முதலானவர்கள் குருத்ரோஹத்தினல் கெட்டார்கள், இம்மாதிரியாகப் பிரபஞ்சத்துளனேக கோடி மஹா பிராணிகள் வெகு பிரக்யாதர்களாகி சிவபூஜைசெய்து பிரபலமாக பிழைத்திருந்தாலும் கடைசியிலவர்கள் காமக்ரோதாதிகளுக் கிரையாகிக் கெட்டுப்போனார்களல்லாமல் சிவக் ஞானத்தினல் வைராக்கியமடைந்து கிரமமாக மோக்ஷத்தைச் சாதித்துக்கொள்ளாமல் போனார்கள்,

மோக்ஷா பாசத்தை யடைந்தவர்கள்

சுலோஹம்.

போகோ பீஷ்மா தி காளும்ச ஜேந்த்ரஸ்ய புனர்ஜனி :
சம்ப்ராப்தாயேவ மன்யேபி முக்தாபாசாஸ்து நாம்ருதம்

பீஷ்மார்ஜ்ஜுனாதி கரிக ஜீவர்கள் பாகவதர்களென்னப் பட்டு மோக்ஷத்தை யடைந்த மாதிரியாக ஆபாசங்கொண்டார்கள். யெப்படி யென்றால் அவர்களிறந்த பிறகு மறுபடியும் சுவர்க்க நரகோப போகங்களைச் செய்த மாதிரியாக சுவர்க்காரோஹண பர்வத்தினல் தெரியவருகிறது, வைணவர்கள் முக்தி ஸ்தானமென்னும் வைகுண்டத்து ஜய விஜயர்களுக்காக விஷ்ணு பிறந்திறந்து முன்றது பிரசித்தமாகவேயிருக்கிறது, கஜேந்திரன் வைகுண்டத்திற்குப் போய் முக்தனுகாமல் மறுபடியும் கரிகால சோளனுகப் பிறந்து சிவனை ஆராதனைசெய்து ஞானத்தையடைந்தானென்பது காளஹஸ்தி புராணத்தினல் தெரியவருகிறது, அஜமிளன் ஜன்மங்களெடுக்கவேண்டி வந்ததே மோக்ஷாபாசமாகும், இப்படியாக யாரைப்பார்த்தாலும் புனராவர்த்தியுள்ள வைகுண்டாதிஸ்தானங்களுக்குப் போய்வந்த மோக்ஷாபாசரல்லாமல் திடமாக மோக்ஷத்தை யடைந்தவரில்லை. யக்ஞாதி கிருத்யங்களைச் செய்தவர்களும், உபவாசாதி விரதங்களை யநுசரித்தவர்களும் சத்தியத்தைச் சாதித்தவர்களும் தர்மங்களைச் செய்தவர்களும் தபஞ் செய்தவர்களும் யுத்தத்தில் மடிந்தவர்கள் முதலான எல்லோரும் புண்ணிய உலகத்தை யடைந்திருந்து புண்ணியம் தீர்ந்த பிறகு புனர்ஜ ஜனனமெடுத்தார்களல்லாமல்புனராவர்த்திரஹிதமான (ஜெனனமில்லாத) மோக்ஷத்தைச்சாதிக்க வில்லை,

சிவ பக்தியினல் மோக்ஷமடைந்தவர்கள்

சுலோஹம்.

ஸ்காந்தே பக்தவிலாசோக்தா: கண்டே சிவரஹஸ்யகெ
உபமன்யு முகாபக்தா: ஜீவன் முக்தாந சம்சய:
த்ரிசஷ்டி சம்க்ஞிகாயெச சாம்பவாஸ்து புராதனு:
தேஷாம்முக்தி: காஸ்தைவ ததாப்ராயோப வேசினும்

ஷோடசானும்து பக்தானும் கதாதச கணஸ்யச
சரஸ்வதீ சிவலோகாப்திஸ், சாரூப்யம் சிவயோகிநாம்
சகுணக்ஞான நிஷ்டானும், சிவசாயுஜ்ய முச்யதெ
நிற்குணக்ஞான நிஷ்டானும், சிவகைவல்ய மேவதத்.

ஸ்காந்த புராணத்துள் சிவரஹஸ்ய காண்டத்தில் பக்த விலாசமென்னும், பிரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கும் உபன்யு முதலான சிவபக்தர்களுக்கும், (63) பேர் புராதனர்களுக்கும், கரி காலச் சோழன், சத்தியேந்திர சோழன், மக்கண்ணைச் சோழன், பிரபாகர சோழன், திட்டவ்வெ, அம்மவ்வெ, களசங்கப்பெருமாள், தர்ம சோழன், உத்துங்க சோழன், பாண்டியன், ஜடைய நயினர், நம்பி நரசிங்கர், திருநீலகண்டர், மொனெதர சோழன், கைவல்ய சோழன், வீர சோழன், வீர பாண்டியன், திருஞ்ஞான சம்மந்தர், திருவல்லி நாசி, வாகீச சோழன், நிஷ்டூரத சங்கையன், கலிகாமன், திருக்குரும்பெய தொண்டன், கோளல நயினர், காரைக்காலம்மை, சிரியாளம்மை, தீபதகலி, கடஹுல்ல நம்பி, சாரநதர், மெளெகங் கைய்யர், அச்சுதய்யர், மளெயராஜன், குட்டதைய்யன், காளிங்க ராஜன், சன்னம்மாள், மடிவாள மாச்சைய்யர், குயவ குண்டய்யர், பியாட்ர கன்னைய்யர், மாணிக்கவாசகர் முதலானஇப்பட்ட மனுஷ் யர்களுங்கூட குருலிங்க ஜங்கம பிரசாதத்தினுல் சிவபக்திபுண் டாகி கைலாசத்திற்குப் போனுர்கள். இன்னும் சிவக்ஞான சித்த ரான மஹாத்மருக்குச் சாஸ்வதமான மோக்ஷம் சித்திக்குமே யல் லாமல் இதரர்களுக்குச் சித்திக்காதென்றறியவும்.

ஸ்ரீ குருப்யோ நம;
வீரசைவ, விஜய கிரந்த சுருக்கம் முற்றிற்று.

---

## சிவபூஜா பிரபாவமும் அதின் அவஸ்யமும்

ஸ்ரீபரமாத்மனின் பஞ்சாசனேத் பவரான ஜகத் ஆசார்யர்களி னுல் ஸ்தாபிதமான பரம பவித்ர வீரசைவ மதோத்பன்னரான பிரதியொருவருக்கும் சிவலிங்கபூஜையே போக மோக்ஷங்களென் னும் சத்பலனைக் கொடுப்பதாயிருக்கிறது, வேதோக்தங்களான சகல கருமங்களிலும் சிவபூஜையே உத்தமமான கருமமெனச் சொல்லப்படுகிறது, யக்ஞ யாகாதிகளைச் செய்வதினுல் சுவர்க்காதி போகங்களுண்டாகி அதையநுபவித்த பிறகு மறுபடியும் பவபந்த த்திற்கு வரவேண்டியதாகும், சிவபூஜா ரூபமான கருமங்கள் சவுக் யாதிகளைக்கொடுத்து அந்தியத்தில் புனர்ஜன்மரஹிதமான நித்திய முக்தியைக் கொடுக்கும். இதனுல் சிவபூஜாதத்பரனுக்கு போக மோக்ஷங்களிரண்டும் சித்திக்கும், பூருவத்தில் விஷ்ணு, ப்ரஹ்மன்,

இந்திரன்,குபேரன்,,முதலான தேவதைகளும் இன்னும் ராவணன், பாணசுரன், விபீஷணன், முதலான அரசர்களும், சாரதா, லக்ஷிமி சசீ,முதலானதேவியர்களும், மநு, முனிகளும், கந்தர்வ வித்யாதரர், முதலானவர்களும் பக்தியுடன் சிவபூஜையைச்செய்து தங்கள் தங்கள் இஷ்டார்த் தங்களை யடைந்து தன்னியரானார்கள்,ஆனதினால் பிரதியொரு வீரசைவ (லிங்காயத)னும் சிவதீக்ஷா சம்பன்னனாகி ஸ்ரீகுருவின லநுக்கிரகிக்கப்பட்ட இஷ்ட லிங்கத்தைத் தரித்தது முதலாக.

பக்த்யைவை கமனுபூத்வா யாவஜ்ஜீவம், பிரதிக்ஞயா
அர்ச்சயேத்தம் மஹாதேவ மாபன்னோபி சதாம்புத:

என்னும் பிரமாணத்தைப் போல தன் ஜீவனுள்ள பரியந்தமும் தப்பாமல் சிவ பூஜையைச் செய்யவேண்டியது. ஆனால் "ஸ்ரீயாம்சிபஹுவிக்ஞாநி" இக்காலத்திற்கு சத்காரியம் சத்விரதங்களுக்கு அநேக கஷ்ட பரம்பரைகள் லபிக்கும், ஆனாலு மந்த சிவபூஜா மஹாவிரதத்தை விடலாகாது. ஆனாலும் சில ஜனங்கள் மந்த மதியுடன் திடமான மனதில்லாமல் காலானுகுணமாக என்னவாயிற்றென்று சங்கடம் பிராப்தமான உடனேவிரதபிரஷ்டராவார்களல்லாமல் அதனால் எவ்விதப் பலனுமில்லை யெனத் துர்ப்போதனையைச் செய்வார்கள், பார்த்தீர்களா? இவர்களின் துர் மனதை இவர்களுக்கு சிவபூஜாதி விரதங்களைச் செய்த தக்ஷணமே பலப்பிராப்தியாக வேண்டுமாம். இது கேவல சுத்த அவிவேகமேயாகும் எப்படியென்றால் பூமியில் பீஜாரோஹணம் செய்த (விதைத்த)வுடனே பலன்கள் கிடைக்குமா. பால் கரந்தவுடனே நெய் கிடைக்குமா. இப்படிப்போல இவைகளுக்குக் காலாவதி வேண்டுமல்லவா. இன்னும் அனந்தகால பரியந்தம் திரிகரண (மனம், வாக்கு, காயமென்னும், முக்கரண)த்திலும், சுத்தமான பக்தியுடனும், திடமான மனதுடனும், சிவபூஜா விரதத்தை நடத்தினால் பரமாத்மன் திருப்தனாவான், ஆனதினால் சிவாசார சம்பன்னனானவன் இன்னும்.

ஸ்நாத்வாத் விவாரம் சிவமர்ச்ச யிஷ்யன்
புஞ்ஜீத ஞேசீன், நரகம் பிரயாதி

தினத்திற் கிரண்டு தடவையாவதும் ஸ்நாநம் செய்து சிவ பூஜையைச் செய்த பிறகே பிரசாதம் ஸ்வீகரிக்க வேண்டும். இப்படிக் கல்லாமல் க்ஷுதாதுரனாகி சிவபூஜை யில்லாமல் தன் உதரத்தி (வயிற்றி)ற்கு மாத்திரம் அன்னபானாதிகளைப் பர்த்தி செய்ப (நிரப்புகிற) வன் பிறகு நரகத்தில் விழுவானெனச் சொல்லியிருக்கிறது, மற்றும்,

யஸ்து லிங்கார்ச்சனம் தியக்தா பும்க்தேச க்ருமிகீடபுத்

எவன் லிங்கார்ச்சனையை விட்டுப்புசிப்பனே அவன் கிருகீடங்களைப் பக்ஷித்தவனாவான், இன்னும்.

த்விஜோ வாத்விஜநாரீ வா த்யக்த்வா ஸ்ரீலிங்க பூஜனம்
யதிபும்க்தே ததாயோனிம் சண்டாலம்பிராப்நுயா த்ருவம்

பிராஹ்மணபுருஷனுவதும்ஸ்திரீயாவதும்லிங்கார்ச்சனையைச் செய்யாமல் போஜனம செய்தார்களானலவர்கள் பின் ஜன்மத்தில் சண்டாளரின் கர்ப்பத்தில் ஜனிப்பதே நிஜமாகும். இத்தியாதி தர்ம சாஸ்திர பிரமாண மிருப்பதால் பிற தி யொரு மனிதனும் அதி யவஸ்யமாக சுத்தமான பக்தி பாவனையுடனும் சாந்த சித்தத்துடனும் நியாயார்ச்சிதமான திரவ்யத்தின (சன்மார்க்கத்தால் சம்பாதித்த பொருள்களா) லும் சிவ பூஜையைச் செய்யவேண்டியது. பக்தியில்லாமல் டம்பாசாரத்திற்கு அனியாயத்துடன் சம்பாதித்த திரவ்யத்தினல்செய்யலாகாது, செய்தாலும் நிஷ்பலமாகும், தனிக (செல்வ) னைலும், தரித்திர (வரிய) னேயானலும், பக்தியுடன் செய்த பூஜையே பரசிவனுக்கு திருப்திகரமாகும. உபயருக்கும் பேதமில்லாமல் பல பிரதானம செய்வான். இன்னும், சிவபூஜையே சிரேஷ்டமென்பதற்கு பிரமாணம்.

வீரசைவாசார பிரதீபிகை.

அக்னி ஹோத்ராஸ்ச வேதாஸ்ச யக்ஞாஸ்ச பஹுதக்ஷிணா:
சிவலிங்கார்ச்சனஸ்யைதே தோர்க்யம சேனேபி சோசபா:

அனந்த யக்ஞம் அக்னி, ஹோமம் முதலானவைகளைச் செய்தாலும் சிவபூஜையின் கோடி பாகத்திலொருபாகத்திற்குச் சாமானமாகமாட்டாது, மற்றும்

சாந்த்ராயண சஹஸ்ராணி தப்தகிருச்ர சதானிச
சர்வவிரதானி ஜீர்ணனி லிங்கஸ்யப் யார்ச்சநேக்ருதெ

கவாம் கோடி சஹஸ்ரஸ்ய யக்ஞகோடி சதஸ்யச
தானேதத்பல மாப்னேதி சகிர்தப்யர்ச நேகிருதே

சஹஸ்ர சாந்த்ராயணி விரதங்களையும், மற்றும் நூறு தப்த கிருச்சிர விரதாதிகளையும் செய்தபலனுக்காவதும் சிவபூஜைசெய்த பலன் அதிகமாக லபிக்கும், இப்படியாகவேகோடிகோதானம் செய்தாலும் நூறுகோடி யக்ஞங்களைச் செய்தாலும், இன்னுமிதர அசங்க்யாத தானங்களைச்செய்தாலும் கிடைக்கும்பலன் எவ்வளவுண்டோ அதைவிட மிச்சமான பலன் சிவபூஜையினல் பிராப்தமாகும்

யஸ்து பூஜயதே நித்யம் லிங்கம் திரிபுவனேஸ்வரம்
சஸ்வர்க்க போக்ஷ ராஜ்யஸ்ய க்ஷிப்ரம் பவதிபாஜனம்
வித்யாலா போதனம் சௌக்யம் குலீனத்வம் மனோகதம்
ராஜ்யம் மோக்ஷம்ச நாகோவா சிவபூஜா விதேபலம்

திரிபுவனாதிபதியான லிங்கமூர்த்தியை எவன் பூசிப்பனோ அவனுக்கு வித்யாலாபம் தனம் சௌக்யாதிகளுண்டாகி அந்தியத்தில் மோக்ஷ ராஜ்யத்திற்கு அதிபதி யாவானென்று வியாசாதி மஹாரிஷிகள் கொண்டாடியிருக்கிறார்கள்,

லிங்க புராணம்.

லிங்கஸ்யதர்சனாத் பிராதர்னிசி பாபம் வ்யபோஹதி
ஆஜன்ம ஜந்தோர்மதான் நோப்த ஜன்ம க்ருதம் நிசி

கூர்ம புராணம்.

கோடிஜன்மக் ருதம் பாபம் விரூபாக்ஷ ஸ்யதர்சனாத்
தத்சர்வம் நஸ்யதி க்ஷிப்ரம் வன்னினா தூலபாரவத் (1)

பிராதர் மத்தியான்ன சந்த்யா காலங்களில் சிவலிங்கத்தை தரிசனம் செய்துக் கொண்ட மாத்திரமே சப்த ஜன்மங்களில் செய்த பாவம் நசித்துப்போகும், ஈதல்லாமல் பிரதி சோமவாரத்திலும் சிராவண மாதத்திலும் மஹாசிவன்ராத்திரி பிரதோஷகாலங்களிலும் பரசிவ மூர்த்தியை விசேசோபசாரங்களுடன் அர்ச்சித்து குருலிங்க ஜங்கம பூஜையைச்செய்து கொண்டிருக்க வேண்டியது.

சிவதர்ம புராணம்.

அபக்ஷய பக்ஷகோவாபீ ப்ரஹ்மஹா யதிமாதுஹா
பிதருஹா பாலகாதீச கோக்ன: ஸ்ரீசூத்ரகாதக:
சர்வபாப யுதோவாபி முச்யதே லிங்கபூஜனாத்
நதத்ரதேசெ துர்ப்பிக்ஷம் நசமாரீ பிரவர்த்தனம்
நகாலே பீட்யதெ ராஜா பூஜ்யதே யத்ரசங்கர: (1)

சிவ பூஜையினால் சகல விதமானபாபங்கள் நிவாரணமாவதுமல்லாமல் எந்த தேசத்தில் சர்வரும் சிவபூஜாதி விரதநிஷ்டராயிருக்கிறார்களோ அவ்விடம் க்ஷாமபாதை ரோகாதி உபத்திரவங்கள் ராஜோபத்ர வாதிகள் கொஞ்சமாவதும் உண்டாவதில்லை.

இம்மாதிரியாக அநேக தர்ம சாஸ்திரங்கள் போதித்திருந்தாலும் வீரசைவரா (லிங்கதாரிகளா) னவர்கள் சிவாராதனையைக் கிரமமாகச் செய்யாமல் அசாஸ்வதமான (நிச்சயமில்லாத) தங்கள் தங்கள், வியாபாரம், உத்தியோகம், விவசாயம். முதலான காரியங்களினால் திரவ்ய சம்பாத்ய ஆசைக்குட்பட்டு சிவபக்தி சிவபூஜா சிவகதா சிரவணாதிகளைத்தியாஜ்யம் (விலக்கு) செய்து வர்த்திப்பதினாலேயே தேசத்தில் மழைவிளைவுகளில்லாமல் வியாதிகளினால் பீடிதராகிறார்கள்.

காலேவர்ஷது பர்ஜன்ய: பிருதிவீ ரஷ்ய சாலினீ
தேசோயம் க்ஷோபரஹித: நிர்ப்பயாஷ் ஸம்துமானவா:

15-7-29- உ. பிரபா பத்திரிக்கையின் மொழிபெயர்ப்பு

பக்தஸ் தலம், மஹேசஸ் தலம், பிரசாதிஸ் தலம், பிராண லிங்கிஸ்தலம், சரணஸ் தலம், ஐக்யஸ் தலம், இந்த ஆறும் ஷடங்கங்களாகும். இவ்விடம் ஆறுவதான ஐக்கியஸ் தலமானது சாத்திய ரூபமாயிருந்தாலும், இதற்கு அங்கமெனச் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனைய ஐந்தங்கங்களில் பிந்திய ஐந்தங்கங்களுக்கு முதல் முதலாயுள்ள அங்கங்களே சாதனங்களாயிருக்கின்றன. ஆனதால் பக்தாதி ஐந்தங்கங்கள் சாதன ரூபங்களாயிருக்கின்றன. இன்னும் ஐக்யமென்னும், அங்கமானது சாத்திய ரூபமாயிருக்கிறது. இப்படியானுலிதற்கு அங்கமெனச் சொல்லுவதேனென்றால்:- அங்கனென்றால் ஜீவனல்லவா. சாக்ஷாத் சிவைக்யத்தையடைந்து சிவஸ்வ ரூபனானவன் ஜீவனெனப் படுவதில்லை, என்ற பிறகு, வீரசைவ கிரந்தக்காரர்களிப்படிப்பட்ட ஐக்யஸ்தலத்திற்கு அங்கமெனச் சொல்லியிருப்பது அர்த்தமாவதில்லை, யென்றால் பாதஞ்சல யோகத்திலுங்கூட சாமாதியானது பல(சாத்திய)ரூபமாயிருந்தாலும் அதற்கு எட்டாவது அங்கமெனச் சொல்லப்பட்டிருக்கிறது, இதைப்போலவே சிவயோக சாஸ்திரத்திலும் ஆறுவதான முக்திரூப பலத்திற்கு அங்கமென்னும் வியவஹாரமுண்டு, அப்படியானலந்த ஆறுவதான ஐக்யஸ்தலத்தின் பிரயோஜனமென்ன? பின்னையஐந்துள் தலங்களுக்கும் முதல் முதலான ஸ்தலங்களின் பிராப்தியே பிரயோஜனமாயிருக்கும், ஆனல் மேல்மாடியைப் போலுள்ள சிவைக்யப்பிராப்தி யென்னும் மோக்ஷபலத்திற்கு பக்தாதி ஐந்து ஸ்தலங்கள் ஐந்துபடிகளாயிருக்கும், முதலாவது படியேறின இரண்டாவது படிகிட்டும், முதல் படிக்கிரண்டாவது படியின் பிராப்தியே பலனாயிருக்கும், இப்படியே முதலாவதான நான்கு படிகளையும் ஏறின பிறகு ஐக்யஸ் தலமென்னும் மேல்மாடி கிடைத்ததும் சாதகனின் பிரயத்தினம் முடிவு பெற்றது, அம்மாடியின் பிராப்தியே கடைசி பிரயோஜனமாயிருக்கிறது, இப்பிராப்திக்கு மற்றொரு பலனொன்று மில்லை. யென்ற பிறகு பிரயோஜன மில்லாதிருக்கும் ஆறுவது ஸ்தலத்தையடைந்ததினல்யுக்தியென்ன விருக்கு மென்னும்ஆக்ஷேபமுண்டாகும், இந்த ஆக்ஷேபனைக்குச் சமாதானமேயில்லை யானதினல் சிவாத்வைத கல்ப கிரந்த கர்த்தருங்கூட ஆறுவது ஸ்தலத்தையடைவது பிறயோஜன மில்லை யெனக்கூறி அவர் ஐந்துஸ்தலங்களையேயடைந்தாராறுலும்நாம்மாத்திரம் அப்படிச்சொல்வதில்லை ஏனென்றால் இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்யாகாரம் சமாதிகளென்னும் எட்டங்கங்களில் எட்டவதான சமாதி யென்னும் அங்கமே பலரூபமாயிருக்கும், அதுவே முந்திய ஏழு அங்கங்களுக்கும் பிரயோஜன ரூபமாயிருக்கிறது, அதற்கு மற்றொரு வேறு பிரயோஜன மொன்று மில்லையானாலும் பாதஞ்சல தர்சனத்திற்கு எட்டாவது அங்கமெனச் சொல்லி ஸ்வீகரிக்கப்

பட்டிருக்கிறது. இதைப் போலவே ஆருவது ஸ்தலத்தை ஸ்வீகரித்தாலதற்கு வேருன மற்றொரு பிரயோஜன மில்லாதிருந்தாலும் தானே அந்திய பல ரூபமாயிருந்தாலு மதையுங்கூடச் சேர்த்து ஆறு அங்கங்களாகச் சொல்லப்பட்டிருப்பதெனச் சொல்லுகிறேம், இன்னும், ஜீவனுக்கும் சிவனுக்கும்

'குஹாம் பிரவிஷ்டா'

குஹாம் பிரவிஷ்டா வாத்மாநௌஹி தத் தர்சனுத்

என்னும் சுருதிகளினுல் குஹை யென்னுஞ் சரீரம் அல்லது ஹிருதயங்களில் பிரவேசம் சொல்லப்படுகிறது. ஆனதினுல் பிறதி யொரு சரீரங்களில் பிரவேசம் சொல்லப்படுகிறது, ஆனதினுல் பிறதி பொரு சரீரங்களிலும் ஜீவாத்மனொருவனே சரீரத்திலுள்ள பிருதிவியம்சத்தின் அபிமானத்தினுல் பக்தனென்றும், என்ருல் அப்பிருதிவி பாகத்தை யான் யெனதென்னு மபிமானத்தினுல் பந்தனென்றும், அல்லது ப்ரஹ்மனென்னும் நாமத்தை யடைந்திருப்பான், இதைப்போலவே அச்சீவன் ஜலம், அக்கினி, வாய்வு, ஆகாசம், இவைகளை யான் யெனதென்றபிமானித்துக் கொண்டு, மஹேசன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், அல்லது விஷ்ணு. ருத்திரன், ஈஸ்வரன், சதாசிவனென்னும் நாமங்களை யடைந்து ஐந்து அங்கஸ்தலஸ்வரூபனுயிருக்கிருன், ஏனென்ருல் சித்தாந்த சாஸ்திரத்தில் பக்த னெனப்படும் பிரஹ்மனுக்கு பிருதிவி யென்னு மங்கமும், மஹேசனென்னும் விஷ்ணுவுக்கு ஜல மென்னு மங்கமும், இப்படியாகவே பிரசாதி, பிராணலிங்கி சரணன், என்றும், ருத்திரன், ஈஸ்வரன், சதாசிவர்களுக்கு அக்கினி, வாய்வு, ஆகாசங்கள் அங்கங்களாயிருக்கிறதெனச் சொல்லப்பட்டிருக்கிறது, ஆனதினுல் ஜீவாத்துமனுனவன் இம்மூன்றறை முழச்சரீரமே தானென்றும் இச்சரீரத்திற்குச் சம்பந்தித்த பத்தினி புத்ராதிகள் தன்னவர்களென்னும் பிராந்திகொண்டுபத்தினி புத்திராதிகளுக்கு ரோகங் (வியாதி) களால்துக்கமுண்டாகவும்தானே துக்கியாகிப் பரிதவிப்பான், இன்னும் பிறர்களின் தேஹாதிகளில் தான் தன்னவ ரென்னு மபிமானம்இல்லாதிருப்பதால்அவர்களுக்கென்ன சம்பவித்தாலும் இவனுக்குத் துக்க மென்பது காணப்படுவதில்லை. இதைப்போலவே சரீரத்திலுள்ள பிருதிவியாதி பஞ்ச பூதங்களின் அபிமானத்தினுல் முன்சொன்னஐந்து நாமங்களையடைந்து அப்பஞ்ச பூதங்களையே தான் தன்னதென்றபிமானித்து அந்த அபிமான மென்னும்(அஞ்ஞான)பாசத்தினுல் கட்டப்படுவான் இந்தக் கட்டு (முடிச்சு) சாதாரணமானதல்லவென்றும் சிருஷ்டி யாதியாகி? அன்று முதல் ஜீவாத்துமனுக்கு பாசங்களின் கட்டை எப்படிப்பட்டவனுலும் அவிழ்க்க முடியாதபடியாக விழுந்திருக்கிறது, என்ருல் யாவனுலிப்பாச பந்த

முண்டா யிருக்கின்றதோ அவனைத்தவிர பந்தன விமோசனம் யாரும் செய்ய முடியாது, உலகத்தில் ஒரு கெட்டியான கயிற்றினல் யாராவதொருவனை சரியாகப் பந்தித்தால் அதையே யவிழ்ப்பது அசாத்தியமாயிருக்கும் போது சர்வக்ஞனும் அகடித கடனை (கூடாததைக் கூட்டிவைக்கும்) சமர்த்தனுமான அப்பரமேஸ்வரன் ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து கயிறுகளினல் ஜீவனைப் பந்தித்திருக்கிரானென்ற பிறகு அப்பரமேஸ்வரனை விட்டு இதர மனிதர்கள் அப் பந்தனத்தைவிடுவிக்க முடியுமா, என்றைக்கும் அவிழ்க்க முடியாது, ஆனதினல் அப்பரமேஸ்வரனே ஜீவாத்மனின் பந்தனையை விடுவித்து துக்க நிவிர்த்தியைச் செய்து பரமசுகத்தை யுண்டாக்க வேண்டியிருப்பதால் அப்பரமேஸ்வரன் தன்னைப்பூஜித்து, தியானித்து, தரித்து, தன் பந்தனத்தை விட்டு விடுவித்துக் கொண்டு நித்தியசுகத்தை யடையவேண்டு மென்னும் உத்தேசத்துடன் லிங்கரூபனானன், என்றால் ஆதாராதி ஐந்து ஸ்தானங்களில், ஆசாராதி ஐந்து லிங்கங்களின் ஸ்வரூபனையிருப்பான், எப்பரமேஸ்வரன் ஐந்து பிரகாரமானனே அவனே மஹாலிங்கம், ஆசாரலிங்கமே சத்யோஜாத ப்ரஹ்மம், இதுபிருதிவுக்கும் பிருதிவிதத்வாபிமானியானபக்த அல்லது பிரஹ்மனெனப்படும், ஜீவாத்துமனுக்கு அதிஷ்டான (சரீராவச்சின்ன வான்மா, அல்லது ஜீவியத்திற்கடுத்த வான்மாவுக்கு இட) மாயிருக்கிறது இதற்கு பிரணவம்யாது, சத்தி யாது என்பதை குரு முகத்தினல் தெரிந்து அந்த லிங்கத்தைப் பூஜிக்க வேண்டியது. தியானிக்க வேண்டியது. மற்றும் தாரணம் செய்ய வேண்டியது. இப்படி ஆதாரசக்கிர மென்னும் கமலத்தின் மத்தியகர்ணிகையி லிருக்கும் சத்யோஜாத ப்ரஹ்ம மென்னும் மற்றொரு பெயருள்ள ஆசாரலிங்கத்தைப் பூஜித்து தியானித்து தாரணம் செய்தால் இயம, நியம, ஆசன, பிராணயாம, பிரத்யாகார, தியான, தாரண, சமாதி என்னும் அஷ்டாங்கயோகத்தில்சொன்ன சமாதி யென்னும் ஐக்யஸ்தலம் சித்திக்கும், அப்பொழுது பக்தன் பிருதிவி (மண்) யென்னும் தன்னங்கத்தின் அபிமானத்தை (தன் உடலின் செருக்கை) விட்டுவிடுவான், முகன்முகலாக இவ்வொருலிங்கத்தில்சமாதிஸ்திதி யுண்டாகவும் முன்முன்னுள்ள குருலிங்காதிகளில் அந்தஸ்திதி வருவது சுலபமேயாகிறது, இப்படியாக முன்னைய லிங்கங்களில் சமாதி ஸ்திதி யென்றால் சாமரஸ்ய முண்டாகவும் பக்தனே மாஹேசனும், பிரசாதியும், பிராணலிங்கியும் சரணனும் ஆய்விடுகிரான் அல்லது பிரஹ்மன், விஷ்ணு, ருத்திரன், ஈஸ்வரன், சதாசிவன், எனப்படுவான், பிறகு ஜீவாத்மனின் சர்வோபாதிகளையும் களைந்து யோகி சுத்தாத்தும னுவான், என்றால் பிருதிவி முதலான ஐந்து பாசங்கள் நசித்துப்போய் சுத்தசிவாம்ச ரூபனே யாய் விடுகிறன், இப்படிப்பட்ட சுத்த சிவாம்சம் மஹா லிங்கத்திற்குப்

பின்னமாயிருப்பதில்லை, சூரியனின் கிரணங்கள் சூரியனுக்குப்
பின்னமல்ல, அக்கிரணங்கள் பகல் வேளையில் எல்லாவிடங்களில்
நிறைந்து கொண்டும் சூரியகாந்தசிலையில் பிரதிஷ்டித்து பஞ்சு
முதலான உபாதிகளுக்குட்பட்டதும் ஸ்தூலாகிருதியையடையும்
என்றால் நெருப்பாகிறது. இரவில் இவை யெல்லாம் சூரிய
னிடத்துச்சேர்ந்து சூர்யஸ்வரூபங்களே யாகும். இப்படியாகவே
சங்கர பாஸ்கரனின் கிரணங்களைப்போலுள்ள ஜீவாத்துமர்கள்
அச்சிவனிடத்து விபக்த (அயோக்கிய) ராகி மாயாதி உபாதிகளை
யபிமானித்துஸ்தூலாக்ருதியை யடைந்து தங்களுடையசிவஸ்வரூ
பத்தையே மறந்துவிட்டு பந்திதராவார்கள், பிறகு பரிபக்குவ
காலத்தை யடைந்து மூலாதார சுவாதிஷ்டானாதி ஸ்தானங்களி
லிருக்கும் ஆசாராதி லிங்கங்களின் சாமரஸ்யத்தினால் பிருதி
வியாதி கிரந்திகளினால் முக்தராகவும், சர்வோபாதிகளும் லயத்
தையடையும், அப்பொழுது ஜீவாத்மன் சுத்த சிவாம்சனாவான்
அப்பொழுது பாலில் பால் கலந்ததைப் போலவும் சிவனென்னும்
மஹா லிங்கத்துடன் கலந்து சுகியாவான், இதுவே ஷடங்கயோக
மாகும், இந்த ஷடங்கயோகத்தை தெரிய வேண்டுமானால் சூட்சும
பஞ்சாக்ஷர மந்திர மென்னும் மூலப்பிரணவத்துடன் சஹிதமான
நகாராதி யகாராந்தமான பஞ்சாக்ஷர மந்திரத்தையும், அதின்
அர்த்தத்தையும் முதலில் தெரிய வேண்டியது, இதைத் தெரி
வதற்காக ஸ்ரீகுருமூர்த்தியை யாஸ்ரயித்து அவரால் சிவதீக்ஷை
யடையவேண்டியது, இத்தீக்ஷையில்லாதிருந்தால் அசுத்த பூமி
யில் அம்மந்திர விதைமுளைத்துப் பலிதமாக மாட்டாது என்றால்
அம்மந்திரத்தாலாகும் முக்தி பலன் கிடைக்கமாட்டாது, ஆன
தினால் ஷடங்கயோகத்தை அப்யாசம் செய்யுமிச்சையுள்ளவர்
கள் முதலில் தீக்ஷையையடைந்து, பிரணவசஹிதமான பஞ்சா
க்ஷர மந்திரோபதேசத்தை யடைந்து அம்மூல பிரணவார்த்த
மான மஹாலிங்கத்தின் ஸ்வரூபத்தை நகாராதி யகாராந்தங்க
ளான ஐந்து பிரணவங்களின் அர்த்தங்க ளென்னும் ஆசாராதி
ஐந்து லிங்கங்களையும் தெரிந்து, அவைகளினால் மேற்சொன்ன
ஷடங்கங்களின் யோகங்களை யடைந்து, நித்தியசுகிகளாகும்படி
யாக ஸ்ரீஜகத்குரு பஞ்சாசார்யர்கள் அநுக்கிரகிக்குமாறு பிரார்த்
திக்கிறேன்

சிவம்பூயாத்

10—2—30-உ பிரபா பத்திரிகையின் மொழிபெயர்ப்பு

# புண்யா வசனம்.

மெழுகி கோலங்கலிட்டலங்கரித்த சுத்தமான பூமியில் பஞ்ச கலச ஸ்தாபனத்தில் சொன்ன† பூமிசுத்தி மந்திரத்தால் பூமி சுத்தி செய்து ‡ வாழையிலை மந்திரத்தால் வாழையிலை போட்டு ‡ அரிசி மந்திரத்தால் அரிசி போட்டு.

## (1) கலசஸ்தாபன மந்திரம்.

ஆகலசேஷு தாவதிசைநோவர்மவிகாஹதேஅபித்ரேணுகனிக்ரதத்

என்று உலோக கலயங்களாவது அல்லது மண் கலயங்களாவது இரண்டும் ஜதையாக வைத்து.

## (2) ஜலமிடும் மந்திரம்.

(இயம்மே கங்கே யமுனே, முதலாக ஹியாசு சோமயா) வரையில் சொல்லி தீர்த்தம். 2-கலசத்திலும் நிறைத்து. (கந் தத்வாராம் என்னும், மந்திரத்தால்) 2-கலசத்திலும் சந்தனம் போட்டு, மேலுக்கும் வைத்து. (சஹிரத்நானி) என்னும் மந்திரத்தால் பஞ்ச ரத்தினங்கள் போட்டு.

## (3) மாவிலை மந்திரம்.

(பிரவோ யக்ஞேஷு வயம்தோ அர்ச்சம் த்யாவானகாம்
ஹோபி: பிருதிவி இஷத்வியெ ஏஷாம்ப்ரஹ்மண்ய
சமானிவிப்ரா விஷிக் வியம்தி விநிநோந சாகா:

என்று மாந்தளிர் (மாவிலை) களாலலங்கரித்து

## (4) தர்ப்பை மந்திரம்.

"காண்டாத் காண்டாத், முதல் சஹஸ்ரேண சதேனச"
வரையில் சொல்லி தர்ப்பைகளை வைத்து. ‡ பஞ்சலோக மந்திரத்தால், தங்கம், வெள்ளி போட்டு, தேங்காய், மந்திரத்தால் தேங்காய் வைத்து. ‡ வஸ்திர மந்திரத்தால் 2-வஸ்திரம் தரித்து ‡ நூல் சுற்றும் மந்திரத்தால் இரண்டு கலசத்திற்கும், நூல் சுற்றி.

## (5) வடக்கு கலசம் வருண ஆவாஹன மந்திரம்.

தத்வாயாமி சுநஸ்யேஷோ வருணஸ்த்ரிஷ்டுப் உத்தரகலசே
வருணாவாஹனே விநியோக: தத்வாயாமி பிரஹ்மணா
வம்தமானஸ்த தாசாஸ்தே யஜமானோ ஹவிர்ப்பி:
ஆஹேடமானோ வருணே: போத்யுருசகாம் சமான ஆயு:
பிரவோஷி: ஓம் பூம் வருணமாவாஹயாமி ஓம் புவ:
வருணமாஹயாமி ஓம்சுவ: வருணமாவாஹயாமி
ஓம் பூர்ப்பு வஸ்சுவ: வருணமாவாஹயாமி

என்று வடக்குக் கலசத்தில் வருணனை ஆவாஹனம் செய்துப்பிறகு

## (6) கலச ஜபம்.

கலஸஸ்ய முகே ருத்ர: கம்டே விஷ்ணு சமாஸ்ரித:
மூலேதத்ர ஸ்திதோ ப்ரஹ்மா மத்யெமாத்ருகணாஸ்மிருதா:
குக்ஷெளது சாகரா ஸ்சர்வெ சப்தத் வீபாவசும்தரா

‡ இம்மந்திரங்கள் விவாஹ பஞ்ச கலசஸ்தாபனத்தில் பார்க்கவும்.

† வேது, தொடர்ச்சி, 133ம் பக்கம் பார்க்கவும்.

(7) ஜலம் தெளிக்கு மந்திரம்

அநயா பூஜயா வருணுதி தேவதா ஸ்சுப்ரீதாஸ்
சுப்ர சன்ஞ வரதா பவம்து

என்று அக்ஷதை சுவர்னத்துடன் கூடின ஜலத்தை சேர்த்துத் தெளித்துப் பிறகு பவுத்திர பாணியாகி பிராணுயாமம் செய்து கையை மூடிக் கொண்டு

(8) நமஸ்கார மந்திரம்

உமாமஹேஸ்வ ராப்யாம்நம: பிரமத கணேப் யோநம :
பக்த மாஹேஸ்வ ரேப்யோநம : துர்க்கா கணபதி
க்ஷேத்ர பால கேப்யோ நம : மாத்ருப்யோ நம :
பிதுருப்யோ நம : ஆசார்யெப்யோ நம : இஷ்ட
தேவதாயை நம : சர்வேப்யோ மாஹேஸ்வ ரேப்யோ நம :

என்று நமஸ்கரித்துப் பிறகு இந்த கலசங்களின் முன்னே உட்காருபவராயும் வடக்கி லுட்கார சக்தராயும் நிஷிக்த (இகழ்ச்சி அல்லது தவறி) ல்லாத வராயும் உத்தரீயத்தைப் போர்த்துக் கொண்டவராயும் பவித்திர பாணிகளாகவுமுள்ள இரு மஹேஸ்வரரை உட்காரவைத்து சந்தனம் புஷ்பம் அக்ஷதைகளால் அவர்களை அர்ச்சிக்கும் மந்திரம்(ஆசிஷ: ப்ரார்த்தயாமி) என்றுச்சொல்லவும், பிறகு.

(9) மாஹேஸ்வரர் மந்திரம்.

சத்யா ஏஷா ஆசி சஸ்சம்து தீர்க்கா நாகநத்யோகிரய
ஸ்த்ரீனி விஷ்ணு பதாநிச தேநாயு : பிரமாணேன
புண்யாஹம் தீர்க்கமாயு ரஸ்து

என்று மாஹேஸ்வரர் சொல்வது, இம்மாதிரி மாஹேஸ்வரரிடம் ஆசீர்வாதரூப பிரதியுத்தரம் வாங்கிக் கொண்டு மறுபடியும் பிராணுயாமம் செய்து தேசகாலாதிகளை யுச்சரித்துப் பிறகு

(10) சங்கல்பம்.

கர்ப்பா தான கர்ம கர்த்ருமாதௌ சுத்தி விருத்யப் யுதய

சித்தித்வாரா ஸ்ரீபரமேஸ்வரப்ரீத் யர்த்தம் ஸ்யாந்த் யர்த்தம் மாஹேஸ்வ ரைஸ்சஹ ஸ்வஸ்தி புண்யாஹ வாசனம் கரிஷ்யே என்று சங்கல்பம் சொல்லி, வடக்குக் கலசத்தைப் பிடித்து. "ஆபஹ,, என்று புரோஹிதர் ஜலத்தைக்கொடுக்க, மாஹேஸ்வரர், "சிவா ஆபஸ்ஸம்து,, என்று சொல்லி வாங்கிக் கொள்வது மறுபடியும்.

(2). புரோஹிதர், கம்தாஹ, என்று சந்தனத்தைக் கொடுக்கவும் மாஹேஸ்வரர், சுகம்தா: பாம்து : என்று சொல்லி வாங்கின பிறகு

(3) புரோஹிதர், அக்ஷதா:. என்றுசொல்லி அக்ஷதையைகொடுக்க
மாஹேஸ்வரர், அக்ஷதம் சௌரிஷ்டம் சாஸ்து, என்றுசொல்லவும்
(3) புரோஹிதர் சுமனச: என்று சொல்லி புஷ்பம் கொடுக்கவும்
மாஹேஸ்வரர் ஐஸ்வர்ய மஸ்து, என்று சொல்ல

(5) புரோஹிதர், தக்ஷிணபாம்து, என்று சொல்லி தக்ஷிணைகொடுக்க
மாஹேஸ்வரர். பஹுதேயம், சாஸ்து, என்று சொன்ன பிறகு
(6) புரோஹிதர், மநஸ்சமா தீயதாம், என்று சொல்ல
மாஹேஸ்வரர், சமாஹித, மனசஸ்மஹ, என்று சொல்ல
(7) புரோஹிதர் பிரசீதம்து பவத:, என்று சொல்ல
மாஹேஸ்வரர் பிரசன்னாஸ்ம:, என்று சொன்ன பிறகு.

சாம்திரஸ்து, புஷ்டிஸ்து, துஸ்டிரஸ்து, விருத்திரஸ்து
அவுக்னமஸ்து, ஆயுஸ்யமஸ்து, ஆரோக்யமஸ்து.
ஸ்வஸ்திசிவம், கர்மாஸ்து, கர்ம சமிருத்திரஸ்து
தர்ம சமிருத்திரஸ்து, புத்தர சமிருக்தி ரஸ்து
வேத மிருத்தி ரஸ்து, சாஸ்த்ர சமிருத்தி ரஸ்து
தன தான்ய சமிருத்தி ரஸ்து. இஷ்ட சம்பதஸ்து
என்பதாக (15) வாக்கியங்களைச் சொல்லி பிறகு

(8) புரோஹிதர் ஸ்வயம் கர்ம தேவதாத்மகோ பகவான்சிவ:
ப்ரீயதாம் என்று சொல்லி பிறகு

மாஹேஸ்வரர், ப்ரீயதாம் பகவான் கர்மதேவதாத்மக:
என்று சொல்லவும்

(9) புரோஹிதர், புண்யாஹம் வாசயிஷ்யே, என்று சொல்லி பிறகு
மாஹேஸ்வரர் வாச்யதாம், என்று சொல்லிப் பிறகு

எல்லா மாஹேஸ்வரரும் கூடி

உத்காதேவ சகுனேசாயகாய்சி ப்ரஹ்ம புத்ர இவசவனேஷு
சகாம் சசிருஷேவ வாஜீ சிசுமதீ ரபீத்யா சர்வதோ நஸ்சகுனெ
பத்ரமாவத விஸ்வதோ நஸ்சகுனெ புண்யமாவத
என்று, சொல்லிப் பிறகு

(10) புரோஹிதர் ஓம் புண்யாஹம் பவம்தோ ப்ருவமது,
என்று, கம்பீர ஸ்வரத்தில்சொல்ல

மாஹேஸ்வரர், ஓம் புண்யாஹம், என்று இதையே மாறிமாறி
மத்திய ஸ்வரத்திலும் உச்சஸ்வரத்திலும் மூன்றுதடவைச்சொல்ல
(11) புரோஹிதர் கர்ப்பாதான கர்மணே ஓம் ஸ்வஸ்தி பவம்தோ
ப்ருவம்து,, என்று சொல்லிப்பிறகு

மாஹேஸ்வரர்கர்ப்பாதானகர்மணேஓம்ஸ்வஸ்திஎன்று சொல்லவும்
(12) புரோஹிதன், கர்ப்பாதான கர்மணே ருத்திம் பவம்தோ ப்ரு
வம்து, என்றுச் சொன்ன பிறகு

மாஹேஸ்வரர் ருத்யதாம், என மூன்று தடவைச்சொல்லப் பிறகு.

புரோஹிதர், பத்தினி சகிதமாக கிழக்குமுகமாக உட்கார்ந்து கொண்டு வடக்குக் கலசத்தை வலது கையிலும், தெற்குக்கலசத்தை இடது கையிலும் பிடித்து இரண்டும் சேர்த்து இவ்விரண்டு கலசஜலத்தை மற்றொரு பாத்திரத்தில் விட்டுக்கொண்டு

(11) அபிஷேக மந்திரம்

ஓஷதானி சரத்னாநி காலஸ்யாவ யவாஸ்சயே
சரிதஸ் சாகராஸ் சைலாஸ் தீர்த்தானி சஹ்ரதானதா:
ஏதேத்வா மபிஷிம் சம்து சர்வ காமார்த்த சித்தயே
சாம்தி புஷ்டித் துஷ்டிச் சாஸ்து சிவகாம்
சிவமஸ்து பகவான் சிவ: ப்ரியதாம்

என இம்மந்திரம் சொல்லிக்கொண்டு அபிஷேகிப்பது, பிறகு மாஹேஸ்வரர் அச்சலத்தை மாவிலைகளினால் பதி, பத்தினி, இவர்கள் சிரசின் மீது

(12) புரோக்ஷணை மந்திரம்

தத்சவிதுர்வ ரேண்யம் விஸ்வாமித்திர: சவிதா காயத்ரீ
ஆபோஹிஷ்டேதி நவர்ச் சஸ்யாம் பரீஷ:
சிந்துத் வீபா ஆபோ காயத்ரீ பம்சமி வர்த்தமான
சப்தமி பிரதிஷ்டேம் தேத்வே அநுஷ்டுபௌ
ஆபோஹிஷ்டா மயோ புவஸ்தான
ஊர்ஜ் ஜெ ததாதன மஹேரணாய சக்ஷசெ
யோவஸ்சி வதமொரசஸ் தஸ்ய பாஜயதேஹந:
உசதீரிவ மாதர: தஸ்மா அரங்கமாமவே
யஸ்ய க்ஷயாய ஜன்வத ஆபோஜன யதாசன:

என்னும் மந்திரம் சொல்லிப் புரோக்ஷிக்கவும். பிறகு பதி, புத்திரருள்ள புண்ணிய ஸ்த்ரீகள் ஆரதியும் மாஹேஸ்வரர் ஆசீர்வாதமும், செய்யத்தக்கது.

இஃது சுயம் புரோஹிதம்.

---

130ம்-பக்கம், 6-வது கலசஜபத்தின் தொடர்ச்சி.

ருக்வேதோத யஜுர்வேதஸ் சாமவே தோஹ்ய தர்வணம்
அமகைஸ்ச சஹிதாஸ் சர்வெ கலசாம்பு சமாஸ்ரிதா:
கம்கேச யமுனே சைவ கோதாவரி சரஸ்வதி
நர்மதெ சிம்து காவேரி ஜலேஸ்மின் சன்னிதிம் குரு

என்று கலசத்தைத் தொட்டு ஜெபித்து யுக்தமான உபசாங்களால் பூஜாவிதியில் சொல்லிய மந்திர பூர்வகமாக சோடசோபசாரங்களால் பூஜித்துப் பிறகு

# சுத்தி அல்லது பிராயச்சித்தம்

யாருக்காவதும் அபவித்ரத்வம் அல்லது பஹிஷ்காரம் அகஸ்மாத்தாகவாவது தெரியாமலாவது அன்னிய ஜாதியாருடைய அன்னம் தண்ணீர் சாப்பிட்டிருந்தாலாவது நிந்தையான வஸ்துக்களாலே அடித்துக் கொண்டிருந்தாலாவது அல்லது வேறே காரணங்களாலாவது குருவர்க்கத்தவராவது அல்லது சமாஜத்தார் தோஷி என்று நிர்ணயித்து ஸ்வஜாதியாரால் ஒதுக்கப்பட்டிருந்தால், அப்படிப்பட்டவரை சர்வ ஜனங்களுடைய சம்மதத்தின் பேரில் சுத்தி செய்ய வேண்டியதாயிருந்தால் பிராயச் சித்தம் செய்துக் கொள்ளுகிறவனால் தேசகாலாதிகளைச் சொல்ல வைத்துப்பிறகு

(1) சங்கல்பம்

மமகாயிக வாசிக மாநசிக சாம் சர்க்கிக தோஷ நிரசன
பூர்வகம் சர்வ கர்ம சம் சுத்தி சித்தியர்த்தம் ஸ்ரீகுரு
சரணோதகேன பிராயச்சித்த ஸ்நான மஹம் கரிஷ்யே

என்னும் சங்கல்ப பூர்வகமாக குரு பாதோதகத்தால் ஸ்நானம் செய்து சுசியாகி மடி வஸ்திரம் தரித்து விபூதி தாரணை செய்துக் கொண்டு சிவ பூஜை குரு பாத பூஜை செய்து தீர்த்தம் ஸ்வீகாரம் செய்து குரு வர்க்கத்தாருக்கும் சமாஜத்தின் முக்கியஸ்தருக்கும் தனக்குண்டான தோஷத்திற்கு பச்சாத்தாப பூர்வகமாக மன்னிக்கவேண்டு மென்றுக் கேட்கவும் சபையார் மன்னித்துத் தயை செய்ய வேண்டியது, பிறகு சுத்தி செய்துக் கொண்டவன் யதாசக்தி பக்த மாஹேஸ்வரர் ஆராதனைச் செய்து சமாஜத்தின் விர்த்தி கார்யங்களுக்கு ஏதாவது திரவ்ய தானம் செய்ய வேண்டியது

பிராயச்சித்த விதி முற்றும்
இஂது சுயம் புரோஹிதம்.

---

## ஆனந்த வார்த்தை, அல்லது ஆனந்த ஒளி.

ராயச்சூர் ஜில்லா முதகல்ல கிராமத்தில் இவ்வருடம் பங்குனி-மீ 9-தேதி ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீ பஞ்சாசார்யர்களிலொருவரான ஹிமோத்கேதார ஏகோராம வைராக்ய சிம்ஹாசனதீஸ்வரர் ஜகத்குருஸ்ரீ, 108 நீலகண்டலிங்க சிவாசார்ய மஹா சுவாமிகளின் திரியக் யந்தோலன மஹோர்ச்சவத்திற்காக நான் போயிருந்தேன், மகாசுவாமிகள் அக்கிராமத்தின் மத்தியகிரி(மலை)யின் கண்ணுள்ள வீரபத்திர தேவாலயத்தில் வாசமாயிருந்தார் ஜனக்கூட்டமானது மஹாபாதத்தின் தரிசனத்திற்காக கூட்டம்கூட்டமாக வந்துக்கொண்டிருந்தன, 8-தேதி, சனிக்கிழமை மாலை பக்

தாதிக ளெல்லாம் பலாசீர்வாதங்களை யடைந்து தங்கள் தங்களிடங்களுக்கேகினர், நான் மாத்திரம், மஹாபாத சன்னிதியிலேயே இருந்தேன், இரவு சிவார்ச்சனை முடிந்தபிறகு, 10-மணி சுமாருக்கு கொங்கவாட வீரபத்திர சாஸ்திரிகள் அநேக தர்ம தத்துவங்களை பேசிக்கொண்டே பேச்சின் மத்தியில், சூர்யன் அஸ்தமனமாகும் காலத்தில் தன் பிரகாசத்தை ஹிமாலயத்திலுள்ள ஜோதிர்லதைகளி (மின்னல் கொடியி)டத்தும் மற்றும் அக்கினியிடத்தும், விளக்குகளிடத்தும் வைப்பானென்று காளிதாசாதி கவிகள் வர்ணித்திருக்கிறார்களெனச் சொன்னார், அப்போது ஜகதாசார்யர் அதேன் சூரியன் தன் பிரகாசத்தை யோகிகளிடத்தும் வைப்பதுண்டெனத் தெரியவில்லையா, அம்மாதிரியாக நமது நக சிகாந்தங்களிலுங்கூட காண்பிக்கிறோம் பாருங்களெனச் சொல்லித் தன் சிகையில் கை வைக்கவும் உடனே வித்யுர்லதையை(மின்னல் கொடியை)ப்போல பிரகாசம் ஜொலிக்க ஆரம்பமாயிற்று, அங்க பிரத்யங்களிலுங்கூட அஸ்தஸ்பர்சன மாத்திரத்தால் மின்னலைப்போல வெளிச்சமுண்டாயிற்று. அப்போது கொங்கவாட கங்காதர சாஸ்திரிகளும், நாயகல் பசவராஜ சாஸ்திரிகளும், சன்னதியிலாஜராயிருந்தார்கள், அவர்களு மிதைக்கண்டு ஆச்சர்யங் கொண்டார்கள், மற்றும் இம்மஹா சிவாசார்யரானவர் யோகசாமர்த்தியத்தால் உங்கள் அங்கத்திலுங்கூட இப்பிரகாசம் வரும்படியாகச் செய்கிறோம் உங்கள் கைகளைக் கொடுங்களெனச் சொல்லி நாயகல் சாஸ்திரிகளின் கையை 5-நிமிஷம் பிடித்து, இம்மல்வஸ்திரத்தின்மீது கையை ஆட்டெனச் சொல்லவும் உத்திரவுப்படிக்கு அவர் கையையாட்டவும், புஷ்ப பாணத்தைப்போல நெருப்புப் பொறிபறக்க வாரம்பித்தது அவ்விடமிருந்தவர்களனைவரும் ஆச்சர்யங்கொண்டு மஹா குருக்களே இப்பிரகாசத்தின் மஹத்துவமென்ன இப்படியாகக் காரணமென்ன தயவுகூர்ந்துபதேசிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். சிவாசார்யர் சொன்னதாவது யோக சாமர்த்தியத்தினலிப் பிரகாசம் வருமெனச்சொல்லி சந்தோஷப் படுத்தினர் ஆகையால் யோகிகளின் நடவடிக்கை யாருக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட சிரேஷ்டர்களிருக்கும் இக்காலத்திலும் சிலர் பீடாசார்யர்களை நிந்தித்து பாபத்திற்காளாகிறார்கள்,, குருதைவாத்பரம் நாஸ்தியென்னும் வாக்கியத்தை நம்பி ஜகத்குரு பீடாசார்யரைப் பூஜித்து சர்வரும் தன்னியராக வேண்டுமெனப் பிராத்திக்கிறேன்.

பிரத்யக்ஷதர்சி சித்தாபுரம் சிவலிங்கப்ப

24—4—30 பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

# அற்புத மஹிமை.

ஸ்ரீமத் பஞ்சாசார்யர்களி லொருவரான உஜ்ஜயனி சத்தர்ம ஸிம்ஹாசனுதீஸ்வர ஸ்ரீ ஜகத்குரு சித்தலிங்க சிவாசார்ய மஹா சுவாமிகளவர்கள் மஹாராஷ்ட்ர தேசத்தின் வீரசைவ (லிங்காயுத)ர்களை யீடேற்றும் பொருட்டு இத்தேசத்திற்கு விஜயம் செய்து தற்காலம் பார்சி பட்டணத்திலிருந்தாரென்பது சகலருக்கும் தெரிந்த விஷயமாயிருக்கிறது. பிறதி தினமும் ஔந்தகரின் மடத்தில் ஜகத்குருக்க ளவர்கள் சிஷ்யவர்க்கத்துக் கெல்லாம் மத தத்துவத்தைபோதித்துக் கொண்டிருந்தார், இம்மாதம் 8 தேதியில், ஒரு விசித்திர மகிமை நடை பெற்றது அதென்னவெனில் பார்சி பட்டணத்தின் மத்தியிலுள்ள ஒரு ஏரியின் சமீபத்தில் ஒரு பயங்கரமானசர்ப்பம் ஒன்றுவந்தது அதைக்கொல்லுவதற்காக எவ்விடமிருந்தோ மூன்று கீரிகள் வந்து சர்பத்தின் சமீபம் சேர்ந்தன. அச்சர்ப்பத்திற்கும் கீரிகளுக்கும் 15, நிமிட நேரம் யுத்தம் நடைபெற்றது. இதைப் பார்ப்பதற்காக ஆயிரக் கணக்கான ஜனங்கள் அவ்விடம்வந்து சேர்ந்து விட்டாகள், இப்படி யிருக்கையில் ஸ்ரீஜகத்குருக்களின் சவாரியானது மகா-ா-ா-ஸ்ரீ, அண்ணு சாஹேப் அவர்களின் பங்களாவிலிருந்து பிரவசனத்திற்காகபுறப்பட்டு அண்ணுசாஹேப் முதலான வர்களுடன் வந்துக் கொண்டிருந்தார்கள், இவ்விருவிதபிராணிகளுக்கும நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவதற்காக அண்ணு சாஹேப் முதலானவர்கள் வேண்டிய பிரயத்தினம் செய்தும், சண்டை நிற்கவில்லை, சர்ப்பமானது வெகு துக்காவஸ்தையிலிருந்தது, அப்பொழுது ஸ்ரீஜகத்குருக்கள் அப்பிராணிகளைப் பார்த்து நீங்கள் பரபரஸ்மாக சண்டை செய்யாமல் அவரவர்கள் ஸ்தானங்களுக்குச் செல்லுங்களென ஆக்ஞாபித்தார், உடனே அம்மூன்று கீரிகளும் புறப்பட்டுப்போயிற்று, சர்ப்பமும் ஒருதுவாரத்தில் நுழைந்துக் கொண்டது. ஸ்ரீஜகத் குருக்களின் கட்டளையானவுடனேஜன்மசித்தவைரியுள்ள இப்பிராணிகள் தங்கள்விரோத பாவனையை விட்டு அவ்விடத்தினின்றுப் போனதைப் பார்த்து அங்குகூடியிருந்த எல்லா மதஸ்தர்களும்ஸ்ரீஜகத்குருக்களின் அற்புதமஹிமையைக் கொண்டாடி (துதித்து)க்கொண்டு புறப்பட்டார்கள், யோகிகளின் சந்நிதானத்தில் பரஸ்பரவிரோத பாவமுள்ள பிராணிகள் தங்கள் தங்களுடைய விரோத பாவத்தை விட்டு (அகற்றி) சாந்தமாக நடந்துக் கொள்ளு மெனச் சொல்லியுள்ள,

தத்சன்னி தெள வைர தியாக :

என்னும் யோகசூஸ்திர விருத்தாந்தமானது பிரத்யக்ஷமாயிற்று இப்படிப்பட்ட சிவயோகிகளுடைய பாத வின்யாசத்தினுல் புனீதமாய்க் கொண்டிருக்கும் பார்சி பட்டணமே மிக்க விசேஷமானது

17-10-32-பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு

வாய்வு பூஜித தசருத்ர பூஜை.

ஸ்ரீக்ராப நம: லகவே நம: வாயுவேகாய நம: சூட்மாய நம: தீக்ஷ்ணாய நம: பயங்கராய நம: பஞ்சாத்ம காய நம:
பஞ்சசிகாய நம: கபர்க்திநே நம: மேஹவாஹநாய நம: வாயுவீர்யோ நம: வாயுபூஜிதா: ஹேதசருத்ரா:
சம் X... ...... ..... ...... ........ப்ரசீதம்துபவத:
என்று தசருத்திர ராவாஹனம்செய்து பூஜிப்பது, பிறகு.

(7) வடக்கில் குபேரன் ஆவாஹனம்

மயகாம் சோமவ்ரதே தவ மனஸ் தனூஷு பிப்ரத:
ப்ரஜா வம்த. சசோமஹி இம்த்ராணிதேவி சுபகாசு பத்னி
இதி மந்த்ரேண குபேர மாவாஹயாமி
என்று குபேரனை ஆவாஹனம் செய்துப் பிறகு.

குபேர பூஜித தசருத்திர பூஜை

நிதீசாய நம: ரூபவதே நம: தன்யாய நம: சௌம்யாய நம:
சாம்தாய நம: ஜடாதராய நம: காமப்ர சாதாய நம:
லக்ஷ்மீசாய நம: ப்ரகாசாய நம: இம்து யக்ஞபாய நம:
குபேரவீர்யா: குபேரபூஜிதா: ஹே தசருத்ரா:
சம்,X... ...... ........... ...... ..........ப்ரசீதம்து பவத:

(8) வடகிழக்கில் ஈசான்யன் ஆவாஹனம்

தமோசானம் ஜகதஸ்த் தஸ்து சஷ்பதிம் தியம் ஜின்வமவ சேஹு
மஹேவயம் பூஷாநோ யதாவேத சாமசத் விருதே ரக்ஷிதா
பாயுர தத்பஸ் வஸ்தயெ இதி மந்த்ரேண ஈசான மாவாஹயாமி
என்று ஈசானனை ஆவாஹனம் செய்துப் பிறகு.

ஈசான பூஜித தசருத்ர பூஜை

ஈசானாய நம: வித்யேசாய நம: க்ஞானவதே நம:
மாத்ரு பிங்களாய நம: பூதபலாயநம: அஜாய நம: பலயே நம:
மித்ராய நம: சர்வவித்யாதிபாய நம: சுகக்ருதே நம:
ஈசானவீர்யா: ஈசானபூஜிதா: ஹே தசருத்ராஹா
சவா X... .. .. .... ........ ...... ப்ரசீதம்து பவத:
என்று ஆவாஹனம் செய்து பூஜிப்பது.

(9) மேற்கு வடமேற்குக்கு மத்தியில் விஷ்ணு ஆவாஹனம்.

ஸ்யோனா ப்ருதிவீபவா நிருக்ஷரா நிவேசினி யச்டான:
சர்ம சப்ராதா: இதிமம்த்ரேண விஷ்ணு மாவாஹயாமி
என்று விஷ்ணு ஆவாஹனம் செய்துப் பிறகு

விஷ்ணு பூஜித தசருத்ர பூஜா

பலிப்ரியாய நம:, விஷதராய நம: விரோக்ரசனாய நம:
பாலகாய நம: சுபாய நம: சுவீர்யாய நம: வ்ருஷபாய் நம:
பாதாளேசாய நம: லோஹிதாய நம: அனம்தாய நம:

விஷ்ணு வீர்யா : விஷ்ணு பூஜிதா : ஹே தசருத்ராஹா
சவா X.......... . . ... ... .. பிரசீதம்து பவத:
என்று ஆவாஹனம் செய்துப் பூஜிப்பது பிறகு.

(10) கிழக்கு வடகிழக்குக்கு மத்தியில் பிரம்மன் ஆவாஹனம்
அஸ்மேருத்ரா மெஹனுபர்வதா சோவிருத்ர ஹத்யெ
பரஹூதௌ, நஜோஷா : யஸ்யம், சதேஸ்துவதே தாயி
வஜ்ர மிம்த்ர, ஜ்யேஷ்டா அஸ்மான் அவம்து தேவா :
இதிமந்த்ரேண பிரஹ்ம மாவாஹயாமி

என்று பிரம்மாவை ஆவாஹனம் செய்துப் பிறகு.

பிரம்ம பூஜித தசருத்ர பூஜா

அத்யக்ஷாய நம : சபசே நம : லிப்சவே நம : சம்பவே நம :
விபவே நம : கனுத்யக்ஷாய நம : விவாஹாய நம :
குணசம்வாஹாய நம : த்ரயக்ஷபாய நம : த்ரிதசவம்திதாய நம:
ப்ரஹ்ம வீர்யா : ப்ரம்ஹ பூஜிதா : ஹே தசருத்ராஹா
சம் X...... ... ..... ... ... ..... பிரசீதம்து பவத :

என்று ஆவாஹனம் செய்து பூஜிப்பது பிறகு
க்ஷேத்ரை யைத்வா நிருத்யைத் வாத்ய ஹோமும் சாமி
வருணஸ்ய பாசாத் அநாக சம்ப்ரஹ்மணேத்வா கரோமி
சிவே தேத்யாவா ப்ரதவீ உபே இமெ

இம்மந்திர உச்சரிப்பினுல் தர்ப்பைகளினுல் செய்த (25) முழமுள்ள தர்ப்பைக்கயிற்றினுல்மண்டபத்தைச் சுற்றிக்கட்டுவது

இதி மண்டப தேவதா பூஜை சம்பூர்ணம்

(1) கௌதுக பந்தன சங்கல்பம்

தீக்ஷா / விவாஹ கர்மணெபூர்வதினெராத்ரௌசாம்குரெபாலிகாயுக்தில்தலெ
மங்கலதூர்ய நாதெக்தெ கௌதுக பந்தனம் குர்யாத்
தத்ரயம் க்ரகஹ ஆசார்ய : தித்யாகம் சம்கீர்த்யா

தீக்ஷா / விவாஹ கர்ம்ம கர்க்ரு மாதௌ ஸ்ரீ பரமேஸ்வரப் பிரீத் யர்த்தம்
கௌதுக பந்தனம் கரிஷ்யாமி

என்று சங்கல்பம் சொல்லி கோலங்களிட்டலங்கரித்த பூமியில் 5--7--9 இதிலேதாவ தொரு லக்கதிரப்பைகளை எடுத்து நுணியில்

---

குறிப்பு:—X இந்தப் புள்ளியுள்ள யிடங்களில் இதின் கீழுள்ள (2) வரியைச் சேர்த்துச் சொல்லவும்.

சவாஹனஸ்ஸ சக்தயஸ்ஸ பரிவாரா சமாகத்யாத்ர
மம்டபே மத்கிருதான, சேஷோபசாராம் ஸ்வீக்ருத்ய ;
என்று இதைச் சேர்த்துச் சொல்லிப் பிறகு,
பிரசீதம்து பவத : என்று சேர்த்துச் சொல்லவும்

(4) அங்குலமும் முடிச்சியில் (2) அங்குலமும் அடியில் (16) அங்குலமும் விட்டு பவித்திரமாக்க் கட்டி கிழக்கில் நுனிகளிருக்கும்படி தர்ப்பை கூர்ஜ்ஜரத்தை வைத்து அதின் பேரில் ஜலகும்பத்தை வைத்து அரிசி நிறைத்த தட்டத்தில் தாம்பூலம் விபூதி தேங்காய் முதலானது வைத்து அதில் புது பருத்தியினால் மாங்கல்ய ஸ்திரிகள் நூற்ற (5) எழை சேர்த்த கயிற்றை மஞ்சள் தடவி மூன்றாய் மடித்துத் திரித்து அதில் வெற்றிலையாவது அல்லது மாவிலையாவது திரப்பையுடன் சேர்த்துக் கட்டித்தயார் செய்த கங்கணத்தை வைத்து அதின் பக்கத்தில் யஜமானனை உட்காரவைத்துக்கொண்டு கங்கணத்திற்கு அக்கும்ப ஜலம் அபிஷேகிக்க.

(2) கங்கணத்திற்கு அபிஷேக மந்திரம்

தத்ச விதுர்வரேண்யம் அக்னி மௌளெ இஷெத்வோர்
ஜித்வா அக்னி ஆயாஹி சன்னோதே வீர ப்ரஷ்டய
ஆபோ ஹிஷ்டேத் வா தி மம்த்ரை :

என்னும் மந்திரபூர்வகமாக அக்கலச ஜலத்தைக்கங்கணங்களுக்கு அபிஷேகித்து,

(3) கங்கணத்திற்கு சந்தனம் பூச மந்திரம்

ஜாதவேத செசுனவாம சோம மராதீயதோ நிதஹாதி வேத : சன : பர்ஷததி தர்க்காணிவிஸ்வானு வெவசிம்தும் துரிதாத் யக்னி:

என்று கங்கணத்திற்குச் சந்தனம்பூசி அக்கங்கணத்தை சோட சோபசாரங்களால் பூஜிப்பது பிறகு

(4) வரனுக்குக் கௌதுக பந்தனம்

விஸ்வாத்தாதே சவனேஷு ப்ரவாச்யாயா சகர்த்த
மகவன்னிம்த்ர சுனஸ்ததெ பாராவதம் யத்புருஷம்
பிருதம் வஸ்வபா வ்ருணேஸ் சரபாய ருஷிபந்தவே

என்று வரன் வலக்கையின் மணிக்கட்டின்மேல் ஷடி கங்கணம்கட்டி பூஜிப்பது, பிறகு

வதுவுக்கு கௌதுக பந்தனம்.

ஸ்ரீயே ஜாதஸ்ரிய ஆனிரியாய ஸ்ரியம் வயோ ஜரித்ருப்யோ ததாதிஸ்ரியம் வாசானு அம்ருதத்வ மாயன் பவம்தி சத்யா சமிதா மிதத்ரௌ, என்று வதுவின் இடைக்கையின் மணிக்கட்டில் கங்கணம் கட்டிப் பூஜிப்பது பிறகு

(5) மாஹேஸ்வரர் சொல்லும் மந்திரம்

சதம் ஜீவ சாதோ வர்த்தமானஸ் சதம் ஹேமம் தாங்டதமு
வசம் தான் சதமிந்த்ராக்னி சவிதா ப்ருஹஸ்பதி சதாயுஷா
விஷேமம் புனர்த்து : ஆஹார் ஸம்த்வா விதம்த்வா புனராகா :
புனர்நவ சர்வாங்க சர்வந்தெ சக்ஷுசுஸ்சர்வ மாயுச்யதே விதம்
ப்ருஹத் சாமக்ஷத்ரப்ருத்வ்ருத்த வ்ருணிஷ்யம் த்ரிஷ்டுபௌஜஸ்சு

பிதமுக்ரவீரம் இ த்ரஸ் தாமேன பஞ்சதசேன மத்ய
மிதம்வாதேன சகரேண ரக்ஷா

என்று எல்லா மாஹேஸ்வரரும் ஜெபித்துப் பிறகு அனை வருக்கும் சந்தன புஷ்ப தாம்பூலம்கொடுப்பது,

மறுதினம் அல்லது விவாஹ நாள் வது, வரன் தந்தைகள் பிராதக்காலையிலெழுந்து நித்திய கர்மங்களை முடித்து பத்தினி சமேதராய் அப்பியங்கஸ்னானம் செய்து மடிவஸ்திர முடித்தி சுசி யாகி வது தந்தை தர்ப்பாசனத்தி லமர்ந்து தன் வலப்பக்கத்தில் தனது பத்தினியை உட்காரவைத்துக் கொண்டு கண்டாநாதம் செய்துப் பிறகு

பஞ்ச கலசஸ்தாபனா

கேமயம் கோமூத்ரம், கோதயிர், கோவின் பால், கோவின் நெய், ஆக (5)ம் ஒன்றாகச் சேர்த்து மண்டபமத்தியில் மெழுகி அஷ்ட்டதள பத்ம கோலம் பஞ்சவர்ண மாவுகளினால் இட்டு தன் னிரு கைகளையும் பூமியில் வைத்து ஜெபிக்க

(1) பூமி சுத்தி மந்திரம்

ஓம் சிவசம்போ ராக்ய வக்ன, ப்ரவர்த்த மானஸ்ய
அபவித்ரோப சர்வாவஸ்து கதோபிவான்
யஸ்மரை புண்டரீ காட்க்ஷோ ஷபாம்ய ப்பாம்தர சுசிஹீ
ப்ரித்வீ த்வய ஹிருதாலோக தேவத்வம் விக்ரு நாத்ருதம்
பஞ்சதாரயே மாம்தேவி பவித்ரம் குரு சாசனம்
சம்மார்ஜ்ஜன சதம் புண்யம் சஹஸ்ரம் அநுலேபகம்
ரேகாசதம் சஹஸ்ரேஷு அனம்தம் பத்ம முச்யதே
பந்தம் பவஹரச் சைவ ஸ்வஸ்திகம் செதார்நாசனம்,
பத்ம புண்யம் பலஞ்சைவ முத்ரிதம் மோக்ஷசாதனம்
ருஷிகூர்மோ தேவதா ஜகதிச் சந்த;

என்றுத் தன்னிரண்டு கைகளையும் பூமியின் மேல் வைத்து ஜபித்துப் பிறகு அதேயிடத்தில்,

(2) வாழையிலே போட மந்திரம்

ஓஷதயஸ்சம் வதய்தே சோமேன சஹராக்ஞா யஸ்மை
க்ருணேதி ப்ராஹ்மணஸ் தகாம் ராஜன் பாரயாமசி

என்று கிழியாத இரண்டு தலைவாழையிலைகளைப் பரப்பி பிறகு,

(3) தானிய மந்திரம்

ஏனதோகாய தனயாய தான்யம் பீஜம், வஹத்வே அக்ஷிதம்
அஸ்மப்யம் தத்தஸ்தன யத்வ ஈமஹே
ராதோ விஸ்வாய சௌபகம்

என்னும் மந்திரப் பூர்வமாக நெல்லுபோட்டு இதிற் பாதி கோதுமை போட்டு இதிற் பாதி உளுந்து அல்லது பச்சைப்பயிர் இவைகளி

லொன்று போட்டு இதிற் ப்ாதி எள்ளு போட்டு இதிற் பாதி அரிசி பரப்பிப் பிறகு.

## (4) கோணம் அக்ஷரஸ் தாபித விவரம்.

நடுமையத்தில் பிறை எழுதி அதனுள் மேல் வரியில் ஓம்,, நடு வரியில்,நம,என்றும் கீழ் வரியில், சிவ, என்றும்மூன்று வரிசையாக எழுதி, இப்படி கிழக்கில் நீள் வட்டம் எழுதி அதனுள், ஓம், நம சிவய, என்று ஒன்றன் கிழொன்ருய் (3) வரி எழுதி, தெற்கில் ஐங்கோண மெழுதி அதனுள், ஓம், சிவய நம, என்று (3) வரி எழுதி மேற்கில் நற்சதுர எழுதி அதனுள், ஓம், சிவய நம, என்று (3) வரி எழுதி, வடக்கில் முக்கோண மெழுதி அதனுள்ஓம் வய நமசி, என்றுஒன்றன் கீழொன்ருக (3) வரி எழுதிபிறகு

---

## கலச, லக்ஷணம்

உலோகங்களில் தங்க கலசம் வெள்ளி கலசம், தாம்பிர கலசம், உருக்கு கலசம், இரும்பு கலசம், இக்கலயங்களாவது, இதில்லா விட்டால் மண்கலயங்களானவை பவளம் போலச் சிவந்ததாயும் கல்லும் துவாரமுமில்லாததாயும் கருகாதவையாயும் நன்ருப் வெந்துள்ளதாயும் குறுகியும் நீண்டு மிராததாயும் ஒரேபிரமாண முள்ளதாக (5) கலய மெடுத்து அக்கலயத்தை அஸ்திர மந்திரத்தால் சுத்திசெய்து வெள்ளை, சிகப்பு, கருப்பு, அல்லது வெள்ளை,நீலம், பச்சை, இம்மூன்றுவர்ண மூவிழை நூல் அல்லது (9) இழை நூலினுல் நெற்கிடை அல்லது எட்கிடை அல்லது ஆனைக்கண், அளவாக x. அகோர மந்திரத்தால் நூல் சுற்றி வைக்கவும். இன்னும் கலசங்களுக்குக் கீழ் எழுதி யிருக்கும் கமலமே மனம், தான்யமே பாதம், அரிசியே மண்டிகள், கூர்ஜ்ஜரமேலிங்கம் கலசமே தேஹம், நூலே நாடிகள், வஸ்திரமே தோல், கலயமாகிய மிருத்திகையே (மண்ணே) மாமிசம், ஜலமே உதிரம், மந்திரமே, பிராணன், ரத்தினங்களும, தங்கமும், மூளையும், அஸ்தியும், தேங்காய் சிரசு, பஞ்ச தளிர்கள், ஜடை, கேசம், நாக்கு, மாதுளம்விரைகள் தந்தமாயிருக்கும், இவைகளில் எந்த அங்கமும் குறையக் கூடாது,

## X, அகோர மந்திரம்.

ஸ்ரீம் அகோராய ஓம் த்ரிம் ஹ்ரிம் ஜகத் பரிதாய நம:
ஓம் ஹ்ரீம் அகோர மஹேசாய நம: ஓம் ஹ்ராம் ஹ்ரீம்
ஹ்ரூம் க்ஷம் பயாச சர்வ கணயசர்வபூத ஹநஹந மம்த்ர
யம்த்ர ரக்ஷ பாத யருத்ராய அகோர கர்ம மம்த்ரேணசதா
படுஸ்வர :

(5) பஞ்ச கலச ஸ்தாபன மந்திரம்

ஆகலஷேசு தாவதி சைனேவர்ம விகாஹதெ அபித்ரோணு
கனிக்ரதத் இதி சௌர்ணுத்ய தமபிலசான் தத்யாத்
ஓம் சத்யோ ஜாதாயநம : சத்யோ ஜாத வக்த்ராய நம :
ஓம் வாமதேவாயநம : வாமதேவ வக்த்ராயநம :
ஓம் அகோராய நம : அகோர வக்த்ராய நம :
ஓம் தத்புருஷாய நம : தத்புருஷ வக்த்ராய நம :
ஓம் ஈசான்யாயநம : ஈசான்ய வக்த்ராய நம :
ஓம் சத்யோ ஜாத வாமதேவா அகோர தத்புருஷ
ஈசான்யாய நமோநம :

என்னும் மந்திரங்களினால் நூல் சுற்றிய பஞ்ச கலசங்களை (32) அங்குல சதுரத்தில் நேருக்கு நேரும், மும்மூன்றுயிருக்கும் படியாக ஸ்தாபித்த பிறகு

(6) கலசங்களுக்கு ஜலமிடு மந்திரம்

இயம்மெ கங்கெயமுனெ சரஸ்வதி சுதுத்ரிஸ் தாமகாம்
சசதாபருஷ்ணியா அசிக்னியா மருத் விருதே விதஸ்த
யார்ஜ்ஜீ கியெ ஸ்ருணு ஹியாசு சோமயா
அமோவாதலி சர்வ விஸ்பதன்யாப : ப்ரபவா ஆப :
பசவ அபஹாசம் ம்ருடாபோ விலாபா ப :
ஸ்வராதா ப : வம்தலிஸ்யா ப : ஜோதிஆசா ப :
யஜுகுசா ப : சத்யமா ப : சர்வதேவதாஆ ப :
பர்புவ : சுவராப ஓம் இதி மம்த்ராப்யாம்
தீர்த்தோதக வபிமம்த்ரியம்

என்று ஈசான்யகலசத்தில் சுமார் இரண்டுபடி ஜலம் விட்டுப் பிறகு சத்யோஜாத கலசம் வரையில் 4-கலசங்களுக்கும் அதிற் பாதி ஒரு படி ஜலம் விட்டு

(7) கலசங்களுக்கு சந்தனமிடும் மந்திரம்

கந்தத் வாராம் துரா தர்ஷாம் நித்ய புஷ்பாம் கரீஷிணீம்
ஈஸ்வரீகாம் சாவ பூதானும் தாமியோ பஹ்வ யேஹ்ரியம்.

என்று கலசங்களுள்ளும் மேலும் சந்தனமிட்டு புஷ்ப மாலைகளைப் போட்டு.

(8) பஞ்ச ரத்தின மந்திரம்.

சஹிரத் நானி தாசு சேசு வாதி சவிதாப க :
தம்பாகம் சித்ர மீம ஹெ

என்று முத்து, வைடூர்யம், கெம்பு, இந்திர நீலம், பவளம், என்னும் பஞ்சரத்தினங்களை பஞ்ச கலசத்தில் போட்டு இவைகளில்லா விட்டால் சொர்னபுஷ்பம் போட்டுப் பிறகு

(9) பஞ்ச மிருத்திகா மந்திரம்

ஸ்யோனு பருதிவி நோபவா நிருக்ஷரா ணிவேசினீ
யச்டான ஸ்சர்ம சப்ரதா :

என்று பரிசுத்தமான புற்றுமண், ஏரிமண், அஸ்வசாலேமண், கஜசாலேமண், சவுட்டுமண், இந்த (5) மண்களேயும் தனித்தனியே பிசைந்து உருண்டைசெய்து கலசங்களுக்கொரு மிருத்திகை (மண்ணுருண்டை)யாக வைத்துப் பின்பு

(10) சுவர்ண மந்திரம்.

ஹிரண்யரூப சஹிரண்ய சம்துருக பான்ன
பாந்தேது ஹிரண்ய வர்ண : ஹிரண்யாத்
பரியோ னேர்நிஷத்யா ஹிரண்யம் தாதத்யம் நமஸமை

என்று சுவர்ணப் பிரதமைகளாவது அல்லது சுவர்ணத்துண்டுகளாவது கலசங்களில் போட்டுப் பிறகு

(11) பஞ்ச தளிர்கள் மந்திரம்

காண்டாத், கண்டாத், புரோஹமதி பருஷ : பரு : ஷபரி
ஏவானோ தூர் வேப்ரதனு சஹஸ்ரேண சதேனச
ப்ரவோ யக்ஞேசு தேவயம் தோ அர்ச்சம் தியாவானகாம்
ஹோபி : ப்ருதிவி இஷத்வியே ஏஷாம் ப்ரஹ்மண்ய
சமானி விப்ராவி ஷிர்வியந்தி வினிஞேனசாகா :

என்று அரசமரத்தளிர், மாமரத்தளிர், பெலாமரத்தளிர், ஆலமரத்தளிர், அத்திமரத்தளிர், இவைகளே வைத்து அறுகு தர்ப்பைகளே வைத்துப் பிறகு

(12) தேங்காய் மந்திரம்.

பூர்ண தர்வீ பராபத சுபூர்ண புநராபதவஸ்னெவ
விக்ரீணவ : இஷமூர்ஜ்ஜகாம் சதக்ரதோ, யாஹபலி
நீர்யா அபலா அபுஷ்பயாஸ்ச புஸ்பிணீ : ப்ருஹஸ்வதி
ப்ரசூதா ஸ்தாஞேமும் சத்வகாம் ஹச :

என்று தேங்காயாவதும், அல்லது இளநீர்ஆவதும் (5) கலசத்திற்கும் வைத்து. மாதுளம் பழவிதைகளே தளிர்களின் மீது வரிசையாக வைத்துப் பிறகு

(13) பஞ்ச வஸ்திர மந்திரம்.

யுவாசுவாசா : பரிவீத அகாத் சவுஸ்ரேயான்
பவதிஜாயமான : தம்தீராஸ் சகவய, உன்னயம்தி
ஸ்வாதியோ மனசாதே பயம்த :

என்று கிழக்கில் சத்யோஜாதம் பச்சைவஸ்திரமும், தெற்கில் வாமதேவம் சிகப்புவஸ்திரமும், மேற்கில் அகோரம் நீலவர்ணவஸ்திரமும்,வடக்கில் தத்புருஷம் வெள்ளே வஸ்திரமும், மத்தியில் ஈசானம் மஞ்சள் வஸ்திரமும், இப்படியாக பஞ்சவர்ண வஸ்திரங்களேத்தரித்துப் பிறகு ஐந்து கலசங்களேயும் சுற்றி ஒரு வெள்ளே வஸ்திரம் தரித்துப் பிறகு

(14) வெள்ளை நூல்சுற்றும் மந்திரம்.

தம்துதன்வன் ரஜஸோ பானு மன்விஹி ஜோதிஷ்மத :
பதோரக்ஷ தியச்ருதான் அனுல்பணம் பயசஜோ
குவமபோ முனூர்ப்பவ ஜனயா தைவ்யம் ஜனம்

என்று ஸுமங்கல்ய ஸ்திரீகள் கையால் நூற்ற ஒன்பது இழை சேர்த்த வெள்ளை நூலை நடுக்கலசத்தில் சுற்றிப்பிறகு, கிழக்கு கலசத்திற்கும், நடுகலசத்திற்கும், பிறகு தெற்கு கலசத்திற்கும், நடுக் கலசத்திற்கும், பிறகு மேற்கு கலசத்திற்கும் நடு கலசத்திற்கும் பிறகு வடக்கு கலசத்திற்கும் நடுக்கலசத்திற்குமாக மாறி மாறிச் சுற்றிப் பிறகு சுற்றிவர அதே வெள்ளை நூல் சுற்றிப் பிறகு

(15) தர்ப்பை கூர்ஜ்ஜரம்

பவித்ரம்தே விததம் ப்ரஹ்மணஸ்பதே ப்ரபர்க்காத்ராணி
பர்யேஷி விஸ்வத: அதப்த தனூர்னத தாமோஸ்னுதே
ஸ்ரிதாச இத்வஹம் தஸ்தத் சமாசத :

என்று (9) தர்ப்பை உத்தமம் (7) தர்ப்பை மத்திமம் (5) தர்ப்பை அதமம் இந்த லக்கத்திலொருலக்க தர்ப்பைகளை எடுத்து ஒன்று சேர்த்து நுணியில் நான்கு அங்குலம் விட்டு இரண்டங்குலம் முடிபோட்டு அடியில் (16) அங்குலம் விட்டு பவித்ரமாகக் கட்டி தர்ப்பை பவுத்திரத்தை நடுகலசத்தின்மேல் வைத்து ஒவ்வொரு தர்ப்பையை மற்றுமுள்ள கலசங்களின் மேல் வைத்து

(16) தாம்பூல புஷ்ப மந்திரம்

யாஹபலி நீர்யா அபலா அபுஸ்பாயாச்ச புஷ்பிணீ :
ப்ருஹஸ்பதி ப்ரசூதாஸ்தானோ புஞ் சத்வகாம் ஹச :

என்று தாம்பூலம் புஷ்பம் பழம் தேங்காய் முதலான பூஜாதிரவியங்களும், பஞ்சபத்ரீ, அதாவது வில்வபத்ரீ, வெள்ளைத்துளசி, நொச்சிபத்ரி, நெல்லிபத்ரி, எலுமிச்சன் பத்திரிகளும், புஷ்பங்களும் வைத்தலங்கரித்து, பாசிங்கம் கால்மோதிரம், வேஷ்டி புடவைகளையும், வைத்துப் பிறகு, விவாஹநாள் வது வரன் இவர்களின் தந்தைகள் பிராதக் காலையிலெழுந்து நித்திய கர்மங்களை முடித்து பத்தினி சமேதராய் அப்யங்கண ஸ்நானம் செய்து மடிவஸ்திரமுடுத்தி சுசியாகி வது கந்தையானவர் தர்ப்பாசனத்திலமர்ந்து தன் வலப்பக்கத்தில் பத்தினியை உட்காரவைத்துக் கொண்டு பூஜை செய்ய விபரம்

பஞ்ச கலச ஸ்தாபனம் முற்றிற்று

பஞ்ச கலச பூஜாரம்பம்.

ததேவலக்கனம் சுதினம் ததேவா, தாராபலம்சந்தரபலம்ததேவா
வித்யாபலம் தைவபலம்து தேவா, லக்ஷ்மீபதிம்ரம்பியுகம்ஸ்மராமி

என்று சொல்லிப் பிறகு கண்டாநாத மந்திரத்தால் கண்டா நாதம் செய்துப் பிறகு ஆசமனம் பிராணயாமம் செய்த பிறகு,

வெகுகாலமாகப் பேர்போன

# மாந்த சஞ்சீவி எண்ணெ.

குழந்தைகட்கு காமதேனு போன்றது
பாலியர்கட்கு—கற்பகதரு போன்றது
பெரியவர்கட்கு தேவாம்ருதம் போன்றது

## (1) தீரும் வியாதிகள்.

சகல மாந்தங்கள், எங்கல், இறைப்பு, தெக்கத்திக்கணை, அசதி ஜன்னி, முகவாத ஜன்னி, முதலான ஜன்னிகள் 13-ம் பளவரை, முட்டடப்பான், சுரம், சீதளம், அக்கினிமந்தம், அரோசகம், கபக்கட்டு, நெஞ்சுவலி, தொண்டைவலி, வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், வயிற்றில்பலவகை பூச்சிகள், கரப்பான்கள், கிரந்திகள் செவாப்பு, படை, சொரி, சிரங்கு, படர்தாமரை, சுசுரிக்கை, புண்கள், கடிவாளப்புண், கெற்பவூரல், மேகவூரல், மேகப்படை, கட்டிகள், சுரக்கட்டி, கக்கிருமல், தொண்டைக்கட்டு, சகல காமாலை, மலக்கட்டு, அண்டவாய்வு, கல்லடைப்பு, மகோதரம், இளப்பிளை வாத முதலான சகல வாதவலிகளும், சர்வதோஷங்களும், தீரும்.

## (2) அளவு

நான்கு நாள் குழந்தைக்கு, 4 துளியும் ஒருமாதக் குழந்தைக்கு, 10 துளியும் 3 மாதக் குழந்தைக்கு, 15 துளி அல்லது ஒரு காசளவும் 3 வயது முதல் 6 வயது வரையில், 50 துளி அல்லது காலணு அளவும், 12 வயது வரையில் 70 துளியும், பெரிய வர்களுக்கு 100 துளி அல்லது அரையணு அளவும், அவரவர்கள் சரீரத்திற்குத் தக்கபடி கூட்டியும் குறைத்தும் கொடுக்கவும்.

## (3) அநுபானம்

குழந்தை கட்கும் பாலர் கட்கும் தாய்ப் பாலிலாவது, துணியில் வடிகட்டின வெள்ளாட்டுப் பாலிலாவது, பசுவின் பாலிலாவது கொடுக்கவும். பெரியவர் கட்கு வெள்ளாட்டுப் பால், பசுவின் பால், தேங்காய்ப் பால், சுக்கு கஷாயம் இவைகள் ஒன்றில் சீனிசர்க்கரையும் இவ்வெண்ணெயும் சேர்த்துக் கொடுக்க நன்று.

(4) பத்தியம்

வியாதி யுள்ளவர்களுக்கு எண்ணை குடுத்த நாள் முழுதும் அரிசிநொய் அல்லது ரவை முதலிய கஞ்ஜியில் உப்பு சேர்த்து சாப்பிடவும். வெள்ளாட்டுப்பால், பசுவின் பால், சுக்குத்தூள் இவைகளும் சேர்த்துக்கொள்ளலாம். ரொட்டி, உப்புகலந்த சாதம் சாப்பிடலாம். புளி, புகையிலை, வாய்வு பதார்த்தங்கள், இனிப்பு வகைகள் சீதள பதார்த்தங்கள் கூடாது.

வியாதி யில்லாதிருந்து எண்ணை குடுத்தால் எவ்வித பத்தியமும் இருக்கவேண்டியதில்லை. புளிகலந்த மிளகுரசம் சாதம் சாப்பிடவும், நன்றாய் பேதியாகும்.

(5) பேதிநிற்க

பேதி அதிகமானால் வசம்பு சுட்ட கரியாவது மாங்கொட்டைப் பருப்பாவது பாலிலாவது குளிர்ந்த ஜலத்திலாவது தேனிலாவது கலந்து உள்ளுக்குக் குடுத்து வயிற்றின்மீதும் தடவ பேதி நிற்கும் மோர்சாதம் சாப்பிட்டாலும் பேதி நிற்கும்.

வியாதி அதிகமாயிருந்தால் கம்பளித்துணி யென்னும் பிளானல் துணியை கொதிவென்னீரில் நனைத்துப் பிழிந்து முதுகு வயிறு மார்பு கழுத்துவரையில் ஒற்றடமிட்டு ஈரம்துடைத்து இவ் வெண்ணையை மேலுக்கு தடவவும்.

எண்ணை குடுத்தபிறகு வாந்தியாகி பேதி யாகாதிருந்தால் நெஞ்சிலிருந்த பித்தம் கபம் மாத்திரம் நீங்கிற்றென வரிந்து சற்று நேரம் கழித்தாவது மறுநாளாவது பூரா அளவு எண்ணைகுடுக்க பேதியாகி சுகப்படும். மறுநாளும் வியாதி கொஞ்சமிருந்தால் இவ்வெண்ணையில் கால்பங்கு அளவு உள்ளுக்குக் குடுத்து மேலுக்கும் தடவவும்.

(6) வியாதி யில்லாத குழந்தைகட்கு

வழக்கமா இதை ஒருவாரம் அல்லது 10 - 15 நாளைக் கொரு தடவையாவது வயிற்றில் மந்தம், புளிப்பு, பொருமல், மலக்கட்டு, வயிற்போக்கு, முதலானவைகளுண்டாகி வயிர் சீர்கெட்டிருக்கும் போதாவது குழந்தைகளைக் கையிலெடுத்தால் பாரமாயிருக்கும்போதாவது உடனே இவ்வெண்ணை குடுத்துவந்தால் எவ்வகை வியாதியுமணுகாது.

விலை சீசா 1-க்கு ரு. 0—12—0

# வாத நிவாரண தைலம்.

## (1)—அளவு, அனுபானம்.

பெரியவர்கட்கு வேளை யொன்றுக்கு எட்டிலொருபங்கு வீதம் தினப்பிறதி காலை ஒருவேளை வீதம் 3 நாள், அல்லது 6 நாள், 6 வேளை சாப்பிடவும். 3, 4, தடவை பேதியாகும். அவரவர்கள் சரீரத்திற்குத் தக்கபடி அளவைக் கூட்டியும் குறைத்தும் கொடுக்கவும். இதைதனியாகவாவது வடிகட்டின வெள்ளாட்டுப்பால், பசுவின் பால்,தேங்காய்ப்பால், சுக்குகஷாயம், சர்க்கரை, இவைகளிலாவது சேர்த்து சாப்பிடவும்.

## (2)—பத்தியம்.

புளி, புகையிலை, வாய்வுபதார்த்தங்கள், ஒருவாரம்வரையில் கூடாது. வெள்ளாட்டுப்பால், பசுவின்பால், நெய், சர்க்கரை, துவரம் பருப்பு பயித்தம்பருப்பு, உப்பு சேர்க்கவும். தினப்பிறதி சாப்பிடுபவர்களுக்கு பத்தியமில்லை.

## (3)—தீரும்வியாதிகள்.

சரீரக்குத்தல், குடைச்சல், நடுக்கல், நடுக்குவாதம், தனுர்வாதம், சூலை, சூதகவலி, பக்கசூலை, பாம்புவிஷமுதலான சகலவிஷக் கடிகளும், வயிற்றுநோய், வயிற்றுவலி, மாரடைப்பு, மார்புநோய், மார்புவலி, வாதகுன்மம், வாதநோய்கள், விஷஜன்னி, வெதர்வாய்வு, வெதரில்சூலை, வெதரில்கட்டிகள், முதலான 8- வகை அண்டவாதமும் சகலவாய்வுகளும் வலிகளும் நாள்பட்ட வியாதிகளும் தீரும்.

அண்டவியாதிகட்கு இம்மருந்து உள்ளுக்குச் சாப்பிடுவதுடன் கழற்சிப்பருப்பு 1- இடையும், வெள்ளைப்பூண்டு, சுக்கு, நவாச்சாரமிவைகள் வகைக்கு $\frac{1}{2}$ இடையும் கோழிமுட்டை வெண்கருவிட்டரைத்து அண்டத்தின்மீது 3, நாளல்லது 6, நாள் பூசவும்.

ஒரு பீஜம் பருமனுவதும் வற்றுவதும் தொட்டால் வலியில்லாமலுமிருந்தாலிது ஹிரணியமேன்னும் ஆபரேஷன் வியாதியாகையாலிது சவுக்கியமாகமாட்டாது.

சூதகவலி,சூதகவயிற்றுவலி, முதலான கெற்பமுண்டாகாமலுள்ள ஸ்திரீகள் மாதவிடாயானநாள் முதல் தினப்பிறதி காலையில் 3, நாள் அல்லது 6, நாள் சாப்பிடவும். சூதகசம்மந்தமான வியாதிகளனைத்தும் மற்றும் கெற்பமின்னகோளாறுகளும் தீர்ந்து கெற்பத்தை நாசப்படுத்தும் புழுக்களும் செத்து உடனே கெற்பமுண்டாகும்

பலஹீனமுள்ள ஸ்திரீகள் மாதவிடாயானநாள்முதல் 3- நாள் சாப்பிட்டுப் பிறகு மறுமாதம் மாதவிடாயானதும் மறுபடி, 3- நாள் சாப்பிடவும். அல்லது தினப்பிறதி காலையிலாவது மாலையிலாவது படுக்கைக்குப் போகும்போதாவது காலறை அல்லது அரையறை அளவு தினமொருதடவை கால், அரை, ஒருமாதம் சாப்பிட்டுவர மீதமுள்ளவியாதிகளும் மலபந்தமும் சகலவியாதிகளும் தீரும். பெரியவர்கட்கு 8 வேளைக்கும், சிறுவர்கட்கு 16 வேளைக்கு, முள்ள

சீசா.—1 க்கு விலை. ரூ 2—0—0

# இரண சம்ஹார தைலம்.

சொரி. சிரங்கு, புண்கள், புரை ரணங்கள் ஆராத அழிவிரணங்கள், குழந்தைகளுக்கு காலில்காணும் கரப்பான்புண், கடிவாளப்புண், ஈசுரிக்கை, முதலானவைகளை சாணத்தாலாவது சோப்பினலாவது தினப்பிரதி தேய்த்துக் கழுவி ஈரம்துவட்டி இத்தைலம் தடவிக் கொண்டுவரவும், ரணமதிகமிருந்தால் குங்குமம் வைக்கவும் மூன்றுதினத்தில் பூரண சுகமுண்டாகும் ராஜபிளவை, முதுகுபிளவை, முதலிய ஆராதரணங்களுக்கு இத்தைலம் தடவி ஊதாங்குழலால் ஊதிய பிறகு இத்தைலத்தில் நனைத்த துணியை புண்ணின் மேல் மூடிவர எத்தனை கண் (முளை) வைத்திருந்தாலும் சஸ்திரசிகிச்சையின்றி குணமாகும். இதுஉண்மை, தற்புகழ்ச்சியல்ல. இரணங்களுக்கு இத்தைலத்திற்கு நிகரான தைலம் வேறுகிடையாது.

விலை சீசா 1க்கு ரூ. 0—6—0

# வயிற்றுக் கடுப்பு பவுடர்,—பல்பொடி.

அளவு — அனுபானம்

குழந்தைக்கு 1 முதல் 2 குன்றியிடையும், சிறுவர்க்கு 4 குன்றியிடையும், பெரியவர்க்கு 8 குன்றியிடையும், பாலிலாவது தேனிலாவது மோரிலாவது சர்க்கரையிலாவது தினமிருவேளை மூவேளை வியாதிக்குத் தக்கபடி 2 முதல் 6 நாள்வரையில் சாப்பிடவும்.

தீரும்வியாதிகள்

அதிசாரம், அஜீர்ணபேதி, சீதபேதி, ரத்தபேதி, வயிற்றுக்கடுப்பு, வயிற்றுவலி, கிருணி, வாய்ப்புண், இவைகள் தீரும். நீடித்தவியாதிக்கு ஒரு அரைமண்டலம் சாப்பிடவும்.

பத்தியம்

புளியம்பழபுளிப்புநீக்கி எலுமிச்சம்பழபுளிப்பு சேர்க்கவும்.

---

பல் துலக்கினபிறகு யிதில் ஒருசிட்டிகை எடுத்து பல் துலக்கிவர தந்தசூலை, பல்கூச்சம், பல்லசைவு பல்லரணை ஈறுகரைதல், ஈறுவீக்கம் ரத்தம்வருதல், நாக்கசுரம், வாய்ப்புண், வாய்நாற்றம், இவைகள் தீரும். பல்லசைவு நீங்கி கெட்டிப்படும்.

சீசா 1 க்கு விலை, ரூ 0—5—0

கிடைக்குமிடங்கள்—வைத்தியம் செங்கையப் பண்டாரம் குமாரன்

குருசாமி பண்டாரம், தகை, சேலம்.

பண்டிட். B. S. சாஸ்திரிகள்,

போட்டோ சாமான் வியாபாரம், நெ. 10 பஜார் தெருவு சேலம்

---

ராமகிருஷ்ண பிரஸ், வி. மார்க்கெட், சேலம்.

பாருங்கள்! பார்த்து வாங்கி!! களிகூருங்கள்!!!

# மகாராணி சந்தனாதி தைலம்

(ஜெனரல் ரிஜிஸ்டர்டு.)



## சகிக்க முடியாத உஷ்ணத்தை தணிக்கவல்லது.

மாமகாராணி யென்னும் சந்தனாதி
வாசமுடன் தேஜஸையும் உண்டுபண்ணும்
தீமையினால் அதிகரித்த சூடுதோற்றம்
செங்கதிரோன் கண்டபனிபோலே யாகும்
நாமகளும் பூமகளும் மேவிவாழ
நற்குடும்பம் யாவருக்கும் இதுவே காலம்
தாமதித்த லாகாதித் தைலம் தன்னை
தருவித்து உபயோக மாக்குவீரே.

இந்த பெருமை பொருந்திய தைலம் சந்தனம் தேவதாரு அகில் கிழங்குகள் புஷ்பங்கள் வித்துகள் பச்சிலை இன்னும் பலவிதமான மூலிகைகளைக்கொண்டும் எள்ளு எண்ணையால் தயாரிக்கப்பட்டது.

இந்த தைலத்தை பாலர் முதல் விருத்தர் வரை யாவரும் வாரம் இருமுறை அதிகாலையில் பாதாதிகேசம் வரையில் தேய்த்து ஸ்நானம் செய்துவர தீரும் வியாதிகள்.

கண் சிகப்பு, கண்ணெரிச்சல்: கிருமிகளால் உண்டான நீர்வடிதல், உள்ளங்கால் உள்ளங்கை எரிச்சல், நீர்ச்சுருக்கு இன்னும் இதுபோன்ற பலவித உஷ்ணத்தையும் கதிரவனைக்கண்ட பனிபோல் விலக்கி மூளைக்கு வலுவையும் குளிர்ச்சியையும் கண்ணுக்கு ஒளியையும் முகத்திற்கு வசீகரத்தையும் புத்திக்கு தெளிவையும் திரேகத்திற்கு ஆரோக்கியமும் காந்தியையும் கொடுத்து சுகந்த நறுமணம் தருவதில் இதுபோன்ற வேறு எந்தவித தைலமும் கிடைப்பதரிது என்பது உண்மை. நிற்க,

பெண் மக்கள் வனப்பிற்கு கூந்தலைத் தவிர வேறொன்றில்லை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம் அக்கூந்தலை வளர்த்துவதற்கு இதுவே தாய். இத் தைலத்தை உபயோகித்தவர்கள் அதன் மேன்மையான குணத்தைக் கண்டறிந்து நன்கு புகழ்ந்து நற்சாக்ஷி பத்திரம் கொடுத்திருக்கிறார்கள். இந்த உயர்ந்த தைலத்தை யாவரும் வாங்கி உபயோகிக்கும்படி குறைந்த விலைக்கு விற்பனை செய்துவருகிறோம்.

ஆதலால் ஒவ்வொரு குடும்பங்களிலும் அவசியம் வாங்கி உபயோகித்து அதன் மேன்மையான குணத்தைக் கண்டு நற்சாக்ஷி பத்திரம் கூறவேண்டும்.

| | |
|---|---|
| 24 அவுன்ஸ் புட்டி 1-க்கு | 2—0—0 |
| 6 அவுன்ஸ் டின் 1-க்கு | 0—8—0 |
| 1 அவுன்ஸ் சேம்பில் டின் 1-க்கு | 0—2—0 |

கனம் மந்திரி P. T. ராஜன் அவர்களால் நன்கு [illegible]ந்து நற்சாக்ஷி பத்திரம் கொடுத்திருக்கிறார்கள்

வாலிபத்தின் வண்மை! வயதோதிகத்தில் லாபம்!!

# ரதி மன்மத சிந்தாமணி லேகியம்.

(ரிஜிஸ்டர்.)

இல்லற வாழ்க்கைக்கு, இணையற்ற தேவாமிர்தம்

அனேக வித்து சத்துள்ள சறக்குகளைக்கொண்டு நெய், தேன், பால், சேர்த்து சுருதி, யுக்தி, அனுபவம், மூன்றையும், அனுசரித்து லேகியபாகமாய் செய்யப்பட்ட அவுடதம் பத்தியமில்லை.

நரம்பு தளர்ச்சி, தேகமெலிவு, பலமின்மை, வீரிய குறைவு, இவைகளால் நீங்கள் தளர்வடைந்திருந்தால் இன்றே ரதி மன்மத சிந்தாமணி லேகியம், வாங்கி உபயோகித்து தேகத்தில் உள்ள எவ்வித வியாதிகளையும், அறவே நீக்கிபோனபலத்தை மீட்டி, உங்களை உண்மையில் ஒரு புதியமனிதனாக்கிக்கொள்ளுங்கள். அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்கே எங்கள் மருந்து கிடைக்கும். வீண் காலம் தள்ளாமல் மறந்து விடுமுன் இன்றே இப்பொழுதே ஒருசேர்வாங்கி உபயோகித்து அதிலுள்ள இன்பத்தைக்கண்டு களி கூருங்கள். இந்த உயர்ந்த லேகியத்தை யாவரும் வாங்கி உபயோகிக்கும்படி குறைந்த விலைக்கு விற்பனை செய்துவருகிறோம்.

முதல் நெம்பர் சேர் 1-க்கு ரூ. 3—0—0.

சகல வியாதிகளுக்கும், மருந்துகள் கிடைக்கும்.

விலாசம்:—

மானேஜர்,

ராஜா சித்த வைத்தியசாலை,

தம்மண்ண செட்டி ரோட்,

செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

சுகந்தவாடை! நறுமணம்!!

# சதிசுலோசனு ஹேராயில்,

இந்த தைலத்தை பெரிய சமஸ்தானங்களில் அந்தப்புர ஸ்திரீகளால் அருமையுடன் உபயோகித்து வந்த பரிமள கூந்தல் தைலம் இந்த தைலத்தை கூந்தலில் தடவிய மாத்திரத்திலேயே இதன் நறுமணம் மற்ற இடங்களிலெல்லாம் பரவி எவர் மனதையும் ஆகர்ஷித்துவிடும். இதன் அதிமனோகரமான பரிமளம் இவ்வளவு என்று சொல்லுவதை பார்க்கிலும் அதை உபயோகித்து அதன் அருமையான குணத்தை தெரிந்துகொள்வதே நலம்.

ஒரு முறை உபயோகித்தால் மறுமுறை இதைவிட எதையும் தேடீர். விலை புட்டி 1-க்கு 0—8—0

பரிமளம் பரீக்ஷிக்க முன்வாருங்கள்.

## சாரதா பல்பொடி.

இந்த பல்பொடியை தினந்தோறும் பல்துலக்கி வந்தால் வாய் நாற்றத்தை போக்கி பற்களை வெண்மையான பிரகாசத்தைக்கொடுத்து மனோஉற்சாகத்தை உண்டாக்கக் கூடியது. இனிப்பு உப்பு இரண்டு விதம் உண்டு. பேக்கெட் 1-க்கு 0—1—0

## அசோகா படைமருந்து.

சரீரத்திலுண்டாகும் எச்சிற்றழும்பு, வண்டுகடி, மேகபடை, இடுப்பு துடை, துடை நீர்கசிவு, அரிப்பு முதலியவைகளையும் ஒரே நாளையில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். கைகண்ட மருந்து தைலம்போலும் வெண்ணைபோலும் இரண்டு விதம் உண்டு.

புட்டி 1-க்கு விலை அணா 0—5—0

## சர்வதேள் விஷ சஞ்சீவி.

தேள் மகாகொடிய விஷமுள்ளது வீட்டில் மருந்திருந்தால் விஷம் சிரசுக்கு ஏராது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் வாங்கி வைக்க வேண்டியது. இரண்டுவித மருந்து அடங்கிய

பேக்கெட் 1-க்கு விலை 0—6—0

## S. V. ராஜா பத்மா பரிமளசாலை,

தம்மண்ண செட்டி ரோடு,

அரிசிபாளையம், செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

விற்பனை செய்யக்கூடிய வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கிடைக்கும்.

காதலற்கு ஏற்ற

# காமபாண மாத்திரை

ஆண், பெண், இருபாலரும் இணையற்ற இல்லற இன்ப சுகபோகங்களுக்கு ஏற்ற முறையில் தயார்செய்யப்பட்டவை.

திரேக பலமிழந்து சர்வநாடி நரம்புகள் தளர்ந்து இல்வாழ்கையில் இன்பமதில்லாமல் இடர்படும் இளையோரே இளமைச் செல்வத்தை இழந்துவிடாமல் சுகப்படுங்கள் இதுவோர் திவ்விய சஞ்சீவி.

இந்த மாத்திரையை ஆயிரம் கணக்கான ஜனங்கள் உபயோகித்து அதன் உண்மையான குணத்தை அறிந்து நன்கு புகழ்ந்து கொண்டாடுகிறார்கள்.

உயர்ந்த மாத்திரையை யாவரும் வாங்கி உபபோகிக்கும்படி குறைந்த விலையில் விற்பனை செய்துவருகிறோம்,

சீக்கிரம்! சுகம்!! தேடுங்கள்!!!

24-மாத்திரை புட்டி 1-க்கு ரூ. 1—8—0

**காமபாண மாத்திரை டிப்போ,**
தம்மண்ண செட்டி ரோடு,
செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. India.)

கோல்டன் பிரஸ் செவ்வாய்ப்பேட்டை.



ஸ்ரீ ஜகத்குருபஞ்சாசார்யேப்யோநம:

## மஹாசிவன் ராத்திரி, ஸ்ரீ ஜகத்குரு பண்டிதாராத்யர் விஸ்வாராத்தியர், ஜயந்தி மஹோர்ச்சவ

# ஆறும் ஆண்டு பத்திரிக்கை.

சுப்ரபோதாகம சுலோகம்.

*மத்பஞ்சவதநோத்பூதா: சர்வ ஏவகுரோத்தமா:*
*தத்சிருஷ்டாணும்ச சர்வேஷாம் தத்சாயர்த்யம் கதம்பவேத்*
*தஸ்மாத் பஞ்சவிதாசார்யா: பஞ்சபீடாதிதேவதா:*
*பஞ்சசிம்ஹாசநுதீசா ஜகத்குருதமாஸ்சதே.*

அங்கிங்கெனு தெங்கும் பிரகாசமாயும் ஆனந்த பரிபூர்ணமாயும் விளங்கிக்கொண் டான்மாக்களைத் தன் திருவடித்தாமரையில் பின்னப்படுத்வான்வேண்டி பஞ்சகிருத்தியங்களை நடாத்தும் சிவபெருமானையடைந்தின்புறும் விரத மார்க்கங்கள் பலவற்றினும்மேம்பட்டதும் சொற்பகிரியைகளினுல் அனந்தபலன்களைத்தரும் விரததினமாகிய நாளது (15-2-31) பிரமோதூத-ஹு மாசி மீ 4-வ பானுவாரம் இரவு சதுர்த்தசியில், சேலம் ஜில்லா ராசிபுரம் தாலுக்கா நாமகிரிப்பேட்டை கடைத்தெருவில் ஸ்ரீ தம்பையர் மாடி வீட்டிலமைத்திருக்கும் ஸ்ரீ பஞ்சாசாரியரின் நிலபத்தில் மஹாசிவன்ராத்திரி மஹோர்ச்சவ பூஜாவைபமும், ஸ்ரீ ஜகத்குரு விஸ்வாராத்தியர் ஸ்ரீ ஜகத்குரு பண்டிதாராத்திய ஜயந்தி மஹோற்சவமும், வீரசைவமஹேஸ்வர ஜங்கம குலத்தினர்களுக்கும் மற்றும் வீரசைவ பக்தகோடிகளான சஹோதர சஹோதரிகளுக்கும் சிவலிங்க மஹாபிஷேகாராதன பிரசாத விநியோகங்களை நடாத்திவைத்தும் மறுநாள் (16-2-30) திங்கட்கிழமை உதயாதி முதல் தேவையானவர்களுக்கு சிவலிங்கதாரணம் தீக்ஷை முதலானவைகளுக்கும் கணராதனை முதலான சந்தர்ப்பணங்களும் செய்வித்து அன்று மாலையும் செவ்வாய்க்கிழமை காலையும் சிவநேயச்செல்வர்களாகிய அயலூர் உள்ளூர் சத்பக்த சிரோன்மணிகளால் நடைபெறும் சன்மார்க்க சதாசார சத்விஷய உபன்யாசங்களும் அன்றிரவு 7மணிக்குமேல் நடைபெறும் ஸ்ரீ பஞ்சாசார்யர் ஊர்வல மகோர்சவத்திற்கும் இப்பத்திரிக்கையைக்கண்ணுறும் சர்வ வீரசைவ மஹேஸ்வர பக்த சிகாமணிகள்வனைரும் சஹகுடும்ப பந்து சமேதராய் விஜயம் செய்து இவ்வினிய விரத வரிய மஹோற்சவ ஜயந்திகளை சகலவைபவங்களுடன் இன்புற நடாத்தி அன்பு ததும்பி அருள் பெற்றுய்யுமாறு பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ வீரசைவஜங்கம குலாபிமானிகள், நாமகிரிப்பேட்டை.

## விபூதி தாரண கிரமம்.

விபூதி சிவஸ்வரூபமும் ஜலம் சக்திஸ்வ ரூபமுமாகையால் கிரகஸ்தர்கள், ஸ்த்திரீகள் திரிசந்தி காலங்களிலும் ஜலமிசிர விபூதியே யணியவேண்டியது, எல்லா அதிதிகளும் சந்நியாசிகளும் எக்காலங்களிலும் ஜலமிசிரமில்லாத விபூதியே யணியவேண்டியது, வானப்பிரஸ்தர்கள், கன்னிகைகள், தீக்ஷையில்லாத புருஷர்கள், பாலர்கள் மத்தியான்மான உச்சிகாலம் வரையில் ஜலமிசிர விபூதியும், பிறகு மறுநாள் சூர்யோதயம் வரையில் ஜலமிசிரமில்லாத விபூதியே யணியவேண்டுமென ஸ்காந்த ஸ்லோகாதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

## விபூதி ஸ்நாந மந்திரம்

ஸ்நாநம் செய்த பிறகு பரிசுத்தமானயிடத்தில் வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் ஆசனத்திலமர்ந்து. ஓம் ஹ்ரீம் ஈசாய நம: என்றுச்சரித்து வலதுகை பெருவிரல், நடுவிரல், பவுத்திரவிரல் ஆக இம்மூன்று விரல்களினால் விபூதியெடுத்து, ஓம் நம; சிவாய என்றுச்சரித்து இடதுகையில் வைத்து வலதுகை மூடி வலது துடைமேல் வைத்து,

ஓம் ஹ்ராம் ஓம் சதாசிவாய நம; புனிதயநத்
சர்வம் திரிபுண்ட்ராத்ம சதாசிவ:
ஐஸ்வர்யப் பிராப்தி பீஜாய தஸ்மை ஸ்ரீ பஸ்மனே நம:

என்று நமஸ்கரித்து, ஓம் சிவாய நம: என்னும் மூலமந்திரத்தை யுச்சரித்து ஜலம் விட்டு, மானஸ்தோக: திரியாயுஷ: திரையம்பக எனக்குழைத்து பெருவிரல் கடைவிரலிரண்டும் விட்டு மத்திய மூன்று விரல்களாலிரு கைகளினலும்

1. ஓம் ஹ்ர: யம், ஈசாய நம: என்று சிரசிலும்,
2. ஓம் ஹௌரம்ரம்வாம். தத்புருஷாய நம: என நெற்றியிலும்,
3. ஓம் ஹ்ரைம் சிம், அகோராய நம: என ஹ்ருதயத்திலும்,
4. ஓம் ஹ்ராம் மம், வாமதேவாய நம: என்று நாபிலும்,
5. ஓம் ஹ்ரீம் நம், சத்யோஜாதாய நம: என இரு பாதங்களிலும் அல்லது இரண்டு முழங்கால்களிலும்,

6. ஓம் ஹ்ராம் ஓம் சதாசிவாய நம: என சர்வாங்கத்திலும் என்றுவிரண்டு புயங்களிலும், 2-முழங்கைகளிலும் 2-மணிக்கட்டுகளிலும், 2-விலாப்புரமும், முதுகு, கழுத்து முதலான விடங்களில் மேலே ஆறுவதாகச் சொன்ன சர்வாங்க மந்திர உச்சாரணத்தினலேயே யணியவேண்டியது, இதில் ரெட்டித்த ஸ்தானங்களை ஒன்றாக கணக்கிட்டால் 11-ஸ்தானமாகும். இதுவே ஏகாதச ஸ்தானங்களெனவும், மேற்சொன்ன 1 முதல் 6-லக்கமிட்ட ஸ்தானங்களே அங்கஸ்தலமெனவும் சொல்லப்படும், இன்னும் 32-ஸ்தானங்களிலணிவதுமுண்டு, மேற்சொன்னபடி மூவிரல்களாலேயே ஒவ்வொரு வீரசைவ ஸ்த்ரீ புருஷர்களும் தினப்பிரதி விபூதி யணிந்த பிறகே சிவலிங்க பூஜை செய்யவேண்டியது.

# சோடசோபசார பூஜா மந்திரங்கள்.

## (1) ஜலஸ்நாந மந்திரம்.

கங்காசாகர நர்மதாச யமுனீ கோதாவரி கோமதீ
துங்கத்வார கயாப்பிரயாகபதரி வாரணசி சைந்தவீ
கன்யஸ்வேது சரஸ்வதி பிரபிருதயோ ப்ரஹ்மாண்ட
மத்யாகிலம்
தீர்த்தஸ்நாந சஹஸ்ர கோடிபலம் ஸ்ரீசம்புபாதோதகம்
இதிமந்த்ரேண சுத்தோதக கேனஸ்நாபயாமி.

இம்மந்திர படனபூர்வமாக சுத்த ஜலத்தால் சிவலிங்கத்தை ஸ்பஷ்டமாகக்கழுவி மடிவஸ்திரத்தால் துடைத்தபிறகு,

## (2) வஸ்திர சமர்ப்பண மந்திரம்.

மாயாசித்ர படச்சன்ன நிஜகுஹ்யோ ருதேஜஸே
நிராவரண விக்ஞான வஸ்த்ரம்தே கல்பயாம்யஹம்
ஓம் சிவாய நம: வஸ்த்ரம் சமர்ப்பயாமி.

## விபூதி தாரண மந்திரம், தனக்கு.

விபூதி பூர்ஷணம் சைவே விதிகர்ம விநாசனம்
யமர்லோஹபயம் நாஸ்தி சிவர்லோஹ மஹியதே
எனத் தன் ப்ரூமத்ய ஸ்தானத்திலணிந்த பிறகு,

## (3) விபூதி லிங்கத்திற்கு.

அநாதி சாஸ்வதம் சாந்தம் சைதன்யம் சித்ஸ்வரூபம்
சித்பஸ்மவ்ருஷபாகாரம் ஜிதங்கம் லிங்கதாரணம்
இதிமந்த்ரேண பஸ்மதாரணம் கரோமி.

## (4) சந்தனதாரண மந்திரம்.

பரமானந்த ஸௌரப்யம் பரிபூர்ணம் திகம்தரம்
க்ருஹாண பரமம் கந்தம் க்ருபாய பரமேஸ்வரஸ்ரீ
சாம்பசதா சிவாய நம: இதிகந்தம் சமர்ப்பயாமி.

## (5) அக்ஷத தாரண மந்திரம்.

அக்ஷதான் தவளான் தேவம் தாபருக்தமபூஜிதம்
தாரயேண் மூலமந்த்ரேண லிங்கமூர்த்நின் சமாஹித:
ஸ்ரீசாம்பசதாசிவாய நம: இதி அக்ஷதான் சுவாஹா

## (6) பத்ரீ புஷ்ப தாரண மந்திரம்

திரிதளந்த்ரீ குணாகாரம் திரிநேத்திரம்ச த்ரியாயுதம்
திரிஜன்மபாபசம்ஹாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்
திரிசாக்ருன் பில்வ பத்ரைஸ்யயக்ஷித்ரேஹகோமலை:
சுப்ரு: தவபூஜாம்கரிஷ்யாமி பிரசீதமே பரமேஸ்வர
சேவந்தி காபகுல சம்பக பாடிலாப்ஜ்ரு:
பில்வப்ரவாள துளசீதள மல்லிகாபிசித்வாம் பூஜயாமி
ஜகதீஸ்வரமே பிரசீத ஸ்ரீசாம்பசதாசிவாய நம:
இதிமந்த்ரேண நாநாவித பத்ர புஷ்பாணி சமர்ப்பயாமி:

### (7) தூப மந்திரம்.

வனஸ்பதி ரசோப்ரேதோ கம்தாட்யோ தூபமுத்தம:
ஆக்ரேய: சர்வதேவானும் துபோயம் ப்ரதிக்ருஹ்யதாம்
ஸ்ரீசாம்பசதா சிவாய நம: இதிதூப மாக்ராபயாமி.

### (8) தீப மந்திரம்.

சாஜ்யம் ஸ்ரீவர்த்தி சம்யுக்தம் வர்மிணுயோ சிதம்ப்ரியம்
பக்த்யாதி சம்ப்ரயஷ்டீ தேவாய பரமாத்மனே
ஸ்ரீசாம்பசதா சிவாய நம: இதிமம்த்ரேண தீபம்தர்சயாமி.

### (9) கற்பூர மந்திரம்.

கற்பூரகௌரம் கருணவதாரம் சம்சாரசாரம் புஜகேந்த்ரஹாரம்
சதாவசம்தம் ஹிருதயாரவிம்த்யோ பவம் பவானிசஹிதம்சமாமி
ஸ்ரீசாம்பசதா சிவாய நம: இதிமந்த்ரேண கற்பூரதீபம் ஸ்வா:

### (10) நைவேத்ய சமர்ப்பணம்.

திராக்ஷாகர்ஜ்ஜுர சம்யுக்தம் நாரீகேளபலான் விருதம்
மதுசர்க்கரை யாயுக்தம் நைவேத்யம் சப்ராகல்பயேத்
ஸ்ரீசாம்பசதா சிவாய நம: இதிநைவேத்யம் சமர்ப்பயாமி.

### (11) அர்க்யம் கொடுத்தல், நீர்விளாவல்

தபோக்தமாங்கசம்சாரி பாவனம் பரமோதகம்
அர்க்யரூபேண தாஸ்வாமி ஸ்வீகுரு பிரமதாதிப:
ஸ்ரீசாம்பசதா சிவாய நம: தாம்பூலம் சமர்ப்பயாமி

### (12) தாம்பூல சமர்ப்பணம்.

கிரமுகம்ச சிலாசூர்ணம் நாகவல்லி தளோருத:
ஜாதிலவங்க சம்யுக்தம் தாம்பூலம் பிரதிக்ருஹ்யதாம்
ஸ்ரீசாம்பசதா சிவாய நம: இதிபாணீயம் சமர்ப்பயாமி.

### (13) புஷ்பாஞ்ஜலி மந்திரம்.

மம்தாரகுந்த ஹரிசந்தன பாரிஜாத்ரு மத்தாலவிரும்த
நிருதக்வணிகீத நைத்ரு: நாநாவிதான கான்யே:
ரபிசம்சமாநிரு: புஷ்பாஞ்ஜலிம் பசுபதோர்ப்பயாமி.

### (14) தியான மந்திரம்

சாம்தம் பத்மாசனஸ்தம் சகிதர மகுடம் பஞ்சவக்த்ரம்
திரிணேத்ரம் சூலம் வஜ்ரம் சகட்கம் பரசும பயதம்
தக்ஷபாகே வஹம்தம் நாகம் பாசம்ச கண்டாப்ரளய
ஹுதவஹம் சாங்குசம் வாமபாகெ நாநாலங்காரயுக்தம்
ஸ்படிகமணிநிபம் பார்வதீசம் நமாமி. ஸ்ரீசாம்ப
சதாசிவாய நம: இதிதியானம் சமர்ப்பயாமி

### (15) பிரதக்ஷண மந்திரம்.

பிரகுருஷ்ப பாபநாசாய ப்ரகுருஷ்ட பலசித்தயே
பிரதக்ஷணம் கரோமி சப்ரசீதபரமேஸ்வர, சர்வார்த்த
சாதனோபாய சர்வைஸ்வர்யப்ரதாயக, சமஸ்தாபத்
பிரதீகார சந்த்ரசேகரதே நம:, ஸ்ரீசாம்பசதா சிவாய நம:,
இதிமம்த்ரேண பிரதக்ஷணம் கரோமி

## (16) நமஸ்கார மந்திரம்.

நம: சிவாய சாந்தாய நம:, சோமாய சம்பவே நம:
நம: சிவாய கல்யாணி பதயெதே நமோநம:
நம: சிவாய சர்வாய ம்ருடாணி பதியே நம:
நம: சிவாய ருத்ராய சங்கராய நமோ நம:
**ஸ்ரீ**சாம்பசதா சிவாய நம: இதிநமஸ்காரம் கரோமி.

## (17) கண்டாநாத மந்திரம்.

ஆகமார்த்தம்து தேவானும் கமனார்த்தம் துரக்ஷசாம்
குர்யாகண்டாரவம் நித்யம் சர்வோபத்ரவ நாசனம்
**ஸ்ரீ**சாம்பசதா சிவாய நம: இதிகண்டாநாதம்ஸ்வா:

## (18) ஸ்தோத்திர மந்திரம்.

ஹரசம்போ மஹாதேவ விரூபாக்ஷத்ரிலோசன
தயாசிந்தோ தீனபந்தோ ரக்ஷரக்ஷ மஹேஸ்வர
மாயாசமுத்ரபதிதம் அநந்தகலஷான் விதம்
மாமத்ருஷ்ய மஹீசான பக்தவத்சல சங்கார

## (19) சஜ்ஜெலிங்கதாரண மந்திரம்.

கைலாச சிகரே ரம்ய சங்கரஸ்ய சிவாலயே
தேவதாயத்ர மோதந்தி தன்மெமன: சிவசங்கல்பமஸ்து
ஓம் சிவாய நம: இதிசஜ்ஜெலிங்கதாரயேத்

# 27—2—30 சுக்கில-ஸு மாசி-மீ ஐந்தாமாண்டு வசூல்


| | | | | |
|---|---|---|---|---|
| நாமகிரிப்பேட்டை | நம்மவர் பொது சீட்டுவகை | 50 | 0 | 0 |
| ,, | பெரியதனம் பழனிசாமி ஐயர் | 1 | 0 | 0 |
| ,, | காரியஸ்தர் சொ. கெங்காதரய்யர் | 5 | 0 | 0 |
| ,, | வைத்தியம் S. பழனிசாமய்யர் | 5 | 0 | 0 |
| ,, | தம்பையர் | 1 | 0 | 0 |
| ,, | மு. கொமாரசாமி ஐய்யர் | 2 | 0 | 0 |
| ,, | ச. வீரய்யர் | 1 | 0 | 0 |
| ,, | ரா. அருணஜலய்யர் | 1 | 0 | 0 |
| ,, | அ. மு. முத்யாலய்யர் | 1 | 0 | 0 |
| ,, | ப. அர்த்தனரி அய்யர் | 0 | 8 | 0 |
| ,, | சென்னபசவய்யர் | 0 | 8 | 0 |
| ,, | செரபய்யர் | 0 | 8 | 0 |
| ,, | பெத்தன்னெய்யர் | 0 | 8 | 0 |
| ,, | கைலாசய்யர் | 0 | 8 | 0 |
| ஷை ஊர் வண்டிப்பட்டரை சி. பழனி ஆசாரி எரிகரும்பு | | 2 | 0 | 0 |
| வெள்ளைக்கல்பட்டி, அருணஜலய்யர் தயிர்குடம் 2-க்கு | | 1 | 4 | 0 |
| ,, | முத்தைய்ய பண்டாரம் | 0 | 8 | 0 |
| புதுப்பட்டி, சிதம்பர பண்டாரம் | | 1 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| சேலம் குகை வை. செ. குருசாமி ஐய்யர் | 15 | 4 | 6 |
| ,, ச. சுப்பபண்டாரம் | 2 | 0 | 0 |
| ,, ஷெயார் வசம் வசூல் | 1 | 2 | 0 |
| ,, ம. மு. பெத்தன்னைய்யர் | 0 | 0 | 0 |
| ,, சைனிக பொம்மண்ண செட்டி | 0 | 8 | 0 |
| சேலம் அம்மாபேட்டை பெரியதனம் சின்னசாமய்யர் | 5 | 0 | 0 |
| ,, பொது வசூல் ஷெயார் வசம் | 2 | 0 | 0 |
| மேட்டுப்பட்டி, அங்கம்மாள் வரவு | 4 | 0 | 0 |
| நீர்முள்ளிகுட்டை உபாத்தியாயர் ராஜுலய்யர் வரவு | 1 | 0 | 0 |
| ஷெயூர் சங்கரைய்யர். மாரிமுத்தம்மாள் | 0 | 8 | 0 |
| சேசன்சாவடி, பொன்னுசாமி பண்டாரம் | 1 | 0 | 0 |
| சோம்பட்டி, நாகைய்யர் மூர்த்தியம்மாள் | 2 | 0 | 0 |
| வேப்பிலைப்பட்டி பெரியதனம் முத்துசாமய்யர் | 4 | 0 | 0 |
| ஈஸ்வரமூர்த்திபாளையம் உபாத்தியாயர் வசம் வசூல் | 4 | 0 | 0 |
| தாண்டாகவுண்டன்பாளையம் நல்லுசாமி பண்டாரமும் கி. மு. வும் | 1 | 8 | 0 |
| முள்ளுகுரிச்சி கி. மு. முத்து கவுண்டர், அரப்புளி கவுண்டர் | 2 | 0 | 0 |
| ,, சுப்பரமணிய செட்டியார் | 0 | 4 | 0 |
| பெரியகுரிச்சி மூக்காண்டி காளிக்கவுண்டர் | 1 | 0 | 0 |
| பெரிய சக்கிடி குழந்தைவேல் கவுண்டர் | 2 | 0 | 0 |
| உல்லிபுரம் பெரியதனம் பெத்தன்னையர் | 1 | 0 | 0 |
| நாகம்பட்டி கி. மு. லட்மண நாயக்கர் | 1 | 0 | 0 |
| ,, நடுநாயக்கர் துரைசாமி நாயக்கர் | 1 | 0 | 0 |
| கீரைப்பட்டி அ. முத்துசாமய்யர் | 4 | 0 | 0 |
| ,, பஞ்சாயத்கோர்ட் கி. மு. வசம் | 4 | 0 | 0 |
| நைஜாம் இலாகா மண்மேடு பெத்தன்னைய்யர் மணியாடர் | 2 | 0 | 0 |
| அருக்கோணம் தாலுக் நெமலி வைரம் பழனி ஐயர் ,, | 2 | 0 | 0 |
| சத்துவாசாரி முத்துகேடி வீரய்யர் ,, | 3 | 0 | 0 |
| ஆர்பூர் பெரியாங்கும்பம் R. மல்லைய்யர் ,, | 0 | 8 | 0 |

| | | | |
|---|---|---|---|
| மதுரை அ. வீ. சக்ரபாணி பண்டாரம் ,, | 1 | 0 | 0 |
| ,, மு. லிங்க பண்டாரம் ,, | 1 | 0 | 0 |
| ஸ்ரீ திசாமான் ஏலம்போட்ட வகையில் | 4 | 0 | 0 |
| சென்ற வருஷத்திய இருப்பு | 1 | 0 | 0 |
| ஆக மொத்த வரவு | 130 | 6 | 0 |

## சிலவு டாப்பு விபரம்.

| | | | |
|---|---|---|---|
| பத்திரிகை அச்சிட்டது தபால் சிலவு | 15 | 4 | 6 |
| பந்தல் சிலவு, விலாரி, ஈஞ்சி, கமுகு, வாழை, வாசனை திரவியம் | 7 | 4 | 0 |
| வாத்தியகாரருக்கு .... .... | | 2 | 0 |
| பஞ்சகலச ஸ்தாபனம், வஸ்திரம், லிங்கம், தீபதைலம் | 15 | 2 | 0 |
| அபிஷேக சாமான்கள், பால், நெய் வகைரா | 8 | 8 | 0 |
| சந்தன புஷ்ப தாம்பூலம், பழம், தேங்காய், கற்கண்டு | 8 | 8 | 0 |
| பலகாரச் சிலவு வகைரா | 20 | 8 | 0 |
| பிரசாத சிலவு காய்கறி வகைரா | 25 | 8 | 0 |
| ஊர்வல மஹோர்ச்சவ சிலவு கியாஸ்லைட் | 18 | 12 | 0 |
| சமயல்காரர் சிலவு, சிப்பந்திகள் சிலவு | 6 | 12 | 0 |
| ஆக சிலவு வகைரா மொத்தம் | 134 | 4 | 6 |
| அதிக சிலவு | 3 | 14 | 0 |



சென்ற ஐந்தாண்டுகளைப் போலவே இவ்வாரா மாண்டும் இப்பகவத் கைங்கர்யத்தில் தங்கள் தங்களா லியன்றளவு சிரமமெடுத்துக்கொள்ள வேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

இப்பத்திரிகையை கண்ணுறும் அன்பர்கள் சத் பக்தர்களின் பார்வைக்கு கொடுக்கவேணுமாய்க் கோரு கிறோம்.

இவ்வருடம் வசூலுக்குப் புறப்பட அவகாசமின்மை யால் இதற்கு பொருளுதவி செய்யும் அன்பர்கள்

சேலம் குகை வைத்தியம், செ. குருசாமி
அய்யரிடமாவது அல்லது

அம்மாப்பேட்டை பெரியதனம், சின்னசாமி
ஐயரிடமாவது அல்லது

சேலம் ஜில்லா நாமகிரிப்பேட்டை கடைத்தெருவு
சொ. அர்த்தனாரி ஐயரிடமாவது அனுப்ப
வேணுமாய்க் கோருகிறோம்.

ஸ்ரீ தேவாங்க பிரஸ், செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

# நூதன சஜ்ஜை.

புதுமாதிரி சிறந்த, அதி சௌந்தர்யமான சஜ்ஜை (லிங்கக் காய்) இதைச் சிறுவர் முதல் முதியோர் வரையில் ஆண் பெண்களனைவரும் எவ்வித வித்தியாசமு மின்றி சகலரும் அணிந்து கொள்ளத் தகுதியானது. குனிந்து, வளைந்து நிமிர்ந்து ஓடிவேலை செய்தாலும், மார்புக்கு அடிபடாமலும் அதிக கனமும், பருமனு மில்லாமலும், வெகு திறமையான வேலைப் பாடுடன் செய்யப்பட்டது. இதில் உபயோகமில்லாத விடங்களும் அழுக்கடையு மிடங்களும் பாசம் பிடிக்குமிடங்களும், கிஞ்சிற்று மிருப்பதில்லை. நூற்கயிறு சீக்கிரம் துண்டிக்காத (அறுந்து போகாத) மாதிரியாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் கீழ்மேல் பத்தவைப்புகளில்லாமலும், இருபக்கங்களிலும் அஷ்டதள (எட்டுப்பட்டை) கெட்டி குண்டுகள் அமைக்கப்பட்டிருப்பதால், இது இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு நீடித்திருக்கும். அளவிலும் சிறிய உருவமாகையால் இதின் மீது சொக்காயணிந்தாலும் மார்புக்குமேலுயர்ந்து காணப்படுவதில்லை,

சுத்த வெள்ளி சஜ்ஜை 1-க்கு விலை ரூ. 5—0—0 முதல் ரூ. 7—0—0 வரையிலும், தங்கத்தில் தேவையானால் 10 சவரன்களும் இதற்கு கூலி ரூ. 10—0—0-ம் சேதாரம் அரைவரடையும் ஆகிறது. இவைகள் தேவையுள்ளவர்கள் முன் பணமனுப்ப வேண்டும். பதில் விரும்புவோர்கள் ரிப்ளை கார்ட் எழுதவும்.

# வைத்தியாம்சம்!

56-பக்கமுள்ள புஸ்தகம், இதில் தாய்மார்களின் விஷயங்களும், சிசுக்(குழந்தை)களுக்கு வரும் நோய்களும் நோய் வரும் காலங்களும், மற்றும் பலவித தோஷங்கள், மாந்தம், கணம் இவற்றினுட் பிரிவு 8 வகைகளின் விபரங்களும் கிரந்தி இருவகையும், பாலக்கிரகதோஷங்கள் 16-பிரிவும், வைசூரியில் 14, விதமும் வாந்திபேதியில் 3 விதமும், பிளேக்வியாதியி லிருவிதமும் முடக்குமாரி, இன்புளுயன்சா சுரம் முதலான வியாதிகளின் குணங்குறிகளும் அவ்வவ்வகைக்குள்ள வாய்தா நாட்களும், பத்தியாபத்தியங்களும், அவரவர்கள் செய்துக்கொள்ளும் அவுஷதங்களும் குளிசங்களும், பூசைகளும், மந்திரங்களும் பரிகார (சிகிச்சை)களும் சில முக்கியமான மருந்துகளின் உபயோகங்களும் ஒருங்கு சேர்த்து அனைவரும் சுகமுறக்கருதி உலோகோபகாரமாகவெளிப்படுத்தியது. இப்புஸ்தகம், தேவையுள்ளவர்கள் இரண்டணா தபால் முத்திரையுடன் விலாசம் தெரிவிக்கவும்.


**வை. செ. குருசாமி ஐயர்,**

குகை, சேலம்.

மலர் 3. ரிஜிஸ்டர் நெ. M. 3157.

மாத வெளியீடு

தனிப் பிரதி விலை அணா 2.



குரு ஸ்துதி

அவாபாத் மஸ்வ ரூபாய சிவபாவ பிரதாயனே
நமோசத் குரு காதாய ஷகுஸ்தல் பிரஹ்மணே நம:

# சிவ பக்தன்.

## பவ-வருஷம் ஐப்பசி-மாதம்.

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1 | ஜன்மம் வைஷ்ணவ புராணம் ... | 97 |
| 2 | பலி பிராயச் சித்தகிரமம் ... | 100 |
| 3 | மூன்று வித குருக்கள் ... | 101 |
| 4 | அநாதி ஜங்கம லக்ஷணம் ... | 103 |
| 5 | குரு பட்டம் ... | 106 |
| 6 | பஞ்சமசாலிய ருற்பத்தி | 107 |
| 7 | இருவித சிருஷ்டிகள் ... | 108 |
| 8 | உதய தரிசனம் ... | 109 |
| 9 | பாசிவ ஜங்கம ஸ்தலம் ... | 110 |
| 10 | பிரளய காலம் ... | 111 |
| 11 | இரண்டு துவாரங்கள் ... | 116 |
| 12 | வீரசைவ (லிங்காயுத) விஜயம் ... | 117 |
| 13 | சிவபூஜா பிரபாவமும் அவசியமும் ... | 122 |
| 14 | ஷடங்க யோகம் ... | 126 |
| 15 | புண்ணியா வசனம் ... | 130 |
| 16 | சுத்தி அல்லது பிராயச்சித்தம் ... | 134 |
| 17 | ஆனந்த ஒளி ... | 135 |
| 18 | அற்புத மஹிமை ... | 136 |
| 19 | விவாஹ, தீக்ஷா, கௌதுக பந்தனம் .. | 138 |
| 20 | பஞ்ச கலசஸ்தாபனம் ... | 142 |


சேலம் செவ்வாய்ப்பேட்டை, கோல்டன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது